# கல்வியியல்

## அடிப்படை எண்ணக்கருக்கள்

பேராசிரியர் மா. செல்வராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியியல்

## அடிப்படை எண்ணக்கருக்கள்

**பேராசிரியர் மா.செல்வராஜா**
B.Ed (Hons), M.Ed, M.Phil, PGDEM (Sri Lanka), M.Ed (Mgt & Admin) Leeds, SLEAS
தலைவர்,
கல்வி பிள்ளைநலத் துறை,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
வந்தாறுமூலை, செங்கலடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Basic Concept of Education**

Author
**Prof. M. Selvarajah**

Copyright
**Author**

ISBN: 955-98684-0-3

**First Edition 01.06.2005**
**Second Edition 10.01.2009**

Pages: **132**

Layout design:
**Safeer Hafis**

Printing:
**Evergreen Printers**

**Price: 250.00**

**கல்வியியல் அடிப்படை எண்ணக்கருக்கள்**

ஆசிரியர்
**பேராசிரியர் மா.செல்வராஜா**

ISBN: 955-98684-0-3

பதிப்புரிமை:
**ஆசிரியருக்கு**

முதலாம் பதிப்பு **01.06.2005**
இரண்டாம் பதிப்பு **10.01.2009**

பக்கங்கள்: **132**

கணினி வடிவமைப்பு:
**ஸபீர் ஹாபிஸ்**

அச்சு:
**எவர்கிறீன் அச்சகம், மட்டக்களப்பு**

விலை: *250.00*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

அமரர் கந்தலிங்கம் நாகேந்திரா பிறஹ்மசந்திரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

## பேராசிரியர் சோ. சந்திரசேகரம்

கல்விப்பீடம், கொழும்பு பல்கலைக்கழகம்

கிழக்கு இலங்கைப் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் திரு மா.செல்வராஜா அவர்கள் எழுதி வெளியிட்டுள்ள இக்கல்வியியல் நூலுக்கு அணிந்துரை வழங்குவதில் மகிழ்வடைகின்றேன். திரு செல்வராஜா கல்வியியல் துறையில் பயின்று இலங்கையிலும் வெளிநாடுகளிலும் உள்ள பல பல்கலைக்கழகங்களில் இருந்து கல்வியியல் துறையில் பல பட்டங்களைப் பெற்றவர். எனக்குத் தெரிந்தவர்களில் கல்வியியல் துறையில் அதிக பட்டங்களைப் பெற்றுக் குவித்தவர் இவர் ஒருவர்தான். இவற்றோடு தேசிய கல்வி நிறுவனத்திலும், கிழக்கு இலங்கைப் பல்கலைக்கழகத்திலும் கல்வியியல் துறையில் நீண்ட காலம் பணியாற்றிய அனுபவமும் அவருக்கு உண்டு. அவர் ஏற்கனவே கல்வி முகாமைத்துவத்துறை சார்ந்த பல நூல்களையும், ஆய்வுத் தாள்களையும் எழுதி இத்துறையில் முக்கிய பணியாற்றியுள்ளார். பல பாடசாலைகளில் ஆசிரியராகவும் அதிபராகவும் கடமையாற்றியமையால், பாடசாலைகளின் கட்டமைப்பு, அவை இயங்கும் பாங்கு, அதிலுள்ள பிரச்சினைகள் என்பவை பற்றிய நிறைவான விளக்கத்தையும் அவர் கொண்டவர். இப்பின்புலத்திலிருந்து நோக்குமிடத்து, இன்றைய ஆசிரிய பயிலுநர்கள், கல்வியியல் பயிலும் மாணவர்கள் மற்றும் பாடசாலை ஆசிரியர்கள், கல்வித்துறை பதவியாளர்கள் ஆகியோருக்குப் பயன்படக்கூடிய இந்நூலை எழுதத் தேவையான தகுதிகளைத் தன்னில் வளர்த்துக் கொண்டவர் திரு செல்வராஜா அவர்கள்.

கல்வியியல் துறை இன்று பல துணைத் துறைகளாகப் பரந்து விரிந்து வளர்ச்சி பெற்றுள்ளது. இதில் கல்வித் தத்துவம் ஒரு பிரதான துறை ஆகும். கல்வி என்றால் என்ன? அதன் நோக்கங்கள் என்ன? என்னும் வினாக்களுக்குப் பல நூற்றாண்டு காலமாக விடை காண அறிஞர்கள் முயன்று வருகின்றனர். புதிய நூற்றாண்டில் கல்விச் சிந்தனையும், தத்துவமும் பல்வேறு நவீன பரிமாணங்களைக் கொண்டு விளங்குவது யாவரும் அறிந்ததே. கல்வி என்பது, விடய அறிவோடு கற்கும் முறைகளையும் அறிவுறுத்த வேண்டும். இதனால் மாணவர்கள் எதிர்காலத்தில் ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவியின்றி தாமாக, சுயமாக பல்வேறு கற்றல் சாதனங்களைப் பயன்படுத்தி அறிவை உள்வாங்க முடிவதோடு, கல்விச் செயற்பாட்டில் வாழ்நாள் முழுவதும் தாமாகவே ஈடுபடும் வாய்ப்பும் கிட்டுகின்றது. இது *21*ஆம் நூற்றாண்டுக்குரிய ஒரு நிலைப்பாடு எனினும், கல்வி பற்றிய வரலாற்று ரீதியான சிந்தனைகளையும் தத்துவங்களையும் நவீன கல்வியியல் மாணவர்கள் தவிர்ப்பதற்கு இல்லை. கல்வி பற்றிய மரபு வழிச் சிந்தனைகளின் ஒரு தருக்க ரீதியான வளர்ச்சியாகவே நவீன கல்விச் சிந்தனையைக் கொள்ள முடியும். புதிய நூற்றாண்டுக்கான நவீன சிந்தனைகள் என பலவற்றைப் பலரும் இனங்காண முற்பட்டாலும், மரபுவழிக் கல்விச் சிந்தனைகளை ஆழ்ந்து நோக்குமிடத்து அச்சிந்தனைகளில் இந்த நவீன சிந்தனைகளின் சாயல்களையும் சில அடித்தளங்களையும் கண்டு தெளிய முடியும். எடுத்துக்காட்டாக இன்று வாழ்க்கை நீடித்த கல்வியை வழங்கக் கூடிய நிறுவன அமைப்புகளைப் பல நாடுகள் ஏற்படுத்தி அக்கல்வியைத் தமது பிரதான கல்விக் கொள்கையோடு இணைத்துக் கொண்டாலும் பழைய சிந்தனை மரபில் வாழ்க்கை நீடித்த கல்வி பற்றி பல அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளதை மறுக்க முடியாது.

மா.செல்வராஜா அவர்களின் மரபுவழிக் கல்விச் சிந்தனைகளுக்கு முக்கிய இடமளித்து எழுதப்பட்டுள்ள இந்நூல், நவீன கல்விச் சிந்தனைகளைப் பயிலுவதற்கான ஒரு முன் ஆயத்தத்திற்கு உதவுகின்றது. இதிலிருந்தே நவீன கல்வி முறை பற்றிய விளக்கத்தை நாடுவது உசிதமானது என்பதோடு அதுவே முறையான விளக்கங்களுக்கு இட்டுச் செல்வது என்பது எமது தாழ்மையான கருத்து. மரபுவழிக் கல்விச் சிந்தனை தொடர்பான பல விளக்கங்களைக் கொண்டது இந்நூல். கல்வியியல் பயிலும் மாணவருக்கான ஒரு அடிப்படைக் கையேடாக விளங்கும் வகையில் இந்நூலைத் தயாரித்துள்ள செல்வராஜா அவர்களுக்கு எமது பாராட்டுக்கள்.

பேராசிரியர் சோ. சந்திரசேகரம்
கல்விப்பீடம், கொழும்பு பல்கலைக்கழகம்

*28.04.2005*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கல்வியியலைப் பட்டதாரி வகுப்பில் ஒரு பாடமாகப் பயிலும் மாணவர்கள் தமது முதலாம் கற்கைநெறியாக "கல்வியியல் அடிப்படை எண்ணக்கருக்கள்" எனும் விடயத்தைக் கற்று வருகின்றனர்.

*1999* ஆம் ஆண்டு பட்டதாரிக் கற்கைநெறிக்குக் கல்வியியல் ஒரு பாடமாக அறிமுகப்படுத்தப்பட்ட போது, அதனைக் கற்கும் மாணவர் எண்ணிக்கை ஆண்டு தோறும் அதிகரிக்கலாயிற்று. முதற் கற்கைநெறியான "கல்வியியல் அடிப்படை எண்ணக்கருக்கள்" எனும் பாடம் மூலம் மாணவர்களுக்கு கல்வியியலிலுள்ள அடிப்படை அறிவு, கல்வித் தத்துவக் கருத்துக்கள், கல்வியின் பல்வேறு வரைவிலக்கணங்கள், கல்வியின் நோக்கம், குறிக்கோள், கல்வித் தத்துவஞானிகளின் பங்களிப்பு என்பவற்றை அறிவுறுத்துவதன் மூலம் அவர்களிடையே கல்வி தொடர்பான உயரிய சிந்தனையையும் மனப்பாங்கையும் வளர்க்க முடியும். இக்கற்கைநெறிகள் பட்டப்பின் கல்வி டிப்ளோமாப் பாடநெறியின் பல அம்சங்களைக் கொண்டதாக இருக்கும்.

மாணவர்களுக்குக் கல்வியியலை அறிமுகப்படுத்திய போது காலம் சற்றுத் தாமதமாகியதால் பல விரிவுரைகளைத் தயாரித்து குறிப்புகளாகவும் வழங்க வேண்டியேற்பட்டது. அவ்வாறான குறிப்புகளே இந்நூலாக உருவெடுத்திருக்கின்றது. பல விடயங்கள் மிகவும் தெளிவாகத் தரப்பட்டுள்ளன. மாணவர்கள் இதனைக் கற்பதன் மூலம் கல்வியியல் தொடர்பான அடிப்படை விளக்கங்களைப் பெற்றுக் கொள்வர் என நம்புகின்றேன்.

இந்நூலுக்கு சிறப்பான அணிந்துரையொன்றினை வழங்கிய, கொழும்புப் பல்கலைக்கழகப் பேராசிரியர் சோ.சந்திரசேகரன் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்நூலை உரிய காலத்தில் அழகுற வடிவமைத்து அச்சிட்டு உதவியவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

*பேராசிரியர் மா.செல்வராஜா*
தலைவர், கல்வி, பிள்ளைநலத்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டாம் பதிப்புக்கான முன்னுரை

*2005*ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட இந்நூல், கல்வியியல் மாணவர்களுக்கு மிகப் பயனுள்ளதாகவும் மிகவும் தேவையானதாகவும் இருந்ததனால், அது விரைவாக விற்றுத் தீர்ந்தது. அதற்குப் பின் கல்வியியல் கற்க வந்த மாணவர்கள் இந்நூல் கிடைக்கப் பெறாமையால் சில சிரமங்களை எதிர்கொண்டனர். அதனால், இந்நூலை மீள்பதிப்பு செய்ய வேண்டுமென அவர்கள் கோரிக்கை விடுத்தனர். இது தவிர, பொதுவான கல்வித் தேடலுடையவர்களும் இந்நூலினது மீள்பதிப்பின் அவசியத்தை எனக்கு வலியுறுத்தினர். இதன் நிமித்தம், கல்வியியலை ஒரு பாடமாகப் பயிலும் பொதுக்கலைமாணி மாணவர்களுக்கும், கல்வியியலைச் சிறப்புக் கற்கையாகக் கற்கும் விசேட கல்விமாணி மாணவர்களுக்கும் உதவும் நோக்கில், 'கல்வியியல் அடிப்படை எண்ணக்கருக்கள்' எனும் இந்நூல் மீள்பதிப்பு செய்யப்படுகின்றது. கல்வித் தேடலுடைய ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் அனைவருக்கும் இம்மீள்பதிப்பு மகிழ்ச்சியளிக்கும் என நம்புகிறேன்.

இந்நூலை மீள்பதிப்பு செய்வதில் எனக்குப் பக்கபலமாக இருந்த அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

*பேராசிரியர் மா.செல்வராஜா*
தலைவர், கல்வி, பிள்ளைநலத்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


1. கல்வியின் வரைவிலக்கணம் ........ 11

2. கல்வியின் நோக்கம் ........ 18

3. கல்வியில் தத்துவ அடிப்படை ........ 32

4. ரூசோவின் கல்வித் தத்துவம் ........ 38

5. கல்வியில் இயற்கைவாதம் ........ 46

6. கல்வியில் பயன்பாட்டுவாதம் ........ 53

7. கல்வியில் இலட்சியவாதம் ........ 63

8. கல்வியில் ஜோன் டியூவியின் சமூகச் சிந்தனைகள் ........ 72

9. கல்வியில் உளவியல் அடிப்படை ........ 81

10. கல்வியில் முன்பிள்ளைப் பருவம் ........ 105

11. ஜோன் டியூவியும் சுவாமி விபுலானந்தரும் ........ 119

சொல்லடைவு ........ 128

துணை நூல்கள் ........ 131


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1

## கல்வியின் வரைவிலக்கணம்

கல்வி என்னும் சொல் பரந்த பொருளுடையது. 'கல்' என்ற வினை அடியோடு 'வி' என்னும் தொழிற்பெயர் விகுதி சேர்ந்து கல்வி ஆகிறது. கல்வி, கல்லுதல், கற்றல் என்பனவாகவும் அதைக் குறிப்பிடலாம். கல் என்பதனைக் கல்லுதல் எனக் கொண்டால், 'உள்ளே இருப்பதனை அகழ்ந்து வெளிக்கொணர்க' என்ற கருத்து அமையும். ஆகவே, 'குழந்தையின் உள்ளே இருக்கும் அறிவாற்றல் முதலியவற்றை மலரச் செய்தல் கல்வியாகும்' எனக் கொள்ளலாம். இக்கருத்து நவீன கல்விச் சிந்தனையாளர்களின் கருத்துக்கும் ஏற்புடையதாகும். ஆயினும், கல்விக்கு வரைவிலக்கணம் கூறுவது மிக இலகுவானதல்ல. முழுமையான வாழ்வின் பல்வேறு அம்சங்களையும் உள்ளடக்குவதாக கல்வி விரிந்த பொருளுடையது எனக் கருதுவது தவறாகாது. சோக்கிரடீஸ் தொடக்கம் ஜோன் டியூவி வரையான மேனாட்டுச் சிந்தனையாளர்களும் யக்ஞவல்கியர் தொடக்கம் மகாத்மா காந்தி வரையிலான கீழைத்தேசச் சிந்தனையாளர்களும் தத்தமது வாழ்க்கைத் தத்துவங்களின் அடிப்படையில் கல்வியை வரையறை செய்துள்ளனர். அவர்களது சிந்தனைகளிலிருந்து கல்வி பற்றிய பல்வேறு வரைவிலக்கணங்களும் எண்ணக்கருக்களும் தோன்றியுள்ளன.

குருடன் யானையைக் கண்ட கதைபோல பல்வேறு துறை சார்ந்தவர்களும் (தாவரவியலாளன், மதபோதகன், உளவியலாளன், தத்துவஞானி, அரசியலறிஞன், ஆசிரியன், ஓவியன் முதலியோர்) தத்தமது இயல்புகளுக்கேற்ப தமக்கேயுரிய சொந்த வரையறைகளைக் கல்வியைப் பொறுத்துக் கொண்டுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி பற்றிய பல்வேறு விளக்கங்களும் வரைவிலக்கணங்களும் இன்று காணப்படுகின்றன. அவற்றுக்கான காரணங்களை நாம் இங்கு சிந்தனைக்கெடுக்கலாம். அவை;

### 1. மனித ஆளுமையின் சிக்கலான தன்மை

கல்வியின் பிரதான நோக்கம் மனிதனின் ஆளுமை விருத்தியாகும். இங்கே ஆளுமையானது மிகவும் சிக்கலான தன்மையுடையதும் பல்வேறு அம்சங்களைக் கொண்டதுமாகும் என்பதை உணர்தல் வேண்டும். எடுத்துக்காட்டாக சமூகம், அறிவு, பௌதீகம், ஒழுக்கம், ஆத்மீகம், அழகியல் முதலியனவாக அவற்றைக் குறிப்பிடலாம். இவற்றில் சிலவற்றின் மீதான அழுத்தமானது கல்வி பற்றிய பல்வேறு விதமான வரைவிலக்கணங்களுக்கும் வழிவகுக்கிறது. ஆத்மீகவாதிகள், 'தன்னை உணர்தலே கல்வி' எனக் கல்விக்கு வரைவிலக்கணம் கூறுவர். ஒழுக்கவியலாளரோ 'பண்பு விருத்திக்கு வழிசெய்வதே கல்வி' என வரைவிலக்கணம் தருவர். எனவே, மனித ஆளுமையின் சிக்கலான தன்மை, கல்வி பற்றிய பல்வேறு வரைவிலக்கணங்களுக்கும் காரணமாகிறது என்பதை உணரலாம்.

### 2. மனிதச் சூழலின் சிக்கலான தன்மை

'ஒரு மனிதன், தனது சூழலுக்கேற்ப இசைவாக்கம் பெறுவதற்கான செயன்முறையே கல்வி' எனக் கொள்வோம். இங்கே சூழலானது நாட்டுக்கு நாடு வேறுபடுவது என்பதும், சூழலும் சமூகம், பௌதீகம், கலாசாரம், பொருளாதாரம் எனப் பல்வேறு அம்சங்களைக் கொண்டது என்பதும் கருத்தில் எடுக்கப்படல் வேண்டும். இந்த வகையில் ஒன்றையோ, பலவற்றையோ கருத்திலெடுத்தே கல்விச் சிந்தனையாளர்களும் கல்விக்கு வரைவிலக்கணம் கூறியுள்ளனர். ஆரம்ப காலத்து மனித வாழ்க்கை சிக்கலற்று இலகுவானதாகவும் இருந்தது. அக்காலத்தில், தொழில் வேறு, அதற்கான கல்வி வேறு என்று இருக்கவில்லை. ஆனால், தொழிற் கல்விக்கு அவ்வளவு அழுத்தம் கொடுக்கப்படவில்லை. பொருளாதாரச் சூழல் மாற்றமடைந்த போது, கல்விக்கான எண்ணக்கருவிலும் மாற்றம் ஏற்பட்டது. தற்காலப் பொருளியலாளர், 'பொருளாதார ரீதியில், சமூகத்திற்கான ஆக்கத் திறனுள்ள அங்கத்தவனாக மனிதனை மாற்றும் செயல் முறையே கல்வி' எனக் கூறுகின்றனர். எனவே, மனிதச் சூழலின் சிக்கலான தன்மையும் கல்வி பற்றிய வரைவிலக்கணத்துக்கு ஏதுவாகிறது எனக் கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 3. பல்வேறு தத்துவங்கள்

வாழ்க்கை தொடர்பாகப் பல்வேறு தத்துவங்கள் உள்ளன. வாழ்க்கையை நுணுகி ஆராய்ந்த தத்துவஞானிகள் தத்தமது தத்துவங்களுக்கு ஏற்பக் கல்விக்கு வரைவிலக்கணம் வகுத்தனர். வாழ்க்கையின் நிலையாமையை ஆராய்ந்த புத்தர் 'ஆசையே துக்கத்தின் காரணம்' எனக் கண்டார். ஆசையைத் துறத்தலே துக்க நீக்கம். அதுவே பரிநிர்வாணத்துக்கான வழி. எனவே பரிநிர்வாணத்துக்கான செயற்பாடே கல்வியாக வேண்டும் என்ற கருத்துப்பட அவரது போதனைகள் அமைந்தன. நமது பாரம்பரியச் சான்றோர்கள் வாழ்க்கையை நுணுகி ஆராய்ந்து 'அறம், பொருள், இன்பம், வீடடைதலுக்கான செயன்முறையே கல்வி' என்றனர். திருவள்ளுவர் கூறும் கல்வி பற்றிய கருத்துக்களைக் கொண்டே அவரை ஒரு தத்துவஞானியாகக் கொள்ளலாம். 'கற்றாங்கொழுகுதலே கல்வி' என்பது அவரது கல்வி பற்றிய வரையறை எனலாம். எனவே, வாழ்க்கையின் பல்வேறு தத்துவங்கள் கல்விக்கு வரையறை வகுக்கின்றன என்பதை அறியலாம்.

### 4. கல்விக் கோட்பாடுகளும் அவற்றின் பிரயோகங்களும்

கற்பித்தற் செயற்பாடுகள் மீது செல்வாக்குச் செலுத்திய பல்வேறு உளவியற் கோட்பாடுகள் உள்ளன. சில ஆரம்பகால உளவியலாளர்கள், 'பிள்ளையின் மனம் தெளிவான கரும்பலகை; அதன் மீது எதனையும் எழுதலாம்' என்று கருதினர். சில உளவியலாளர்கள், 'பிள்ளை களிமண் போன்றது, அதைப் பயன்படுத்தி எவ்வாறான வடிவத்திலும் அமைக்கலாம்' எனக் கருதினர். சிலர், 'குழந்தையின் மனம் வெற்றுக்குடம் போன்றது; அதில் அறிவை அள்ளி, ஊற்றி நிறைக்கலாம்' எனக் கருதினர். வேறு சிலர், 'மனப்பாடம் செய்வித்தலே கல்வி' என்றனர். இன்னும் சிலர், 'தண்டனையே கல்விக்கு வழி' என்றனர். இது, 'அடியாத மாடு படியாது' என்ற கருத்துக்கும் வழியமைத்தது. ஆனால், பின்வந்த கல்விக் கோட்பாடுகள் நவீன கல்வி வரைவிலக்கணத்துக்கு வழியமைத்தன. அவற்றின்படி, 'வாழ்வாங்கு வாழ்வதற்கான செயற்பாடே கல்வி', 'நல்ல பிரசைகளை உருவாக்குவதே கல்வி', 'அறிவு, திறன், மனப்பாங்குகளில் நிரந்தர மாற்றம் தரும் செயற்பாடே கல்வி' முதலான வரைவிலக்கணங்கள் ஏற்பட்டன. எனவே, கல்விக் கோட்பாடுகளும் அவற்றின் பிரயோகமும் கல்விக்கான வரைவிலக்கணங்களுக்கும் காரணமாயின எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வி பற்றிய சில வரைவிலக்கணங்கள்

அடுத்து, வரைவிலக்கணங்களின் வகைகள் சிலவற்றை நோக்கலாம்:

### 1. உள்ளாற்றலை அழுத்தியுரைக்கும் வரைவிலக்கணங்கள்

உள்ளாற்றலை அழுத்தியுரைக்கும் வரைவிலக்கணக்காரர் சிலர் உள்ளனர். அவர்கள் உள்ளாற்றலுக்கே முக்கியத்துவம் கொடுத்தனர். அவர்கள் அரவிந்தர், மகாத்மா காந்தி, சங்கராச்சாரியார், தாகூர், விவேகானந்தர் என்போராவர். இவர்கள் கீழைத்தேயக் கல்வித் தத்துவஞானிகளாவர். இந்த வகைத் தத்துவஞானிகளுள் அரிஸ்டோட்டில், பெஸ்டலொசி, பிளேட்டோ என்பவர்களும் அடங்குவர். இவர்கள் மேலைத்தேயக் கல்வித் தத்துவஞானியராவர்.

அரவிந்தர், 'ஆன்மாவுக்குள் இருக்கும் ஆற்றலை வெளிக்கொணர உதவுவதே கல்வி' என வரைவிலக்கணம் தந்தார். 'பிள்ளையினுள்ளே அடங்கியுள்ள அனைத்து ஆற்றலையும் வெளிக்கொணருவதே கல்வி' என்பது மகாத்மா காந்தியின் வரைவிலக்கணமாகும். சங்கரர், 'கல்வி என்பது தன்னை உணர்தல்' என்றார். 'மாயையை நீக்கி, உண்மை ஒளியைக் கண்டறிய உதவுவதே கல்வி' எனத் தாகூர் கூறினார். விவேகானந்தரோ, 'மனிதனுள் ஏற்கனவே அமைந்துள்ள தெய்வீகப் பூரணத்துவத்தை வெளிக்கொணர்வதே கல்வி' எனக் குறிப்பிட்டார்.

சோக்கிரடீஸ் 'உறுதியான உடலில் உறுதியான மனத்தைத் தோற்றுவிப்பதே கல்வி' எனக் குறிப்பிட்டார். சோக்கிரடீஸின் கூற்றுப்படி, கல்வியானது உறுதியான உடலை விருத்தியாக்க வேண்டும்; அத்தோடு உறுதியான மனத்தையும் தோற்றுவிக்க வேண்டும். அதாவது, பிள்ளையின் உடலிலும் உள்ளத்திலும் ஆற்றலை விருத்தியாக்க வேண்டும். 'அறிவு, உணர்வு, ஒழுக்கம், ஆன்மீகத்திறன் என்பவற்றை விருத்தியாக்குதல்' என்பது அவரின் கருத்தாகும்.

சேர்.பேர்சிநன் என்பவரின் கருத்துப்படி, 'தனித்தன்மையின் பூரணவிருத்தியே கல்வியாகும்'. ஒருவர் மானிட வாழ்க்கைக்கு அவராலான ஆகக்கூடிய தனித்துவமான பங்களிப்பினை ஆற்ற வேண்டும் என்பதே அவரது கருத்தாகும். ஒவ்வொரு தனியாளும் பல்வேறு அம்சங்களையும் ஆற்றல்களையும் உள்ளடக்கியவன். இவை யாவற்றையும் விருத்தியாக்குவதாகக் கல்வி இருக்க வேண்டும். ஒவ்வொரு தனியாளும் தனித்துவமானவன் என தனியாள் வேறுபாட்டுக்கு இவர் அழுத்தம் கொடுத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெஸ்டலொசி, 'இயற்கையானதும் இசைவாக்கமானதுமான அபிவிருத்திக்கு மனிதனின் உள்ளாற்றலை இட்டுச் செல்வதே கல்வி' என வரைவிலக்கணம் கூறினார். மனிதனிடம் உடன்பிறந்த சில ஆற்றல்கள் உள்ளன. கல்வியின் நோக்கம் இவற்றை விருத்தியாக்குவதே. கல்விச் செயற்பாட்டில் பிள்ளையின் தன்மைக்கும் தேவைக்கும் உரிய இடம் கொடுக்கப்படல் வேண்டும் என்பதை இவர் வலியுறுத்தினார்.

பிளேட்டோ, 'கல்வியானது உடலிலும் ஆன்மாவிலும் எல்லா நன்மைகளையும் விருத்தியாக்க வேண்டும்; மனிதனது ஆற்றல் முழுவதையும் விருத்தியாக்க வேண்டும்' எனக் குறிப்பிட்டார்.

இவ்வாறு மேலே குறிப்பிட்ட கல்வித் தத்துவஞானிகள் கல்விக்கு வரைவிலக்கணம் கூறுகையில் உள்ளாற்றலை வலியுறுத்தியுள்ளனர்.

### 2. சமூகச் சூழல் அம்சங்களை அழுத்தியுரைக்கும் வரைவிலக்கணங்கள்

கல்வியைப் பொறுத்து சமூகச் சூழலுக்கு முக்கியத்துவம் கொடுத்தவர்களுள் பிரதானமானவர் ஜோன் டியூவி ஆவார். 'ஒருவனது சூழலைப் பயன்படுத்த உதவுவதும், அவனது பொறுப்புக்களை நிறைவு செய்ய உதவுவதுமான ஆற்றல்களை விருத்தியாக்குவதே கல்வியாகும்' என்பது இவரது கருத்தாகும். கல்வி சமூகத்திலும், சமூகம் கல்வியிலும் தங்கியிருப்பதோடு, கல்வியால் சமூகம் மறுமலர்ச்சி கண்டு விருத்திபெற வேண்டும் என்பது இவரது கருத்தாகும்.

'கல்வியென்பது, முதியோர் இளையோர் மீது செலுத்தும் செல்வாக்கு' என றெட்டின் கூறுகிறார். இச்செல்வாக்கானது போதனை, ஒழுக்கம், அமைதியான அபிவிருத்தி என்பனவாக அமையும். இவ்விருத்தி உடல், அறிவு, அழகியல், சமூகம், ஆத்மீகம் என்பவற்றில் ஏற்பட வேண்டும். வாழ்வின் இறுதி நோக்கம் இறைவனுடன் கலத்தலாகும். பிள்ளையின் முழு ஆற்றலும் விருத்தியாக்கப்படல் மூலமே இந்நோக்கம் அடையப்பெறும். பிள்ளையின் இவ்வாற்றல்களின் விருத்தியானது, தனிமனிதனதும் சமூகத்தினதும் நன்மைக்காக ஏற்படல் வேண்டும். இவை றெட்டின் முக்கிய கல்விக் கருத்துக்களாகும்.

தொம்சன் என்பவர் கல்வி பற்றிக் குறிப்பிடுகையில், 'ஒரு தனியாளின் வாழ்க்கையில், நடத்தை, சிந்தனை, மனப்பாங்கு என்பனவற்றில் நிரந்தரமாக மாற்றத்தை ஏற்படுத்தும் சூழற் செல்வாக்கே கல்வியாகும்' என்கிறார். சூழலானது பௌதீகம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகம், கலாசாரம் எனப் பல்வேறு அம்சங்களை ஒருங்கே கொண்டுள்ளது. பிள்ளை சமூகத்தில் இசைவாக்கம் பெறுவதையே கல்வி என்பது குறிக்கும் எனத் தொம்சன் கருதுகிறார்.

மகாத்மா காந்தி, 'கல்வியென்பது உள்ளிருந்து வெளியே கொண்டு வருவதன்றி, பிள்ளையினுள்ளே செலுத்துவதன்று' எனத் தெளிவாக உணர்த்துகிறார். பிள்ளையின் மூளையுள்ளே நிரப்புவது கல்வியன்று என்பதைக் காந்தியடிகள் தெளிவாக்குகிறார். எழுத்தறிவு என்பது கல்வியின் தொடக்கமும் முடிவுமன்று. மனிதனின் கல்வியெனும் செயற்பாட்டில் அது ஓர் அம்சம் மாத்திரமே. எழுத்தறிவு தன்னளவில் கல்வியன்று. கல்வியென்பது சமூகத்தின் நன்மையின் பொருட்டு பிள்ளையினுள்ளே அடங்கியுள்ள முழுத்திறமையையும் வெளிக்கொணர்வதாகும். இவ்வாறு கருதிய மகாத்மா காந்தி தொழிலடிப்படையில் கல்வியை வலியுறுத்தினார். 'வார்தா' கல்வித்திட்டம் மூலம் அதனைச் செயற்படுத்திக் காட்டினார். காந்தியின் கல்வித் தத்துவம், இந்த வகையில், சமூக பொருளாதார நிறைவை அடிப்படையாகக் கொண்டிருந்தது.

இங்கு காந்தியின் கல்விக் கருத்துக்கள் பற்றிச் சற்று விரிவாக நோக்குதல் பயனுடையது.

'இயற்கை குழந்தைகளையும், இளைஞர்களையும் அதிக ஆற்றலுடன் உருவாக்குகிறது. இளமையின் ஊற்றும் மகிழ்ச்சியும் ஆற்றலும் அவர்களிடம் போதிய அளவு உள்ளன. விடயங்களை அறியும் ஆற்றலை அவர்களுக்கு இறைவன் போதியளவு அளித்துள்ளான்; கல்வியின் பணி இவற்றைப் பயன்படுத்தலேயாகும். அடக்கி அழிப்பது பாவமாகும். இவ்வாற்றல்கள் சரியாகப் பயன்படுத்தப்படவும் விருத்தியாக்கப்படவும் வேண்டும். மனிதம் தனியே அறிவு சார்ந்ததோ, மிருக உடலோ அன்று, தனியே மனமோ அல்லது ஆத்மாவோ அன்று. அனைத்தையும் அடக்கியது என்பதன் பொருள் இதுவேயாகும். இவ்வம்சங்களின் முறையான ஒத்த இணைப்பானது முழு மனிதனை உருவாக்குவதற்கு அவசியமானது. உண்மையான கல்வியின் பொருள் உளம், உடல், ஆன்மா என்பனவற்றின் ஒன்றிணைப்பாகும். உண்மைக் கல்வியானது ஆற்றல்களை வெளிக்கொணர்வதாக இருக்க வேண்டும்; அத்தோடு பிள்ளையின் ஆத்மீக, அறிவுசார், பௌதீக வளங்களையும் ஊக்குவிப்பதாக அமைய வேண்டும். இவற்றில் ஒன்றுக்கு மட்டும் அழுத்தம் கொடுப்பது முரணானதாகும்'

கல்வியானது உடல், உள, ஆன்மீகத் தேவைகளை நிவர்த்தி செய்ய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவரது இதயத்தைத் தொடுதல் மூலமே மிகச் சிறந்ததை அவர்களிடமிருந்து வெளிக்கொணர முடியும். இவ்வாறான கல்விக் கருத்துக்கள் மூலம் மகாத்மா காந்தி நல்லதொரு சமூகத்தை உண்மையாகவே உருவாக்க முயன்றார்.

இதுவரை நாம் அணுகிய பல்வேறு கருத்துக்கள் மூலமும் கல்விக்கான வரைவிலக்கணத்தைக் கட்டியெழுப்ப முடியும். தனிமனிதர் பலரால் உருவாக்கப்பட்ட சமூகத்தில் நல்ல பிரசைகளை ஆக்கும் நோக்கம் கொண்ட கல்வி, சமூக பொருளாதார வளத்தோடு கூடிய, வாழ்வாங்கு வாழக்கூடிய, அறம் பொருள் இன்பம் கண்டு வீடுபேறு அடையக்கூடிய அனைத்துத் தேவைகளையும் நிறைவேற்றுமானால், அதுவே இன்றைய தேவைக்கான கல்வியாகும். அதனால் நிரந்தர நடத்தை மாற்றம் ஏற்படும். இங்கு பொன்னுலகம் பொலியும்.

எனவே, 'ஒரு குழந்தை உடல், உள, சமூக, மனவெழுச்சி, ஒழுக்க, மொழி விருத்திகளுற்று, சமூகத்தில் வாழ்வாங்கு வாழக்கூடியதான சமூக இசைவாக்கமுற்று, ஆளுமைக் கூறுகள் அனைத்தையும் பெற்று நாட்டின் நற்பிரசையாகி, அறம், பொருள், இன்பமுற்று, தனக்கும் சமூகத்துக்குமாக வாழ்ந்து, இறுதியில் ஆன்ம ஈடேற்றம் அடைவதற்கான அனைத்தையும் பூர்த்தியாக்குவதற்கான செயற்பாடே கல்வியாகும்'. இதையே ஒருவாறு பொருத்தமான, பூரணமான வரைவிலக்கணமாகக் கருதலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2

## கல்வியின் நோக்கம்

**நோ**க்கம் இல்லாத செயற்பாடு எதுவுமேயில்லை. இந்த வகையில் கல்விக்கும் கல்வி என்ற எண்ணக்கரு தோன்றிய ஆதிகாலத்திலிருந்தே நோக்கங்கள் உணரப் பெற்றன. ஆரம்ப காலத்து கல்வித் தத்துவஞானிகள், கல்வியியலாளர்கள் முதற்கொண்டு இன்றையக் கல்விச் சேவையாளர்கள் வரை கல்வியின் நோக்கங்களை அறிந்தே செயற்படுகின்றனர். நோக்கங்களை அறிய வேண்டிய தேவையுடையவர்களாயிருக் கின்றனர். நோக்கங்களின் அவசியம் கல்விசார்பான ஆய்வுகளின் மூலம் மேலும் உணரப்பட்டு வருகிறது. காலத்துக்குக் காலம் சமூக நியமங்கள் மாற்றமுற்றதாலும், பொருளாதார, சமூக, அரசியல், சமயப் புரட்சிகள் ஏற்பட்டதாலும் கல்வியின் நோக்கங்கள் மாற்றமுற்றன; பல்வகைப்பட்டன; வலிமை பெற்றன. இதனால் கல்வியின் நோக்கங்களை அறிய வேண்டிய தேவை கல்விப் பணியாளர்களுக்கும், மாணவர்களுக்கும், ஏன் சாதாரண மக்களுக்கும் இன்று வலியுறுத்தப்படுகிறது. இதன் அடிப்படையில் கல்வியின் நோக்கங்கள் பற்றிச் சிந்திக்கலாம்.

### சூழ்நிலையும் கல்வியும்

'கல்வியியலாளன் அனைத்துக் கல்விக் கொள்கைகளையும் பூரணமாகக் கற்றிருந்தாலும், அவன் காலம், இடம் என்பவற்றிலிருந்து தப்ப முடியாது' எனக் கல்வியியலாளர் 'இஸாக்' என்பவர் குறிப்பிடுகிறார். காலமும் இடமும்தான் சூழ்நிலையை உருவாக்குகிறது. சூழ்நிலை இல்லாமல் கல்வி நோக்கங்கள் உருவாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாது. கல்வி நோக்கங்கள் வாழ்க்கைச் சூழ்நிலையுடன் தொடர்புடையன. கல்வி, சமூகத்தின் உண்மையான சூழ்நிலைக்கும் பொருத்தமானதாக இருக்க வேண்டும். கல்வி நோக்கங்கள் மக்களின் சமூக, பொருளாதாரத் தேவைகளை நிறைவு செய்ய வேண்டும். தேவைகள் காலத்துக்கும், இடத்துக்கும் ஏற்பத் தோன்றுபவை. பிள்ளையின் உடல், உள நலம், அதன் தேவைகள், கல்வி நோக்கங்களின் தன்மை, கல்விச் செயற்பாடுகள் என்பன காலத்தின் தேவையைப் பிரதிபலிப்பனவாகும். எனவே, காலமும் இடமும் சார்ந்த சூழ்நிலைகளுக்கேற்றனவாகவே கல்வி நோக்கங்கள் அமைகின்றன.

## சமூக வாழ்க்கையும் கல்வியும்

சமூகத்தால், சமூகத்துக்காக, சமூகத்துள் நிறுவப்பட்டு, சமூகத் தேவைகளை நிறைவாக்க இயங்குபவையே கல்வி நிறுவனங்களாகும். அக்கல்வி நிறுவனங்கள் கல்விக்கான சமூக நிறுவனங்களாக இருப்பதால், அவை வழங்க வேண்டிய கல்விக்கான நோக்கங்கள் சமூக வாழ்க்கையைப் புறம் தள்ள முடியாது, சமூக வாழ்க்கையோடு தொடர்புடையனவாக இருக்கின்றன. எனவே, ஒழுங்கமைக்கப்பட்ட கல்வி முறையும் சமூகத்தின் தேவைக்குப் பொருந்துவதாக அமைய வேண்டும். சமூக நிறுவனமான பாடசாலைக்கு மூலப் பொருளான மாணவரை வழங்குவது சமூகமாகும். முடிவுப் பொருளான கற்றறிந்த மாணவரைப் பொறுப்பேற்கத் தயாராயிருப்பதும் சமூகமாகும். மேலும் மாணவனும் சமூகத்தின் ஓர் அங்கத்தவனாவான். அவனைப் பயனுள்ள ஒரு சமூக அங்கத்தவனாக உருவாக்கி, திரும்பச் சமூகத்திடமே ஒப்படைக்க வேண்டிய பொறுப்பு கல்விக்குள்ளது. எனவே, சமூக வாழ்க்கைக்கேற்ப பிரசையாக மாணவனை மாற்ற வேண்டிய பொறுப்பும் கல்வியைச் சார்ந்ததாகிறது. அதனால் சமூக வாழ்க்கைக்கு ஏற்றதாக கல்வி நோக்கங்கள் அமைய வேண்டும்.

சமூகத்தைப் பொறுத்து பௌதீக, பொருளாதார தேவைகள் காலத்துக்குக் காலம், இடத்துக்கிடம் நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றன. அதனால், கல்வி முறைகளும், பாடத்திட்டங்களும், கற்றல் கற்பித்தல் முறைகளும், நுட்பங்களும் காலத்துக்குக் காலம், இடத்துக்கிடம் மாறியேயாக வேண்டும். எல்லாக் காலத்திற்கும், எல்லா இடத்திற்கும் பொருத்தமானதும், பெறுமதியானதும், நம்பகமானதுமான கல்வி நோக்கம் என்பது எக்காலத்திலும் எவ்விடத்திலும் சாத்தியமில்லை. எனவே, சமூக வாழ்க்கைக்கு உகந்ததான கல்வி நோக்கங்கள் அவசியமாகின்றன. கல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கங்களுக்கு சமூக வாழ்க்கை அடிப்படையாகிறது. சமூக வாழ்க்கையிலிருந்தே கல்வி நோக்கங்கள் உற்பத்தியாகின்றன.

## பண்டைக்காலமும் கல்வியும்

மனிதன் தோன்றிய ஆதிகாலத்தில், கல்வி என்ற எண்ணக்கருவே இருந்திருக்க முடியாது. மனிதன் மிருக நிலையில் இருந்தான். ஒரேயொரு தேவை உணவுத் தேவையாகவேயிருந்தது. இயற்கையில் கிடைத்தவற்றையே உண்டான்; உணவுக்காக அலைந்து திரிந்தான்; விலங்குகள், பறவைகளை வேட்டையாடினான். காலகதியில், ஒரே இடத்திலிருந்து விவசாயத்தில் ஈடுபட நேர்ந்ததும், மொழி கண்டுபிடிக்கப்பட்டதும் - அதன் பயனாக நேர்ந்த அனுபவங்களும் கல்வி என்ற எண்ணக்கரு தோன்றக் காரணமாயின. மொழி, கல்வி ஊடகமாயிற்று; கல்வி தோன்றிற்று. அந்த ஆரம்ப நாளில் குறைந்த எண்ணிக்கையானவர்களே ஒவ்வொரு சமூகத்திலும் இருந்தனர். தேவைகள் தன்னிறைவானவையாகவும் குறைவாகவும் இருந்தன. உணவு, உற்பத்தி, நுகர்வு, பகிர்வு, பரிமாற்றம் என எல்லாம் சிக்கலற்று இலகுவாயிருந்தன. அந்த இலகுவான சமூக வாழ்க்கைக்கு ஏற்ப கல்வி நோக்கமும் இலகுவாகவும் குறைந்த அளவிலும் அமைந்தது. கல்வி நோக்கம், எண், எழுத்து, வாசிப்பு என்ற அளவிலேயே அமைந்தது. எல்லோருக்கும் கல்வி கிடைக்கவில்லை. அரச குலத்தவரும், செல்வந்தருமே கல்வியை நாடினர். பெரும்பாலான பொதுமக்கள் கல்வியற்றவர்களாகவே இருந்தனர். ஆகவே, அன்றைய சமூக நிலைக்கேற்ப கல்வி நோக்கங்கள் அமைந்தன. ஆனால் இன்றோ நிலைமை வேறு. எல்லோருக்கும் கல்வி, வாழ்நாள் முழுக்கக் கல்வி, நவீன கல்வி - கல்வி பற்றிய பல்வேறு எண்ணக்கருக்கள், விஞ்ஞான வளர்ச்சி, பல்வேறு நவீன வசதிகள், தேவைகள், பூகோள மயமாக்கம், அதனால் பண்டைய சமூகத்தில் இல்லாத இன்றைய தேவைகள் காரணமாக - கல்வி நோக்கங்கள் பல்வேறுபட்டு அமைவதைக் காண்கிறோம்.

## கல்வியில் தனியாளும் சமூகமும்

'தனி மரம் தோப்பாகாது' என்ற முதுமொழி தனிமனிதனையும் சமூகத்தையும் குறிப்பதாக அமைகிறது. இங்கே தனிமனிதனின் முக்கியத்துவத்தை நாம் உணரலாம். கல்வியுளவியல், தனியாள் வேறுபாட்டுக்குத் தனியிடம் அளிக்கிறது. தனிமனிதன் இல்லையென்றால் சமூகம் இல்லை. இது இன்றைய நிலை. இன்று ஒரு சிறந்த தனிமனிதனை உருவாக்குதல் மூலம் அவ்வாறான தனிமனிதர்கள் நிறைந்த நற்சமூகத்தை உருவாக்குவதைக் கல்வி நோக்கமாகக் கொள்கிறோம். ஆனால், அன்றைய நிலை இவ்வாறாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கவில்லை. அரசன் ஒரு தனிமனிதன். அவனே அறுபத்து நான்கு கலைகளும் கற்றான். ஏனையவர்கள் அவ்வாறு கற்க வாய்ப்பிருக்கவில்லை. இவற்றை நோக்கினால், காலமாற்றத்திற்கேற்ப கல்வி நோக்கங்கள் மாறும் என்பதை உணரலாம். நாட்டின் அரசியல், சமூக, பொருளாதார நிலைகளுக்கேற்பக் கல்வி நோக்கங்களும் மாறுகின்றன. ஆனால் ஒரு காலகட்டத்தின் கல்வி நோக்கங்கள், கல்விப் பிரச்சினைகள், வேறொரு காலகட்டத்துக்கும் சிலவேளை பொருந்தக்கூடும். உதாரணமாக, கிரேக்கம், உரோமம் போன்ற நாடுகளில் அன்றிருந்த கல்விப் பிரச்சினைகள் சில இன்றும் சில நாடுகளில் காணப்படுகின்றன - பொருந்துகின்றன.

இந்த இடத்தில் கல்வியில் தனியாள் முக்கியமா? சமூகம் முக்கியமா? என்ற கேள்வி எழுகின்றது. 'அன்று-முடியாட்சிக் காலத்தில் தனியாள் முக்கியத்துவம் பெற்றான். இன்றோ தனியாட்களாலான சமூகம் கல்வியில் முக்கியத்துவம் பெறுகிறது' என்ற விடையை நாம் சுலபமாகக் கூறிவிட முடியும். ஆனாலும் கல்வி நோக்கங்களைப் பொறுத்து, தனியாளை முக்கியத்துவப்படுத்தும் கருத்துக்களும், சமூகத்தை முக்கியத்துவப்படுத்தும் கருத்துக்களும் பரவலாகக் கிடைக்கின்றன. அவை பற்றியும் நாம் கவனத்தைத் திருப்பலாம்.

### கல்வியில் தனியாள் நோக்கம்

கல்வியில் தனியாள் நோக்கத்தை வலியுறுத்தும் சில கருத்துக்களைக் காண்போம்.

'தனி மனிதனின் மனத்தையும் ஆத்மாவையும் முதிர்ச்சி யடையச் செய்தலும், ஒழுக்க வழிநடத்தலும் கல்வியாகும்'.

'கற்பித்தலில் தனியாள் வேறுபாட்டுக்கு முக்கியத்துவமளித்தல் வேண்டும்'

'கல்வியின் நோக்கமானது தனிமனிதனை விருத்தியாக்குவதே'

'தனியாளிடமுள்ள திறமைகளை உரிய மட்டத்திற்கு விருத்தியாக்குவதே கல்வி'

இக்கருத்துக்களைத் தொகுத்து நோக்கினால், தனிமனிதனுக்குக் கொடுக்கும் சிறப்பினை அவதானிக்கலாம். நல்ல ஆளுமை மிக்க, விவேகம் மிக்க, சுயமாக, சுதந்திரம் மிக்க தனிமனிதனை உருவாக்குவதே கல்வியின் நோக்கமாகும் என்பது வலியுறுத்தப்படக் காண்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் சில கருத்துக்களைப் பார்ப்போம்.

"மனிதனை சுயமானவனாகவும், சுயநலமற்றவனாகவும் ஆக்க உதவுவதாகக் கல்வி அமைய வேண்டும்" - இருக்கு வேதம்

"கல்வி, மனிதனை விருத்தியாக்கும் ஊடகம்... பிள்ளையின் உள்ளேயிருந்து வெளிக்கொணர வேண்டிய மிகச் சிறந்த அனைத்தையும் வெளிக்கொணர்வதே கல்வி" - மகாத்மா காந்தி

"உறுதியான உடலில் உறுதியான மனத்தை ஏற்படுத்துவதே கல்வி" - அரிஸ்டோட்டில்

"கல்வியானது மனிதனது ஆற்றலின் இயற்கையான அமைதியான முன்னேற்றமான அபிவிருத்தியாகும்" - பெஸ்டலோசி

"சமூகம் தனியாளுக்காக இருப்புக் கொண்டுள்ளது. தனியாள் சமூகத்துக்காக அல்ல. தனியாளுக்காகவே சமூகம். தனியாளுக்குக் கல்வி கொடுக்கப்படுவது அவனை அழிவிலிருந்து காப்பதற்காகவேயாகும். தனியாள்தான் எல்லாக் கல்வியியற் பேறுகளுக்கும், செயற்பாடுகளுக்கும் மையமாக உள்ளான்" - பி.தொம்சன் (தாவரவியலாளர்)

"இயற்கையிலிருந்து தோன்றுவன அனைத்தும் நல்லனவே. மனிதனின் கைபட்டே அவை கெடுகின்றன. எனவே, கல்வியானது தனியாளின் இயற்கைத் தன்மைக்கு இயைந்ததாக அமைய வேண்டும்" - ரூசோ (இயற்கைவாதி)

இவர்களின் கருத்துக்களோடு பல உளவியலாளர்களும் தமது கருத்துக்களால் இணைகின்றனர். ஒவ்வொரு பிள்ளையும் தனியாள் வேறுபாடுகள் உள்ளவர்கள். கல்வியின் தொழிற்பாடு ஆற்றலை விருத்தியாக்குவதே. தனியாளின் உச்சமான விருத்தியே கல்வி என்ற கருத்தை அவர்கள் கொண்டுள்ளனர்.

ஆத்மீகவாதிகளும் தனியாள் நோக்கையே வலியுறுத்துகின்றனர். 'ஒவ்வொரு தனியாளும் தனித்தன்மையானவன். அவனது சொந்தச் செயற்பாடுகளுக்கு அவனே பொறுப்பாவான். கல்வியின் பிரதான பணி தனியாள் தன்னை உணர்வதற்கு இட்டுச் செல்வதாகும். மனிதன் தெய்வீகமானவன். அவனுக்கான இலக்கு அவனது உள்ளாற்றலை வெளிக்கொணர்வதாகும்" என்ற விவேகானந்தரின் கல்வி நோக்கு இதற்கு உதாரணமாகும்.

முற்போக்குவாதிகளும் தனியாள் நோக்கையே வலியுறுத்துகின்றனர். 'உலகின் முன்னேற்றகரமான வரலாறு காலத்துக்குக் காலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றிய உயரிய தனியாட்களது தொண்டுகளால் ஏற்பட்டது. எனவே கல்வியானது தனியாளின் தனித்தன்மையை வளர்க்கும் வகையில் அமைய வேண்டும்" என்பது இவர்களது வலியுறுத்தலாகும்.

கல்வியின் தனியாள் நோக்கம் பற்றி விமர்சனங்களும் எழுந்துள்ளன. றேமன்ற் (Reymont) என்பவர், "தனியாளை ஒருபோதும் சமூகத்திலிருந்து பிரிக்க முடியாது" என்கிறார். இக்கருத்து இன்றைய நிலையில் சரியானதே. 'தனியாள் ஒரு மனிதப் பிராணியாவான். அவன் சுயநலம் நிறைந்தவன். அத்துடன் ஒழுக்கமற்றவன். மனிதனிடத்தில் மிருக உணர்வோடு கூடிய பல்வேறு இயல்பூக்கங்கள் உள்ளன. சரியான கண்காணிப்பும் பராமரிப்பும் இல்லாவிடில், அவன் ஆதிகாலக் காட்டுமிராண்டி நிலைக்கே போய்விடுவான். அந்த நிலையில் அவனை அடக்கப் பல்வேறு சட்டங்கள் தேவைப்படும்' எனத் தனியாள் கல்வி நோக்கை விமர்சிப்பவர்கள் வாதிடுவர். மேலும், தனியாளுக்குப் பூரண சுதந்திரம் வழங்கக் கூடாது. அவ்வாறு வழங்கப்பட்டால், அவன் தான் விரும்பியதைப் பெறவும், ஏனையோர் பாதிக்கப்படும் வகையில் செயற்படவும் தொடங்கி விடுவான். ஒரு தனியாளின் கட்டுக்கடங்காத கோரிக்கைகள் நாட்டின் பொருளாதாரம், அரசியல் என்பனவற்றில் மிக மோசமான, எதிர்மறையான பாதிப்புக்களை ஏற்படுத்தி விடும் எனவும் இவர்கள் எச்சரிக்கின்றனர். எனவே, கல்வியில் தனியாள் நோக்கம் பற்றிய இக்கருத்துக்களையும் நாம் மனம் கொள்ள வேண்டியுள்ளோம்.

## கல்வியில் சமூக நோக்கம்

கல்வியில் சமூக நோக்கை நாம் இரு வகையாக அவதானிக்கலாம். ஒன்று குறுகிய நோக்கு; அடுத்தது பரந்த நோக்கு. இன்றைய நிலையில் ஒரு தனியாள் தனித்தியங்க முடியாது. எப்படியும் தன் தேவைகளைப் பூர்த்தியாக்க அவன் பிறரை எதிர்பார்த்தேயாக வேண்டும். பிறருடன் தொடர்பு கொண்டேயாக வேண்டும். இன்றைய மனிதன் ஒரு தனி மனிதப் பிராணியல்ல. அவன் ஒரு சமூகப் பிராணியாவான். எனவே, கல்விச் செயற்பாடுகள் சமூகச் செயற்பாடுகளாகின்றன. புதிதாகப் பிறந்த ஒரு குழந்தை, ரூசோவின் கருத்துப்படி, நல்லதொரு தனியாளாகக் கருதப்பட்டாலும், அது வாழ வேண்டியதும் வளர வேண்டியதும் சமூகச் சூழ்நிலையிலேயாகும். அவ்வாறு வளரும் குழந்தை ஒரு முடியாட்சிக் கால அரசகுமாரன் என்று வைத்துக் கொண்டால், அங்கே நாம் கல்வியில் தனியாள் நோக்கைக் காண முடியும். அது குறுகிய சமூக நோக்காக மலர்வதையும் அவதானிக்க முடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ) கல்வியில் குறுகிய சமூக நோக்கம்

முடியாட்சிக் காலத்தில் இக்குறுகிய சமூக நோக்கில் மையமானவரும் பிரதானமானவரும் அரசர்தான். அடுத்து பாசிச ஆட்சியிலும் அரசே முக்கியத்துவம் பெறுகிறது. ஏன், சமவுடைமை ஆட்சியில் கூட முக்கியத்துவம் பெறுவது அரசேயாகும். இங்கெல்லாம் குறுகிய சமூக நோக்கையே காண்கிறோம். குடிமக்கள் தமக்கு மேலுள்ள ஆட்சியமைப்புக்கே முக்கியத்துவமும் மதிப்பும் கொடுக்கின்றனர். இங்கே தனியாள் தனக்காகவன்றி சமூகத்துக்காகவே இருக்கிறான். அதுபோல கல்வி நோக்கமும் தனியாளுக்காகவன்றி சமூக நோக்காகவே அமைகிறது. ஆகவே, தனியாளுக்கான கல்வியின் இயல்பையும், கல்வி முறையையும், கல்வித் திட்டத்தையும், கல்விச் செயற்பாடுகளையும் தீர்மானிப்பது அரசேதான். இவ்வகையான போக்கைப் பண்டைய கிரேக்கக் கல்வி முறையிலும், அண்மைக்கால நாசிச முறையிலும், ஏன் சமவுடைமை முறையிலும் கூடக் காணலாம்.

ஆ) கல்வியில் பரந்த சமூக நோக்கம்

கல்வியில் பரந்த சமூக நோக்கத்தை விளங்கிக் கொள்ள, இது சம்பந்தமான சில தொடர்களை நாம் அவதானிக்க வேண்டும்.

- கல்வியானது சமூகத் தேவைக்கானதே

- கல்வியானது குடிமக்களுக்கானதே

- கல்வியென்பது சமூக விளைதிறனுக்கானதே

இத்தொடர்கள் கல்வியின் பரந்த சமூக நோக்கத்தை வெளிப்படுத்துகின்றன.

கல்வி பற்றிய சில கருத்துக்கள் கல்வியில் பரந்த சமூக நோக்குக்கு அழுத்தம் கொடுக்கின்றன. அவை பின்வருமாறு;

- அரசாங்கப் பாடசாலைகளின் அடிப்படை நோக்கம் வினைத்திறன் மிக்க குடிமக்களை விருத்தியாக்குதலேயாகும்.

- பாடசாலைகளின் அடிப்படை நோக்கம் எல்லா மக்களிடமும் திறன், விளக்கம், நம்பிக்கை, ஈடுபாடு என்பவற்றை விருத்தியாக்கி மக்களை அரசுக்காகப் பயன்படுத்துதலேயாகும்.

- கல்வியின் மிகப்பெரிய தொழிற்பாடு மனித இனத்தின் இலட்சியங்களை உணர்தலும் தனி மனிதர்களுக்கிடையேயுள்ள தொடர்புகளை விளங்கிக் கொள்ளுதலுமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கல்வியின் விசேட தொழிற்பாடு தவிர்க்க முடியாதபடி, சமூக மீளமைப்புக்கு நெறிகளைக் காட்டுவதாகவுள்ளது. சமூகப் பிரச்சினைகளைத் தீர்க்கவும், ஜனநாயக இலட்சியங்களை அடையவும் இது தேவையாகும்.

- ஒவ்வொரு தலைமுறைக்கும் கலாசாரத்தைக் கடத்துகின்ற, அல்லது கையளிக்கின்ற கடமையைக் கல்வி கொண்டுள்ளது. எனவே, அத்தலைமுறையினர் அத்தகுதியைப் பெறவும், அடையக்கூடிய தரத்தைப் பேணவும் முடிகின்றது.

- கல்வியென்பது, அனுபவங்களை மீள்கட்டமைத்தல் அல்லது மீளமைத்தலாகும். இதன் மூலம் கல்வி கூடிய சமூக விழுமியமுள்ளதாக அமைகிறது. இதற்காக அதிகரிக்கப்பட்ட வினைத்திறன் ஊடகமாகப் பயன்படுத்தப்படுகிறது.

கல்வியைத் தனித்துக் கருத்திற் கொள்ள முடியாது. கல்வியை வெறுமையில் திட்டமிடவும் முடியாது. கல்வி, சமூக, பொருளாதார, அரசியல் மாற்றங்களுக்கான சக்தி வாய்ந்த சாதனமாக உபயோகிக்கப்படல் வேண்டும். அதற்காக, நீண்டகால தேசிய எதிர்பார்ப்புகளுக்காக நாட்டின் தேசியத் திட்டங்களுக்காகத் தொடர்புபடுத்தப்படல் வேண்டும். குறுங்காலப் பிரச்சினைகள் தவிர்க்கப்படல் வேண்டும்.

- எதிர்காலத் தலைமுறையினருக்காக - அத்தலைமுறையினரின் விருத்திக்காக வளரும் சமூகத்தின் மீது மேற்கொள்ளப்படும் முயற்சியே கல்வியாகும்.

= ஒருவரது நாட்டின் சமூக, கலாசார அடைவின் உண்மையான பாராட்டு,

= அதன் பயனை வெளிப்படையாக இனங்காணும் திறன்,

= அவற்றை நிவர்த்தியாக்கும் விருப்பம், சேவையாற்றல், தனியாள் விருப்பங்களை இணைத்துத் தேசியமட்டத்தில் செயலாற்றல்

என்ற இந்த மூன்று மையங்களையும் உள்ளடக்கியதே உண்மைக் கல்வியாகும். பாடசாலைகள் இந்த மூன்று தேசப்பற்றுக்கள் தொடர்பான எண்ணக்கருக்களை விருத்தியாக்குவதற்காகச் செயற்படல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கருத்துக்களை நுணுகி ஆராய்ந்தால், இவை கல்வியின் சமூக நோக்கத்திற்கு அழுத்தம் கொடுப்பதை உணரலாம்.

கல்வியின் சமூக நோக்கினை அவதானிக்கையில், சமூக நோக்கம் எதற்காக என்ற ஒரு வினா எழுகிறது.

கல்வியில் சமூக நோக்கத்தை ஆதரிப்போர், தனியாள், தனிமையில் வாழவும் முடியாது, தன்னை விருத்தியாக்கிக் கொள்ளவும் முடியாது என நம்புகின்றனர். 'றேமன்ற்' என்ற கல்வியறிஞர், தனிமைப்படுத்தப்பட்ட ஒரு தனியாள், யதார்த்தமாக இருக்க முடியாது என்கிறார். தனியாள் ஒரு சமூகப் பிராணியாக இருப்பதால், சமூகத் தொடர்புகள் இல்லாமல் அவன் விருத்தியடைய முடியாது. எனவே கல்வியில் சமூக நோக்கம் இருந்தேயாக வேண்டும்.

"ஒவ்வொரு தனியாளும் கல்வியால் சமூக வினைத்திறன் உள்ளவனாக ஆக்கப்படல் வேண்டும். சமூக வினைத்திறன் உடன்பாடான தனியாளின் ஆற்றலால் அடையப்படல் வேண்டும். சமூக வினைத்திறனுள்ள தனியாள் அவனது வாழ்க்கைத் தேவைகளைத் தானே பூர்த்தி செய்கிறான். அவன் தனது ஒழுக்க, சமூகத் தரத்தையும் தானே உறுதி செய்கிறான்" என ஜோன் டியூவியும் கருதுகிறார். இதனாலும் கல்வியில் சமூக நோக்கம் அவசியமாகிறது.

மகாத்மா காந்தியின் கல்வி அடிப்படையும், கிராமியக் கைத்தொழில், விவசாயத்துறை சார்ந்த மக்களுக்கே முக்கியத்துவம் அளித்தது. எனவே, அவரது கல்விக் கருத்துக்களும் கல்வியில், சமூக நோக்கையே மையமாகக் கொண்டிருந்ததை உணரலாம்

இக்கருத்துக்கள் சமூக நோக்கத்துக்கான காரணிகளாக இருப்பதை நாம் கருத்தில் இருத்துதல் நல்லது.

## கல்வியில் அறிவு நோக்கம்

பண்டைய கல்வி மரபில், கல்வியானது அறிவு நோக்கத்தையே முக்கியமாகக் கொண்டிருந்ததை நாமறிவோம். அதன்படி பிள்ளையின் மனம் வெற்றுக் கொள்கலனாகவும், ஆசிரியர் அதில் அறிவை நிரப்புபவராகவும் இருந்தனர். 'குருவில்லா வித்தை பாழ்' என்ற முதுமொழியும் அறிவையே வலியுறுத்தியது. நன்னூல் முதலிய மரபு வழியான இலக்கண நூல்களும் கல்வி கொடுப்போன், கொள்வோன் ஆகியோர் இலக்கணத்தையும், கொடுக்கும், கொள்ளும் இலக்கண இயல்புகளையும் கூறும்போது அறிவையே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியில் வலியுறுத்தின. ஒரு தனிமனிதனது கல்வியில் மனனம் செய்வது அறிவை நிரப்பி நிலைநாட்டிக் கொள்வதற்கு வழியென நம்பப்பட்டது. இக்காரணங்களாற் போலும் நவீன காலத்துக் கல்வியறிஞர்கள் சிலரும் கல்வியில் அறிவு நோக்கத்தை வலியுறுத்துகின்றனர். எடுத்துக்காட்டாக பேக்கன், கொமெனியஸ் ஆகியோரின் கருத்துக்களை இங்கு கவனிக்கலாம். இவர்கள், எல்லா அறிவும் எல்லோருக்கும் இருக்க வேண்டும் என்கின்றனர். உண்மையான அறிவுள்ளவன், அறநெறி உள்ளவனாக இருப்பான் எனக் கருதுகின்றனர். 'விவசாயம் செய்யாமல் எந்த வளமான நிலமும் பயன் தராது. அதுபோல, மனமானது கற்றலின்றிப் பயன்படாது' எனக் குறிப்பிடுகின்றனர். பாடசாலையின் தொழிற்பாடானது சகல பாட அறிவையும் மாணவர்களுக்கு வழங்குவதற்கேயாகும். அறிவைப் பெறுவதே வெற்றிகரமான கற்றலாகும். பரீட்சைப் பேறுகள் அறிவின் அடிப்படையிலேயே தங்கியுள்ளன என இவர்கள் கருதுகின்றனர். 'பரீட்சையில் எதிர்பார்க்கப்பட்ட கருத்துக்களைக் கொடுப்பதன் மூலம் ஆளுமையும் விருத்தியடைகிறது' என ஹேபர்ட்டும் குறிப்பிடுகிறார். இக்கருத்துக்களால் கல்வியானது அறிவு நோக்கத்தையும் கொண்டுள்ளது என்பதை அறியலாம். ஆயினும் அறிவு நோக்கத்தைக் கடுமையாக விமர்சிக்கும் கல்வியியலாளர்களும் இல்லாமலில்லை. அவர்களில் ஒருவர் ஏ.என்.வைற்ஹெட் ஆவார். எவர், எவ்வாறு விமர்சித்தாலும், கல்வி நோக்கங்களின் வரிசையில் அறிவு நோக்கத்தையும் நாம் புறக்கணிக்க முடியாது.

## கல்வியில் ஒழுக்க நோக்கம்

'ஒழுக்கம் விழுப்பம் தரலால், ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்' என்பது வள்ளுவம். ஒழுக்கம் இல்லையேல் சமூகத்தில் வாழவே முடியாது. ஒழுக்கம் கெட்டு மானமழிந்து வாழ்வதை விட இறந்து விடலே மேலானது.

'மயிர் நீப்பின் வாழாக் கவரிமானன்னார் உயிர்நீப்பர் மானம்வரின்' என்ற குறளும், 'முந்தை இருந்து நட்டார் கொடுப்பின் நஞ்சும் உண்பர் நனிநா கரியர்' என்ற சங்கச் சான்றோரின் அடிகளும் ஒழுக்கத்தையே வலியுறுத்துகின்றன. ஏன், தனிமனிதனின் ஆளுமையில் ஒழுக்கம் ஒரு தனியான இடம் வகிக்கிறது. எனவே கல்வி, நோக்கங்களில் ஒன்றாக ஒழுக்கம் இருப்பதில் வியப்பில்லை. கல்வி ஒழுக்கத்தையும் விருத்தியாக்க வேண்டும். இதனால், சமூகத்துக்கு ஒழுக்கக் கல்வியும் அவசியமாகிறது. வாழ்க்கையில் ஒழுக்கத்தை வலியுறுத்தும் கல்வியறிஞர்கள், 'பணமோ,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரமோ, திறமையோ, உடல் நலமோ அவசியமில்லை. ஒழுக்கம் மட்டும் தேவை. கல்வி ஒழுக்கத்தை விருத்தியாக்க வேண்டும்' என்கின்றனர். 'நமது கற்றல் அனைத்தும் வேதம் ஓதலும், சமஸ்கிருத மொழியின் உண்மையான அறிவும், இலத்தீன், கிரேக்கம் என்பனவும், ஒழுக்கத்தை எமக்குத் தராவிட்டால், பயனற்றவையே. அவை எமது உள்ளத்தைத் தூய்மையாக்க வேண்டும். அறிவின் முடிவு ஒழுக்கத்தை வளர்த்தலேயாகும்' என இவர்கள் கருதுகின்றனர். றேமன்ற் என்பவர், "ஆசிரியரின் இறுதி நோக்கம், பிரிவின்மையையும், தூய ஒழுக்கத்தையும் கட்டியெழுப்புதலாகும்" என்கிறார். சுவாமி விவேகானந்தரோ, "மனிதனை உருவாக்கலே, கல்வியின் நோக்கமும் பயிற்சியும்" என்கிறார்.

'ஒழுக்கம், தனிப்பட்டது; சமூகத்துடன் தொடர்புடையது என இரு பிரிவானது. இவை தவிர, நாம் தூய்மையாக இருக்க வேண்டும். கல்வியில் ஒழுக்க உருவாக்க நோக்கமும் ஒருபக்கச் சார்பானதே. ஒரு தனியாள் தனது வாழ்க்கைக்கான ஆதாரத்தைச் சம்பாதிக்க வேண்டும். இல்லாவிடில், அவர் மகிழ்ச்சியாக இருக்க முடியாது. ஆனால் வாழ்க்கை விழுமியமானது உணர்வுக்காகத் தியாகம் செய்யப்படலாகாது' என்ற கருத்துக்களால் ஒழுக்கக் கல்வியின் இடத்தை நாம் கருத்திலெடுக்கலாம். என்னதான் மேதைமை இருந்தாலும் ஒழுக்கம் இல்லையேல் உலகம் நம்மை உதறித்தள்ளி விடும். எனவே, கல்வி நோக்கங்களில் ஒழுக்கம் ஒரு குறித்த தனி இடத்தை வகிப்பதை உணரலாம்.

### கல்வியில் சமய நோக்கம்

என்று மனித குலம் தமக்கும் மேல் ஒரு சக்தி இருக்கிறதென்பதை உணர்ந்ததோ அன்றே இறைவணக்கமும் தோன்றிவிட்டது. ஆதிகால மக்கள் இயற்கை உற்பாதங்களால் தாக்கமுற்றனர்; அச்சமுற்றனர். அதன் காரணமாகப் பயபக்தி ஏற்பட்டது. இயற்கைப் பொருட்களை வணங்கத் தலைப்பட்டனர். ஐம்பெரும் பூதங்களையும் அவற்றின் சக்திகளையும் பயபக்தியோடு வழிபட்டனர். கிரியைகளும் மந்திரங்களும் தோன்றின. இந்த வகையில் பல வேறு சமயங்கள் தோன்றின. சமயம், மதம் என்பன ஒரே கருத்துடைய சொற்களாயினும் அவை வேறு கருத்துக்களையும் உடையன. சமயத்தை நல்ல சமயமாக (தருணமாக)ப் பயன்படுத்த வேண்டும். மதப்பற்று வேண்டும். ஆனால் மதம் (வெறி) கொள்ளக்கூடாது. எல்லாச் சமயங்களும் மனிதகுல நன்மைக்காகவே தோன்றின. நல்ல வழிகளையே காட்டுகின்றன. ஆனால் மனிதர்கள்தான் மதம் கொண்டு அலைகிறார்கள். 'ஊற்றெடுக்கும் எல்லா நதிகளும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுத்திரத்தைச் சென்றடைவது போல, உலகில் உள்ள எல்லாச் சமயங்களும் இறைவனைச் சென்றடையும் பாதைகளாகின்றன' என்று சிக்காக்கோ சொற்பொழிவில் சுவாமி விவேகானந்தர் குறிப்பிட்டார். இவ்வாறு வாழ்வாங்கு வாழவும், பஞ்சமா பாதகங்களை விலக்கி அன்பு, கருணை, பொறுமை, அமைதி, அகிம்சை என்ற வழிகளில் நின்று பொது நலம் கருதும் நல்ல மனிதர்களாக வாழவும் வழிகாட்டும் சமயத்தைக் கல்வி புறக்கணிக்க முடியாது. எனவே கல்வி சமய நோக்கமும் கொண்டதாக இயங்க வேண்டும். இந்த வகையில் கல்வியியலறிஞர்கள் கல்வியின் சமய நோக்கத்தையும் வலியுறுத்துகின்றனர்.

"நல்ல குடிமையின் அடிப்படை, ஒழுக்கமாகும். அது மனிதனின் நம்பிக்கையில் தங்கியுள்ளது" என்று கருதும் காண்ட் என்பவரது கருத்துப்படி, சமயமற்ற வாழ்வு பூரணமற்றதாகும். அவ்வாறே 'ஒழுக்கமற்ற வாழ்வும் வாழ்வாகாது' என்றும் குறிப்பிடுகிறார். இ.ஜே.பேட்டன் என்பவர், 'சமயமும் கல்வியும் இயல்பாக இயைந்தவை. சமயக் கல்வி கடமையுணர்வை வளர்க்கிறது' எனக் கூறுகிறார். டாக்டர் இராதாகிருஷ்ணன் இந்தியப் பாரம்பரியத்தின்படி வாழ்க்கைக்கான ஆதாரத்தைத் தேடுவது மட்டும் கல்வியல்ல; அல்லது குடிமைக்கான கல்வியை மட்டும் பெறுவதும் கல்வியன்று. ஆத்மீக வாழ்க்கைக்கான ஆரம்பமும் கல்வியே, ஆத்மாவுக்கான பயிற்சியும் கல்வியே, அறத்தின் பிரயோகமும் கல்வியே எனக் குறிப்பிடுகிறார். 'இன்று சிந்திக்கும் பல மனிதர்களின் கருத்து என்னவெனில், கல்வி உயரிய நாகரிகமொன்றை உருவாக்கி வளர்க்க வேண்டுமாயின் அது சமயத்தை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும் என்பதே' என றொஸ் என்பவர் கூறுகிறார். சமயம், கற்பித்த பாடங்களை வழங்குவதாக மட்டும் இருக்கக் கூடாது. சமயக் கல்வி வாழ்க்கையில் வாழ்வதாக இருக்க வேண்டும். சமயத்திற்கு மதிப்பளிக்காத ஒழுக்க வாழ்க்கை மணலில் கட்டப்பட்ட வீடு போன்றது என்பது அவரின் கருத்தாகும். இவ்வாறான கருத்துக்கள் மட்டுமல்ல வாழ்ந்து அனுபவப்பட்டவர்களின் முடிவுகளும் கல்வியில் சமய நோக்கத்தை வலியுறுத்துகின்றன. அப்போதுதான் மனிதன் மனிதனாக வாழ்ந்து கடைத்தேறுவான்.

## கல்வியில் தொழில் நோக்கம்

மேல்நாட்டவர்கள் நம்மை ஆண்டதன் பயனாகக் கிடைத்ததே 'வெள்ளைப்பட்டி' உத்தியோகமாகும். அதனால் 'கோழி மேய்ப்பதானாலும், கோரணமேந்து உத்தியோகமானால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிப்புடையதே' என்ற கருத்தும் வளர்ந்தது. நாடு சுதந்திரமுற்று அரை நூற்றாண்டுக்கு மேலாகியும், இன்னும் வெள்ளையரின் எழுதுவினைஞர் தேவையைப் பூர்த்தியாக்கும் கல்வி முறையிலிருந்து நாம் முற்றாக விடுதலை பெறவில்லை. அதன் பலன்தான் வேலையற்ற படித்தோர் பட்டாளம்! இந்த நிலையில் கல்வி, தொழில் நோக்கத்தையும் பூர்த்தியாக்க வேண்டும் என்று கருதுகிறோம்.

"உண்மையான கல்வி, தொழிலுக்கான ஒரு காப்புறுதியாக அமைய வேண்டும்" என மகாத்மா காந்தி குறிப்பிட்டார். தனியாளை, சமூக வினைத்திறன் உள்ளவனாக மாற்றுவதற்கு, கல்வியானது தொழில் நோக்கமும் கொண்டிருக்க வேண்டும். இந்நோக்கம் ஓர் உற்பத்தி முறை எனவும் கூறப்படுகிறது. அதுமட்டுமன்றி, தேசிய செல்வத்தைப் பெருக்கிக் கொள்ளவும் இந்த நோக்கம் வழியமைக்கும். ஒரு மாணவன் பாடசாலையில் பெறும் கல்வி, கலாசாரம் என்பன அவனது வாழ்க்கைக்கு உதவாவிட்டால் கல்வியால் பயனே இல்லை. கல்வி ஒவ்வொரு தனிமனிதனையும் உற்பத்தியாளனாகவும், நல்ல பிரசையாகவும் மாற்ற வேண்டும். அவன் பிறருக்குப் பாரமாக இருக்கக் கூடாது. அந்த வகையில், கல்வி எதிர்கால வாழ்க்கைக்கான பூரணமான ஊதியம் கருதுகின்ற ஒரு தொழிலை மாணவனுக்குத் தருவதாக அமைய வேண்டும். படித்து விட்டு வேலைதேடும் அர்த்தமற்ற கல்வி கல்வியல்ல. அந்த வகையில் கல்வியானது தொழில் நோக்கம் கொண்டதாக அமைய வேண்டும் என்பதற்கு ஓர் எளிய உதாரணமாக மகாத்மா காந்தி 'வார்தா'க் கல்வித் திட்டத்தைச் செயல்முறையாக்கிக் காட்டினார். ஆனால் என்ன காரணத்தினாலோ அது வெற்றி காணவில்லை. வெற்றியளிக்கும் வகையிலான தொழில் நோக்கம் கல்விக்கும் அவசியம் என்பதை இதனால் நாம் உணரலாம்.

## கல்வியில் சர்வாதிகார நோக்கம்

சர்வாதிகாரிகள் பலர் அன்று இருந்தார்கள். உதாரணமாக ஜேர்மனியின் ஹிட்லரைக் குறிப்பிடலாம். இன்றும் அத்தகையவர்கள் இல்லை என்று கூற முடியாது. ஜனநாயக நாடுகள் சிலவற்றில் இன்றும் ஆள்பவர்கள் சர்வாதிகார ஆட்சி நடத்துபவர்களாகவேயுள்ளனர். சர்வ நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி ஆட்சிமுறை கூட சர்வாதிகாரத்துக்கு இட்டுச் செல்லக்கூடியதே.

சர்வாதிகார ஆட்சியைப் பொறுத்து கல்வியின் நோக்கங்கள் அரசியல் கோட்பாடுகளால் நிர்ணயிக்கப்படுகின்றன. இன்றும் எல்லா நாடுகளிலும் கல்வியானது ஆட்சியாளராலேயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்ணயிக்கப்படுவதைக் காண்கிறோம். நம் நாட்டிற் கூட மாறி மாறி ஆளும் கட்சிகளால் கல்வி முறைகள் மாறிமாறிச் சீரழிக்கப்படுகின்றன.

ஒரு சர்வாதிகார நாட்டில் கல்வியின் நோக்கம் எவராலும் கேள்வி கேட்கப்படாத ஒன்றாக அமைந்திருக்கும். சர்வாதிகார ஆட்சி, நினைத்ததைக் கல்வியால் அடையும் நோக்கம் ஒன்றையே கொண்டிருக்கும். அங்கு மாற்றுக் கருத்துக்கு இடமேயில்லை. உதாரணமாக பொது உடைமை நாடாகக் கூறப்பட்ட சோவியத் ருஷ்யாவில் கல்வி நோக்கம், ஒவ்வொருவரையும் பொதுவுடைமை (கம்யூனிஸ்ட்)வாதிகளாக்குவதாகவே இருந்தது. ஜேர்மனியில் தேசிய 'சோசலிஸ்ட்' ஆக்குவதாகவே இருந்தது. இத்தாலியில் 'பாஸிஸ்ட்' ஆக்குவதாகவே கல்வி நோக்கம் இருந்தது. அதாவது, சர்வாதிகார ஆட்சியில் கல்வியின் நோக்கம் சர்வாதிகார ஆட்சியாளரின் ஒரே கோட்பாட்டையே வலியுறுத்துவதாக அமையும். அக்கோட்பாட்டை எதிர்ப்பவர்களோ வினா எழுப்புபவர்களோ அங்கே இருக்க முடியாது. அக்கோட்பாட்டையே அந்நாட்டின் கலைத்திட்டம், பாடத்திட்டம், கல்வி முறைகள், கல்வி நுட்பங்கள் யாவும் பிரதிபலிக்கும். இவ்வாறான கல்வி நோக்கமும் உலகில் நிலவியது; நிலவுகின்றது; நிலவக்கூடும் என்பதையும் நாம் உணர வேண்டும்.

இதுவரை கல்வியின் நோக்கங்களில் பல்வகை இயல்புகளையும் நோக்கினோம். இதன் அடிப்படையில் தேவையான கல்வி நோக்கங்களை தேவை கருதித் தொகுத்தமைத்துப் பயன் காண முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3

## கல்வியில் தத்துவ அடிப்படை

### தத்துவம் என்றால் என்ன?

தத்துவம் என்பதை மெய்த்தன்மை, உண்மை நிலைமை, யதார்த்த இயல்பு என்பனவாகக் குறிப்பிடலாம். இருப்பவற்றின் இருப்பே யதார்த்தம் அல்லது தத்துவமாகும். பொருள்களின் தன்மையை ஆராய்ந்து மெய்மையினை நிலைநாட்டும் அறிவுக்கலையே தத்துவமாகும். தத்துவம் என்ற சொல்லுக்கு இணையாக, மெய்ப்பொருள், சமயக் கண்கள் என்ற குறியீடுகள் தமிழ் இலக்கிய நூல்களில் காணப்படுகின்றன. கீழைநாட்டு இந்து, பௌத்தம் முதலான பண்பாடுகளிலும் பல்வேறு தத்துவ அடிப்படைகளைக் காணலாம். சைவ சித்தாந்தம், வேதாந்தங்களிலும் பல்வேறு தத்துவ அடிப்படைகள் காணப்படுகின்றன. அதுபோல மேலைநாடுகளிலும் தத்துவ அடிப்படைகளைக் காணலாம். மேலைநாட்டுத் தத்துவம் சோக்கிரடீஸ், அரிஸ்டோட்டில் ஆகிய மேதைகள் மூலம் தோன்றியதென்பர். கிரேக்க தத்துவம் கிரேக்க சமயத்திலிருந்து உருப்பெற்றதென்பர். மேலைநாட்டுத் தத்துவத்திற்கு கிரேக்க தத்துவமும், எபிரேய (Hebrew) கருத்துக்களும் அடிப்படையென்பர். மேலைநாட்டுத் தத்துவத்தை இக்காலத்தில் மூன்று வகைப்படுத்துவர். அவை கிரேக்கத் தத்துவம், இடைக்காலத் தத்துவம், இக்காலத் தத்துவம் என்பனவாகும். கிரேக்கத் தத்துவம் சோக்கிரடீசுடன் தொடங்குகிறது. இடைக்காலத் தத்துவத்தைக் கிறிஸ்தவக் குருமார் வளர்த்தனர். இக்கால தத்துவத்தில் ஐரோப்பிய மறுமலர்ச்சியையொட்டி எழுந்த அறிவு வழிக்கொள்கை, அனுபவ வழிக் கொள்கை இரண்டையும் காணலாம். இக்காலத் தத்துவத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காண்ட் என்பவரின் தத்துவ ஆராய்வுக் கொள்கையும் குறிப்பிடத்தக்கது. தேகார்ட்டே என்பவரை இக்காலத் தத்துவத்தின் தந்தையென்பர். ஜோன் லொக் (John Locke) என்பவர் அறிவைப் பெறுவதில் அனுபவத்துக்குள்ள தொன்மையை விளக்கினார். குழந்தையின் மனம் பிறக்கும் போது ஒன்றும் எழுதாத கற்பலகை போல உள்ளது. குழந்தை தன் அனுபவம் மூலமாகவே எல்லாவற்றையும் அறிகின்றது.

இமானுவல் என்பார் புதிய தருக்க முறையைத் தத்துவத்தில் தோற்றுவித்தார். காண்ட்டின் கொள்கைப்படி, அறிவானது அனுபவம் மூலம் தோன்றுகிறது. ஆயினும் அறிவின் உண்மையை அறிய அனுபவம் மாத்திரம் போதாது. அனுபவத்துக்கு முற்பட்ட அறிவும் தேவை. இவ்வகையில் காண்ட்டிம் அறிவுக் கொள்கை, அனுபவக் கொள்கை இரண்டையும் இணைத்து, தருக்க முறை மூலம் ஒரு பெரிய உண்மையை விளக்கினார். அது பெரிய பாதிப்பைத் தத்துவ உலகில் ஏற்படுத்தியது. இவ்வாறான தத்துவ உணர்வுகளின் பின்னணியில் நின்று கொண்டு தத்துவத்தின் செயற்பாடுகளை நோக்கலாம்.

## தத்துவம் என்ன செய்கிறது?

மனித அனுபவத்துள் வரக்கூடிய அனைத்தையும் வழங்குவதற்குத் தத்துவம் முயலுகின்றது. விடயங்களின் அடிப்படை விளக்கத்தில் அது தனது இலக்கைக் கொண்டுள்ளது. மனித நடத்தைப் பிரச்சினைகள், சமய விஞ்ஞான நம்பிக்கைகள், சிந்திக்கும் முறைகள், மனித செயற்பாடுகள் காலப்போக்கில் தோன்றக்கூடிய பிரச்சினைகள் என்பன சில உதாரணங்களாகும். மனித உலகில் ஒரு முழுமையான கருத்தை வழங்குவதற்குத் தத்துவம் முற்படுகிறது. தத்துவம் இயல்பில் விமர்சன ரீதியானது. மனித அனுபவங்களுள் உட்படுகின்ற எத்துறையையும் விமர்சன ரீதியாகப் பரீட்சிக்கத் தத்துவம் முற்படுகின்றது.

தத்துவம், மனிதனை முழு உலகுடனும் தொடர்புபடுத்தி விளக்க முற்படுவதோடு நிற்காமல், அது முழுப் பிரபஞ்சத்தையுமே மனிதனுடன் தொடர்புபடுத்தி ஆராய முயலுகின்றது. அதாவது அது முழுப் பிரபஞ்சத்தையும் மனிதன், இயற்கை, இறைவன் என்பனவற்றுடன் ஆராய முயல்கின்றது. தத்துவம் மனித மனத்தின் இயல்பு, ஆளுமை என்பவற்றை வழங்க முற்படுவதுடன், மனிதனையும் அவனது நிறுவனங்களையும் கூட விளக்க முற்படுகின்றது. மனிதன் பந்தங்களுக்கு உட்பட்டவனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரமானவனா? வரலாற்றை மாற்றக் கூடியவனா? என்றெல்லாம் அது ஆராய முற்படுகின்றது.

தத்துவம் எனும் சொல் 'ஞானத்தின் மீதான காதல்' எனப் பொருள்படும். ஒருவன் அறிவுடையவனாக இருக்கலாம்; புத்தியற்றவனாகவும் இருக்கலாம். ஞானம் என்பது அறிவும் எல்லாச் சூழலிலும் அதன் தொடர்புமாகும். இவ்வாறாகத் தத்துவம் என்பது மனிதனுக்குப் பிரபஞ்சத்தை விளங்கிக் கொள்ளக்கூடிய ஞானத்தை வழங்குகிறது. அத்துடன் அவனைப் பற்றியும் அவனைச் சூழவுள்ள மக்களைப் பற்றியும் விளக்கத்தை அளிக்கிறது. தத்துவமானது ஒருவனின் நம்பிக்கையோ அல்லது கருத்தோ அல்ல. அது மறுபுறமாக மிகக் கடுமையான மனிதன் எதிர்கொண்ட பிரச்சினைகளின் பகுப்பாய்வாகும்.

அதிகூடிய விவேகமுள்ளவர்களும் சிறந்த உள்நோக்கமுள்ளவர்களுமான தத்துவஞானிகள் பின்வரும் வினாக்களுக்கான விடைகளைக் காண்பதற்கு முயற்சி செய்து வந்துள்ளனர்.

- மனிதன் ஏன் பூமிக்கு வந்தான்?
- அவனது வாழ்க்கையின் பிரதான நோக்கம் என்ன?
- மனிதனுக்கு எது சரியானது; எது தவறானது?
- ஒரு குறிப்பிட்ட பொருள் ஏன் அவனுக்குச் சரியாகவும் மற்றது பிழையாகவும் தென்படுகின்றது?
- மனிதன் தனது வாழ்க்கையைப் பயனுள்ளதாக்கவும் திருப்தியானதாக்கவும் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்?
- இவ்வுலகிற்குப் பின்னால் ஏதாவது ஒரு விவேகம் அல்லது சக்தி இருக்கிறதா?
- மனிதன் இறந்த பின் அவனுக்கு ஏதாவது வாழ்க்கை உண்டா? அப்படியாயின் அதன் இயல்பு என்ன?
- இவ்வுலகம் எத்தகைய இயல்புடையது?
- உலகிலுள்ள எல்லாப் பௌதீகப் பொருட்களுக்கும் அடிப்படையான ஒரு பொருள் அல்லது மூலப்பொருள்கள் உள்ளனவா? அம்மூலங்களின் தன்மை எவ்வாறானது?
- ஆக்குதல் அல்லது உருவகித்தல் என்பதன் பொருள் என்ன?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மனித மனத்தால் இவ்வாறான வினாக்களுக்கு விடை காண முடியுமா?

- மனிதன் தன்னிடமுள்ள அறிவை எவ்வாறு பெற்றான்?

- அந்த அறிவின் தகுதி யாது?

இந்த வினாக்கள் மிகப் பண்டைக் காலத்திலிருந்தே மிகப் பிரபல்யமான தத்துவஞானிகளையும் விடை காண்பதில் கஷ்டத்திற்குள்ளாக்கி உள்ளன. சில தத்துவஞானிகள், இவ்வினாக்களுக்கு விடை காண்பதை விடுத்து சமூகப் பிரச்சினைகளுக்கு விடைகாண வேண்டும் என்கின்றனர். மேலும் சில தத்துவஞானிகள் இவ்வினாக்களுக்கு விடைகாண முற்படுவதால் எமது எண்ணக்கருக்கள் விரிவடைகின்றன என்கின்றனர். தத்துவஞானிகள் இவ்வினாக்களுக்கான விடைகளில் வேறுபடுவர். நாம் எல்லோரும் பின்பற்றக் கூடிய ஒரு தத்துவம் குறிப்பாக இல்லையென்றே கூறலாம்.

## கல்வி என்றால் என்ன?

மிகப் புராதன காலத்தில் வாழ்ந்த மக்கள் குழுக்களால், கல்வி என்பது, சமூகக் கட்டமைப்பையும் ஒற்றுமையையும் பேணும் ஒரு வழிமுறையாகக் கொள்ளப்பட்டது. மத்திய காலத்தில் கல்வியானது அரசியல் சமூக முடிவுகளை அடைய உபயோகிக்கப்பட்டது. அக்காலத்தின் மறுமலர்ச்சி, மனிதனின் முழு வாழ்க்கைத் தத்துவத்தையும் மாற்றிவிட்டது. கல்வி தனிமனித கலாசாரம், தனிமனித அபிவிருத்தி என்பவற்றுக்காக உபயோகிக்கப்பட்டது. மறுமலர்ச்சியானது கல்வியின் செல்வாக்கால் ஏற்பட்டது. பதினேழாம் நூற்றாண்டிலிருந்து உளவியல், விஞ்ஞான, சமூகவியல் இயக்கங்கள் கல்வி தொடர்பாகத் தோற்றம் பெற்றன. இதனால் வெவ்வேறு வகையான கல்விச் சிந்தனைகள் கல்விச் சிந்தனையாளர்களது மனத்தில் இடம்பிடித்தன. அவ்வாறான கல்வி பற்றிய கருத்துக்கள் சிலவற்றை இங்கு கருத்திலெடுக்கலாம்.

### அ) கல்வியென்பது அறிவால் மனத்தை நிரப்புதல்

இது கல்வியின் பழமையான கருத்துக்களில் ஒன்றாகும். மனது அறியாமை நிரம்பியது; வெறுமையானது; அதனால் ஞானமாகிய விதைகளால் மனத்தை நிரப்ப வேண்டும். ஆசிரியர் நிறைவான தகவல்களால் மனத்தை நிரப்புகின்ற முகவராவார் எனக் கருதப்பட்டார். இங்கு மாணவன் ஆசிரியர் கூறுவனவற்றை நன்கு செவிமடுப்பவனாக இருக்கிறான். எக்கல்வி முறையிலும் அறிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியத்துவம் பெறுவது என்பதில் ஐயமில்லை. ஆனால் இங்கு ஆசிரியராலேதான் மாணவனது மனது அறிவால் நிரப்பப்பட வேண்டும் என்பதில் முரண்பாடுள்ளதைக் காண்கிறோம். மாணவனது அனுசரணை அல்லது விருப்பம் இல்லாமல் ஆசிரியரால் அறிவை நிரப்ப முடியுமா? என்பது கேள்விக் குறியாகிறது. மாணவன் தானாக விரும்பியே அறிவைப் பெற்றுக் கொள்ள வேண்டும். ஆசிரியரால் திணிக்க முடியாது. மாணவனே கல்வியைப் பொறுத்து மையமானவன் என்ற நவீன கல்விக் கருத்தை இங்கு நாம் கருத்திற் கொள்ள வேண்டும்.

### ஆ) கல்வியென்பது வாழ்க்கைக்கான பொருத்தப்பாடு

மனிதன் தன்னிடம் உள்ளனவற்றோடு மாத்திரம் திருப்தியடைபவனல்லன். அவன் உடலியல், சமூகவியல் சக்திகளுடன், தனது வசதிகள், பாதுகாப்பு என்பனவற்றுக்காகத் தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கிறான். இச்செயற்பாடுகள் மூலமாக அவன் சமூகப் பொருத்தப்பாடு அல்லது சமூக இசைவாக்கம் பெறுகிறான். மனிதன் சூழலுடன் தன்னை இசைவாக்கிக் கொள்ளும் இயல்புடையவன். இதன் காரணமாக அவன் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்காகச் சூழலுக்கேற்பத் தன்னை இயைபுபடுத்திக் கொள்கிறான். இந்த வகையான இசைவாக்கத் திறன்களைக் குழந்தைகளும் வளர்த்துக் கொள்ள வேண்டுமென அவன் விரும்புகிறான். இந்த வகையில் கல்வியானது வாழ்க்கைக்கான பொருத்தப்பாடு அல்லது இசைவாக்கமெனக் கொள்ளப்படுகிறது.

### இ) கல்வியென்பது சுயசெயற்பாடு

கல்வி என்பது சமூக இசைவாக்கம் எனக் கூறப்பட்டதன்படி, அது சுய செயற்பாடாகக் காணப்படுகிறது. நடத்தை மாற்றம் எதுவாயிருந்தாலும் அது சுயசெயற்பாட்டால் ஆனதேயாகும். அதாவது சூழலுக்கேற்ப இணக்கப்பாடு காண்பதற்கு அனுபவங்களை மீளமைக்க வேண்டும். இக்கல்விக்கான கருவைப் பொறுத்து நாம் தத்துவத்தை நாட வேண்டியவர்களாயிருக்கிறோம். ஏனெனில், தத்துவத்தில் மட்டும்தான் இத்தகைய கல்விக்கான எண்ணக்கரு இருக்கிறது. தத்துவத்தின் வாழ்க்கை நோக்கு என்ற அம்சத்திலிருந்துதான் வாழ்க்கைக்கான நடத்தை மாற்றம், நடத்தைப் பொருத்தப்பாடு என்பன பெறப்படல் வேண்டும். இந்த வகையில் கல்விக்கும் தத்துவத்துக்குமிடையே நெருங்கி தொடர்பு இருப்பதைக் காண்கிறோம். கல்வி என்பது சுயசெயற்பாடு என்ற கருத்தையும் இங்கு விளங்கிக் கொள்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வியில் தத்துவம்

கல்வியில் தத்துவம் மகத்தான, முக்கியத்துவமான இடம் வகிக்கிறது. கல்வித் தத்துவஞானிகளின் கோட்பாடுகளும் சிந்தனைகளும் கல்விக்குப் பெரிய வரப்பிரசாதங்களாக அமைந்துள்ளன. புராதன காலத்திலிருந்து இன்று வரை கல்வியில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு எல்லாம் கல்வித் தத்துவஞானிகளின் கோட்பாடுகளும் சிந்தனைகளுமே அடிப்படைகளாக அமைந்துள்ளன. அந்த வகையில் கல்வித் தத்துவஞானிகளாகக் குறிப்பிடப்படக் கூடியவர்கள் பிளேட்டோ, ரூசோ, புரோபல், ஸ்பென்சர், டியூவி, றசல் போன்றவர்களாவர். கல்வியில் தத்துவ நோக்குகள் இவர்களது கல்விச் சிந்தனைகளிலிருந்தே தோன்றின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4

## ரூசோவின் கல்வித் தத்துவம்

பண்டைக்கால கல்வியில் பாடங்கள் முக்கியத்துவம் பெற்றிருந்தன. அதாவது போதனை, பாடத்தை மையமாகக் கொண்டு அமைந்தது. இதைப் பாடமையக் கல்வி எனலாம். அடுத்து முக்கியத்துவம் பெற்றவர் ஆசிரியராவார். இதை ஆசிரியர் மையக்கல்வி எனலாம். மூன்றாம் இடத்தையே மாணவன் பெற்றான். பாடத்துக்காக மாணவன், ஆசிரியருக்காக மாணவன் என்ற நிலை மாறி மாணவனுக்காகவே ஆசிரியரும், பாடமும் என்ற நிலையை ரூசோவின் கல்விக் கருத்துக்கள் தோற்றுவித்தன. அதாவது, பிள்ளை மையக்கல்விக்கு வித்திட்டவர் ரூசோவேயாவார்.

ரூசோவின் முழுப்பெயர் ஜீன் ஜேக்ஸ் ரூசோ என்பதாகும். ரூசோ தமது இளம் வயதிலேயே அன்னையை இழந்தார்; தந்தையால் வளர்க்கப்பட்டார். கல்வியைப் பொறுத்து அவருக்கு வகுப்பறை அனுபவமே கிடைக்கவில்லை. ஒரு தனிப்பட்ட ஆசிரியரிடம் தமது ஆரம்பக் கல்வியைக் கற்றார். அடுத்து பல்வேறு தொழில்களிலும் ஈடுபட்டார். அவை அவருக்குத் திருப்தியளிக்கவில்லை. அந்தத் தொழில் ஈடுபாட்டு அனுபவங்கள் திருப்தியளிக்காவிட்டாலும் அவ்வனுபவங்கள் கல்விப் பிரச்சினைகளில் அவருக்கு நாட்டத்தை ஏற்படுத்தின. அதனால் தமது இருபத்தைந்தாம் வயதளவில் பல்வேறு அறிஞர்களின் நூல்களை வாசிக்கத் தொடங்கினார். குறிப்பாக, மொன்டேகு, ஹொப்ஸ், பாஸ்கல், லொக், பெனிசின், வொல்ரெயர், மெல்பிரான்சே போன்றோரின் நூல்களை ஐயம் திரிபறக் கற்றார். இதற்கு முதல் தமது ஆரம்பக் கல்வியைக் கைவிட்ட ரூசோ, சட்டம் தொடர்பான தொழில் புரியும் ஒருவரிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலைக்கமர்ந்தார். அதைக் கைவிட்டு செதுக்கு வேலை செய்யும் ஒருவரிடம் வேலை செய்தார். பின்னர் இவை எல்லாவற்றையும் உதறிவிட்டு சுய முயற்சியில் ஈடுபட்டார். அதனால் பல்வேறு பயணங்களையும் மேற்கொண்டு அலைய நேரிட்டது. பல்வகை அலுவல்கள், பல்வகைக் கற்கைகளை மேற்கொண்ட அவர் 1741இல் பாரிஸில் ஒரு கலைக்களஞ்சியத்தில் சங்கீத விமர்சகராகப் பணியாற்றினார். 1749இல் கலை, விஞ்ஞானம் தொடர்பான கட்டுரை ஒன்றுக்கு டிஜொன் அக்கடமி அவருக்குப் பரிசில் அளித்தது. 1792இல் அவர் எழுதிய 'எமில்', 'சமுதாய ஒப்பந்தம்' என்ற இரு நூல்கள் வெளிவந்தன. இதன் காரணமாகப் பல்வேறு அறிஞர்களுடனும் அவருக்குக் கருத்து மோதல்கள் ஏற்பட்டன.

ரூசோவினது தத்துவத்தைப் பொறுத்து அவர் மீது தாக்கம் புரிந்த காரணிகளாக,

1. அவர் வாழ்ந்த காலச்சூழல்

2. மிகுந்த வேறுபாடுடைய அவரது வாழ்க்கை அனுபவங்கள்

3. உத்வேகமும் உணர்ச்சியுமுள்ள அவரது இயல்பு

என்ற மூன்றையும் குறிப்பிடலாம். இவற்றின் செல்வாக்கால் வெளியிடப்பட்ட ரூசோவின் தத்துவக் கருத்துக்கள் இயற்கைவாதம் எனப்பட்டன.

ரூசோவின் இயற்கை வாதத்தில் இயற்கையே மையமாக அமைவதைக் காணலாம். இயற்கை நிலை, இயற்கை மனிதன், இயற்கை நாகரிகம் என்பன அவையாகும். இயற்கையிலிருந்து நீங்குதலே நாகரிகத்தின் சகல தீமைக்கும் காரணம் என அவர் கருதினார். இயற்கைக்கு மீண்டும் திரும்புவதே உலகத்தின் துன்ப நிவர்த்தி என்று ரூசோ நம்பினார்.

"இயற்கையன்னையின் கையிலிருந்து வரும் அனைத்தும் நன்மையானவை, மனிதனின் கைபட்டே அவையனைத்தும் தூய்மை இழக்கின்றன. இயற்கையுடன் தோன்றிய வாழ்க்கையே உண்மையானது. இயற்கையான நாகரிகத்தையும் இயற்கையான மனிதனையும் உருவாக்குவதே கல்வியின் நோக்கம்" என அவர் குறிப்பிட்டார்.

## இயற்கைவாதமும் எதிர்மறைக் கல்வியும்

ரூசோவின் இயற்கைவாதத்தை ஒட்டியதாக அவரது கல்வி அணுகுமுறையிருந்தது. ஒழுங்குமுறையாகத் தாபிக்கப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்தில் அவருக்கு நம்பிக்கையிருக்கவில்லை. அச்சமூகத்துக்கு எதிரானதாகவே அவரது கல்வி அணுகுமுறை இருந்தது. அதனால் அக்கல்வி முறையை எதிர்மறைக் கல்வியெனக் குறிப்பிட்டார். எதிர்மறைக் கல்வி என்பதால் அவர் கருதுவது, பிள்ளை இயற்கை ஒழுங்கிற்கு உட்படுத்தப்படல் வேண்டும்; சமூக ஒழுங்கிலிருந்து விடுதலை பெற வேண்டும் என்பனவேயாகும். இயற்கையுடன் இணைந்து இயங்குவதற்குப் பிள்ளை அனுமதிக்கப்பட வேண்டும் என்பதை ரூசோ வலியுறுத்தினார். எதிர்மறைக் கல்வியின் நோக்கம், பிள்ளையின் உள்ளத்தை சமூகத்தின் தீயநெறிகளிலிருந்து பாதுகாப்பதுவேயாகும். ரூசோ வலியுறுத்திய எதிர்மறைக் கல்வியின் இயல்புகளைப் பின்வருமாறு குறிப்பிடலாம்;

1. நேரத்தைப் பயனுள்ள வழிகளில் செலவிடல்

2. நூற்கல்வி அவசியமில்லை; பிள்ளை தானாகச் சிந்தித்துத் தனது சுயமுயற்சியால் கற்றல்

3. முறைசார் பாடங்கள் தேவையில்லை. முறைசார் வகுப்பறைக் கற்பித்தல் ஞாபகத்தை முதன்மைப்படுத்துவதால் அது பிள்ளைக்குச் சுமையாகவே அமையும்.

4. தனியான ஒழுக்கப் போதனை பொருத்தமற்றது .இயற்கையில் பிள்ளை மிகத் தூய்மையானதாயிருப்பதால் பிள்ளையை இயற்கையிலேயே கற்குமாறுவிட வேண்டும்.

5. இயற்கையோடு ஒன்றிய வாழ்வே மகிழ்ச்சியானது. நவீன நாகரிகம் அதனை அழித்து விட்டது. இதற்கான தீர்வு மீண்டும் இயற்கையிடம் செல்வதேயாகும்.

இக்கருத்துக்களிலிருந்து நாம் துணியக்கூடியது இயற்கைவழிக் கல்வியே மனித குலத்துக்கு உகந்ததாகும் என்பதாகும். இங்கே பிள்ளையே இயற்கையின் மையம். கல்வியின் மையமும் பிள்ளையாகவே இருக்க வேண்டும்.

குழந்தை இயற்கையில் இயல்பாகவே விருத்தியடைய வேண்டும் என்பதை ரூசோ வலியுறுத்தினார். பிள்ளை அதனது தனி இயல்புக்கேற்ப வளர்ச்சியடைய அனுமதித்தல் வேண்டும். பிள்ளைக்கு இயற்கையான சுதந்திரம் வேண்டும். பிள்ளைக்கே கல்வியில் முதலிடமளிக்கப்படல் வேண்டும். இன்றைய கல்வியுலகில் ரூசோவின் கருத்துக்கள் சகல கல்விச் சீர்திருத்தங்களுக்கும் பின்னணியாக - அடிப்படையாக இருப்பதைக் காண்கிறோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலைத்திட்டமும் ரூசோவும்

கலைத்திட்டமென்பது பிள்ளை தனது வயதின் அடிப்படையில் நிறுவன ரீதியாக வருடந்தோறும் கற்க வேண்டிய பாட உள்ளடக்கங்கள், பாடம் தொடர்பான பாடசாலைப் புறச் செயற்பாடுகள் அனைத்தையும் உள்ளடக்கியதாக ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றல் கற்பித்தலுக்கான ஓர் அமைப்பாகும். பிள்ளையின் வயது நிலை, அதன் இயல்புகளுக்குப் பொருத்தமான கலைத்திட்டத்தையும் ரூசோ விதந்துரைத்தார். பிள்ளையின் வயது நிலையைப் பருவங்களாக வகுத்து ஒவ்வொரு பருவத்திற்குமுரிய கல்வி எத்தகைய முறையில் அமைய வேண்டும் என்பதையும் ரூசோ விளக்கினார்.

முதலாம் பருவம் குழந்தைப் பருவமாகும். அது 1-5 வயது வரையானதாகும். இரண்டாம் பருவம் பிள்ளைப் பருவமாகும். அது 5-12 வயது வரையானதாகும். மூன்றாம் பருவம் முன்கட்டிளமைப் பருவமாகும். அது 12-15 வயது வரையானதாகும். நான்காம் பருவம் கட்டிளமைப் பருவமாகும். அது 15-20 வயது வரையானதாகும். ஐந்தாம் பருவம் 20 வயதுக்கு மேற்பட்டதென ரூசோ பருவங்களைப் பிரித்தார். ஒவ்வொரு பருவமும் அதற்குரிய தேவைகளையும் விருப்புக்களையும் கொண்டமைவதுடன் இயற்கை வளர்ச்சியில் தானாகவே பூரணப்படும் தன்மையுடையது எனவும் அவர் குறிப்பிட்டார். இந்த ஒவ்வொரு பருவ நிலைக்கும் எவ்வாறான கல்வி கொடுக்கப்பட வேண்டும் எனவும் அவர் விதந்துரைத்தார்.

### முதலாம் நிலை:

இது 1-5 வயது வரையான குழந்தைப் பருவமாகும். உடலாலும் உள்ளத்தாலும் மென்மையுடைய இப்பருவக் குழந்தைக்குத் தகுந்த காப்புணர்ச்சி அளிப்பவர்களாகத் தாயும் தந்தையும் இருக்க வேண்டும். இயற்கையான வீட்டுச் சூழலே இதன் கல்விக்குரிய சூழலாகும். புத்தம் புதிதாக மலர்ந்திருக்கும் குழந்தை உள்ளத்தை எந்த வகையிலும் மாசுபடுத்தக் கூடாது. இதற்கேற்ற வகையில் குழந்தையின் உடலும், உள்ளமும் வளர்ச்சியடையும் வகையில் கல்வி அமைய வேண்டும். இக்கல்வி, கல்வியென்றில்லாமல் குழந்தையின் விருப்புக்கும் மகிழ்ச்சிக்கும் ஏற்றதான கல்வி முன்னாயத்தச் செயற்பாடுகளாக இருக்க வேண்டும்.

### இரண்டாம் நிலை:

இப்பருவம் 5-12 வயது வரையான பிள்ளைப் பருவமாகும். உடல் வளர்ச்சிக்கும் புலன்களின் வளர்ச்சிக்கும் உறுதுணை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பருவத்தில் அவசியமாகும். புத்தகக் கல்வி எதுவும் இப்பருவத்தில் தேவையில்லை. இப்பிள்ளைகளுக்கான கல்வித்திட்டம் உணர்வுகள், புலன்கள் ஆகியவற்றை விருத்தியாக்க வேண்டும். (பொறிகள் உணர்வுகளுக்கான பயிற்சி எனும் போது தீர்வு ஒன்றைக் காணச் செய்தல், நிகழ்வுகளுக்கான காரணங்களைக் காணல் என்பன அதில் அடங்கும்) எல்லாக் கற்றலும் விளையாட்டுடன் ஆனவையாகவே இருத்தல் வேண்டும். புலன்களுக்குப் பயிற்சி அளித்து இயற்கைப் பொருட்கள், இயற்கை நிகழ்ச்சிகளின் நன்மைகளை அறிய உதவ வேண்டும். தீயனவற்றிலிருந்து நல்லனவற்றையே நாடச் செய்தல் வேண்டும். மனனம் செய்யும் முறையால் எதையும் கற்க வேண்டிய அவசியமில்லை.

**மூன்றாம் நிலை:**

இது 12-15 வயது வரையான பருவமாகும். இதை முன் கட்டிளமைப் பருவம் எனலாம். ஆராய்வு மனப்பான்மையும் காரணம் காணும் திறனும் பெறும் பருவம் இப்பருவமாகும். எனவே பிரச்சினைகளைக் கொடுத்து அற்றிற்குத் தீர்வு காணும் திறனைப் பெறுவதற்குப் பயிற்சியளித்தல் வேண்டும். இப்பருவத்தினர் வாசிப்பதற்குச் சிறந்த நூல்களாக அமைவன, 'றொறின்சன் குரூசோ' போன்ற பிரச்சினை தீர்க்கும், சிந்தனைத் திறன் வளர்க்கும் நூல்களாகும். அதுமட்டுமன்றி கணிதம், கைப்பணி, நுண்கலைகள் என்பனவற்றையும் கற்பிக்கலாம். உண்மை விழுமியங்களை அறியும் உள வளர்ச்சி பெற வேண்டிய பருவம் இதுவாகும். அறிவுக்கான ஆர்வம் தூண்டப்பட வேண்டும். உடல் தொழிற்பாட்டு வேலைகளுக்கும் இப்பருவம் உகந்ததாகும்.

**நான்காம் நிலை:**

இது 15-20 வரையான வயதைக் கொண்ட கட்டிளமைப் பருவமாகும். மனிதப் பண்புகளுக்கு மதிப்புக் கொடுத்து, சமூகத்தோடு உறவாடும் அறிவினைப் பெற்று மனிதனாக மாறும் பருவம் இப்பருவமாகும். சமய அறநெறியறிவு பெறும் பருவமும் இதுவே. இப்பருவத்தில் உள்ளத்திற்கான பயிற்சிக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். சமூக நோக்கு உள்ளவனாக, பிறரது நடத்தை விருப்பங்களுக்கேற்ப இசைவாக்கம் பெறுபவனாக ஆக வேண்டும். சமூகத் தொடர்புகளை விளங்கிக் கொள்வதற்கான சமூகவியல், அரசியல், பொருளாதாரம், வரலாறு, சமயம் என்பன இப்பருவத்தினருக்குப் பொருத்தமான பாடங்களாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு ஒவ்வொரு பருவநிலைக்குமான கற்கை நியமங்கள் பற்றிக் குறிப்பிட்ட ரூசோ, சமூக அறிவைப் பெற்ற பின்னர் சமூக உறுப்பினனாக மாறி உயர்வடையும் பருவமாக 20 வயதிற்கு மேற்பட்ட முதிர்பருவத்தைக் குறிப்பிடுகிறார்.

எமில் (Emile) என்ற ரூசோவின் நூலில் இடம்பெறும் எமிலி என்ற பாத்திரமே இவரின் கல்விக்கு எடுத்துக் காட்டாக விளங்குபவனாவான். எமிலிக்கான கல்வி பற்றிக் கூறும் கருத்துக்களே ரூசோவின் கல்விக் கருத்துக்களாக மலர்ந்தன. எமிலிக்கு வாழ்க்கைத் துணைவியாக அமைந்த சோபி (Sophie) என்பவளுக்கான கல்வி பற்றிய விளக்கமே பெண் கல்வி பற்றிய ரூசோவின் கருத்துக்களாகும்.

## பெண்கல்வியும் ரூசோவும்

முதிர் பருவத்தில் வாழைக்கைத் துணையையும் தேடிக் கொள்ள வேண்டும் எனக் குறிப்பிடும் ரூசோ, அவ்வாறு தேடிக் கொள்ளும் வாழ்க்கைத் துணைவியின் கல்வி பற்றியும் விளக்குகிறார். அதுவே பெண் கல்வியாக விதந்துரைக்கப்படுகிறது. 'ஆணுக்காகப் படைக்கப்பட்ட இயற்கையின் ஓர் அபூர்வப் படைப்பே பெண். ஆணுக்குப் பணிவிடை செய்து அன்பு செலுத்தும் குடும்பத் தலைவியே அவள். ஆண்களுக்குரிய கல்வியோ உயர் கல்வியோ அவளுக்குத் தேவையில்லை. நன்மக்களைப் பெற்றெடுக்கக் கூடிய உடல் நலம் தரும் உடற்பயிற்சியும், குடும்பக் கலையறிவுமே அவளுக்குத் தேவை. காதலும் கருணையும் மிக்கவளாக, ஆணின் உள்ளத்தைப் புரிந்து வாழ்பவளாக விளங்க உதவும் அறிவு மட்டும் அவளுக்குப் போதுமானது'. இவ்வாறு பெண்கல்வி பற்றிக் கூறும் ரூசோவின் கருத்துக்களில், பெண்களிடம் அறமும் அறிவும் வளர்க்கப்பட வேண்டும்; உயரிய பண்புகளை அவர்கள் அடைய வேண்டும்; அவர்களது கருத்துக்களுக்கு மதிப்பளிக்கப்பட வேண்டும்; அவர்கள் சொந்த இல்லப்பணியை இறைபணியாக்க வேண்டும்; அவர்கள் பெறும் கல்வியானது இறுதிந ஆள்வரை பயனளிக்க வேண்டும் என்ற உயர் பண்புகள் காணப்பட்டாலும், பெண்கள் ஆண்களுக்காகப் படைக்கப்பட்டவர்கள் என்பதும், அவர்களுக்கு உயர் கல்வி தேவையில்லை என்பதும் இன்றைய பெண் விடுதலை விரும்பிகளால் ஏற்றுக் கொள்ளக் கூடியனவல்ல. ஆனால் நல்ல இல்லறத்துக்கும், குழந்தைகளின் நல்ல சிறப்பான வளர்ப்புக்கும், அன்பால் கணவனுக்குப் பணி செய்ய விரும்பும் துணைவிக்கும் முக்கியத்துவம் கொடுக்கும் நல்ல நோக்கத்துடனேயே ரூசோ அவ்வாறு கூறினார் என நியாயம் காண முற்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியர் கல்வியும் ரூசோவும்

'ஆசிரியர் ஞான விளக்குகள்' என்ற சோக்கிரடீசின் கருத்தைத் தழுவியதே ரூசோவின் ஆசிரியர் கல்வி பற்றிய கருத்தாகும். ஆசிரியர்கள் போதனையிலும் சாதனையிலும் எடுத்துக்காட்டாக விளங்க வேண்டும். அவர்கள் நிறைந்த ஞானமுள்ளவராக இருக்க வேண்டும். சமூக ஊழல்களை அகற்றும் ஆற்றலுள்ளவர்களாக இருக்க வேண்டும். கடமைகளை நன்கு உணர்ந்தவர்களாக, குழந்தைகள் செய்யும் தவறுகளினால் ஏற்படும் தாக்கங்களைத் தாமே பொறுப்பேற்கும் தன்மை உடையவர்களாக, மன்னுயிர்த் துன்பங்களைத் தன்னுயிர்த் துன்பங்களாக மதிப்பவராக, கருணையுள்ளம் கொண்டவர்களாக, துன்பம் துடைக்கும் தூய உள்ளம் கொண்டவர்களாக இருந்து குழந்தைகளிடம் நற்பண்பை வளர்க்க வேண்டும். அடக்குமுறையாலன்றி குழந்தைகளை அன்பால் ஆட்கொள்பவராக இருக்க வேண்டும். இப்பண்புகளையுடைய நல்லாசிரியர்களை உருவாக்குவதற்காக அமைந்ததே ரூசோவின் ஆசிரியர்களுக்கான கல்வியாகும்.

## சமயக் கல்வியும் ரூசோவும்

ரூசோ மதபீடங்களின் மமதைப் போக்கினைக் கண்டித்தார். மதம் என்ற போர்வையால் ஏற்படும் மாசுக்களையே கண்டித்தாரன்றி, சமயம் தேவையில்லையெனக் கூறவில்லை. 'சமயமே மனித வாழ்வின் ஒழுக்கநெறிக்கு வழிவகுக்கும்' எனக் கூறிய ரூசோ, முதிர் பருவத்திலேயே சமயக் கல்வி வேண்டுமென ஆரம்பத்தில் கூறினாலும், பின்னர் குழந்தைப் பருவத்திலேயே இறையுணர்வு பற்றிய அறிவைக் கொடுக்க வேண்டும் எனக் கூறினார். எனவே, ரூசோ சமயக் கல்வியை ஆதரிப்பவர் ஆவார்.

பொதுவாக நோக்கினால், ரூசோவின் கல்வி முறைகளைச் சிறிதளவேனும் பின்பற்றாத கல்வி முறைகளே இல்லையெனலாம். பெரும்பாலான கற்பித்தல் முறைகள் ரூசோவின் சிந்தனையினின்றும் மலர்ந்தவையே. பிள்ளையின் முக்கியத்துவத்தை உணர்ந்து அதன் விருத்திக்கேற்ற வழிவகைகளை உளவியல் அடிப்படையில் காட்டியவர் அவரே. மனிதனின் சுதந்திரம், சமத்துவம், அடிப்படை உரிமைகள், சகோதரத்துவம் என்பவற்றை வற்புறுத்தியவரும் அவரே. ரூசோவின் கருத்துக்களே இன்று அனைத்துலக மனித உரிமைப் பிரகடனத்தின் அத்திவாரமாக அமைந்துள்ளன. "கற்பித்தல் என்பது கருத்தற்ற சொற்கூட்டங்களை மனனம் செய்வதல்ல; புலனனுபவத்துடன் இணைந்து முழு மனிதனை உருவாக்க அது உதவ வேண்டும்" என்ற தலைசிறந்த கருத்தைக் கொண்டவர் ரூசோ.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனால் ரூசோவின் கல்வித் தத்துவக் கருத்துக்கள் கல்வியுலகில் என்றுமே நிலைபேறுடையன என்பதை உணர்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5

# கல்வியில் இயற்கைவாதம்

## இயற்கைவாதம் என்றால் என்ன?

இயற்கையே அனைத்தும் என்பது இயற்கைவாதத்தின் அடிப்படையாகும். இயற்கைவாதத்தை ஒரு மனப்பாங்கு எனவும் கொள்ளலாம். அதாவது இயற்கையே அனைத்தும் என மனத்தில் ஏற்படும் ஒரு நம்பிக்கை எனக் கருதலாம். இயற்கைவாதம் தத்துவப் பிரச்சினைக்கு விடையாக இயற்கை நியமத்தையே கொண்டுள்ளது. இயற்கையே முழுமையான உண்மை எனக் கொள்கிறது. நியமங்கள் இயற்கைக்கு அப்பாற்பட்டவை என்பதை அது ஏற்பதில்லை. எந்தவகை நியமமும் இயற்கையே, இயற்கைக்கு உட்பட்டதே என இயற்கைவாதம் கொள்கிறது. மனித வாழ்க்கை என்பது இயற்கைத் திட்டத்தின் அல்லது விதியின் ஓர் அம்சம். விஞ்ஞானத்தால் கண்டறியப்பட்டு வெளிப்படுத்தக் கூடிய, மறைக்கப்பட்டனவும் நம்மால் அறிய முடியாதனவுமான யாவும் இயற்கையின் ஒரு பகுதியே என இயற்கைவாதம் கூறுகிறது. இவ்வாறான இயற்கைவாதம் பற்றி 'வாட்' (Ward) என்பவர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்: "இயற்கைவாதமானது இறைவனிலிருந்து இயற்கையைப் பிரிக்கின்ற ஒரு கோட்பாடு, மாற்ற முடியாத உச்ச விதியாக ஆத்மாவை பௌதீக அம்சங்களுடன் இணைப்பது". எனவே இயற்கையே அனைத்தும் என்பது இயற்கைவாதம் என உணரலாம்.

இயற்கைவாதம் விஞ்ஞான ரீதியாக ஒரு வாழ்க்கைத் தத்துவத்தை அமைக்க முயற்சிக்கின்றது. பௌதீகம் மனித இனத்திற்கு நன்மை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளிப்பது என்ற வகையில், இயற்கைவாதமானது பௌதீக விஞ்ஞானத்தில் முழு நம்பிக்கை கொண்டுள்ளது. விஞ்ஞான முறையான அவதானமும், ஆராய்வும் மட்டுமே தத்துவ அடிப்படைகளைக் கண்டறிகின்றன என அது நம்புகின்றது.

## கல்வியில் இயற்கைவாதம்

இயற்கைவாதம் ஒரு கல்வித் தத்துவமாகப் பதினெட்டாம் நூற்றாண்டில் விருத்தியடைந்தது. ஒரு வழியில் கல்வியின் உளவியல், விஞ்ஞான, சமூகவியற் போக்குகள் இயற்கை வாதத்திலேயே வேர்கொண்டுள்ளன. ஆகவே, ஒரு கல்வியியல் மாணவனுக்கு இயற்கைவாதத்தில் விஷேட அக்கறை இருத்தல் வேண்டும். கல்வியானது குழந்தையின் இயற்கை இயல்புகளுக்கேற்பக் கட்டாயமாக அமைய வேண்டுமென இயற்கைவாதம் நம்புகிறது. இயற்கையின்படி கல்வியானது பின்வருவனவற்றில் ஏதாவது ஒரு கருத்தாக இருக்கலாம்.

1. கல்வி முறைக்கு இயற்கை விதிகளைக் கண்டறிதல், உருவாக்குதல், பிரயோகித்தல்

2. இயற்கை விதிகளுக்கேற்ப மனித விருத்திக்கான கல்வி

3. எல்லாச் செயற்கையானவற்றிலிருந்தும் இயற்கைக்குத் திரும்புதல்

கல்விச் சிந்தனைக்கு இந்த இயற்கைவாத எண்ணக்கரு மிகப் பெரிய பங்களிப்பைச் செய்து கொண்டிருக்கிறது. கல்வியில் இயற்கைவாதமானது உயர்வர்க்கத்தினருடைய செயற்கையான வாழ்க்கை முறைக்குக் கடுமையான எதிரியாக இருந்து வருகிறது. செயற்கையான முறையில் குழந்தைகளுக்குப் பயிற்சியளிப்பதை இயற்கைவாதம் எதிர்த்து விமர்சிக்கிறது. குழந்தைகளின் இயற்கையான இயல்புக்கு ஊக்கமளிப்பதில் இயற்கைவாதம் முனைந்து நிற்கிறது. குழந்தையின் இயல்பான விருத்திக்கு இடையூறாக உள்ள எல்லா அதிகாரங்களையும் இயற்கைவாதம் வெறுக்கின்றது. இந்த வகையில், இயல்பான தனியியல்புக்கு இயற்கைவாதம் மகத்துவமளிக்கிறது.

## இயற்கைவாதமும் கல்வியின் நோக்கங்களும்

ஒவ்வொரு தனியாளுக்கும் வாழ்க்கையின் எல்லா அம்சங்களிலும் சமத்துவமுள்ள ஒரு சமூகத்தை உருவாக்குதல் மூலம் தனியாளின் இயற்கை நலன்களையும், நன்மைகளையும் இயற்கைவாதம் பாதுகாக்க முன்னிற்கிறது. சமூகத்தின் எல்லா வகையான தீய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக்கங்களிலிருந்தும் பிள்ளையைப் பாதுகாக்க இயற்கைவாதம் முனைந்து நிற்கிறது. இயற்கைவாதத்தின்படி, கல்வியின் நோக்கமானது பிள்ளையின் இயற்கையான திறமைகளை வெளிக்கொணரப் பூரண சந்தர்ப்பம் அளிப்பதாகும். இவ்வாறு இயற்கைவாதமானது தனியாள் வாதத்தைக் கல்வியில் கொணர்ந்துள்ளது. இயற்கைவாதத்தின்படி, கல்வியானது சில எதிர்காலக் கருமங்களுக்கான ஆயத்தமல்ல; உண்மையில் கல்வியே வாழ்க்கையாகிறது. கல்வியானது இல்லாததிலிருந்து பிள்ளைக்குத் திணிக்கும் ஒரு முறையல்ல. கல்வியானது குழந்தையை விருத்தியாக்கும் ஓர் இயற்கை வழிமுறையே.

## இயற்கைவாதமும் கல்வியின் வகைகளும்

இயற்கைவாதம் சிறப்புக் கல்வியை நம்புவதில்லை. அது பொதுவான சுதந்திரமான கல்விக்கே உடன்பாடானது. உதாரணமாக பிள்ளையின் முழுமையான கல்விக்காக அதன் முழுமையான ஆற்றலையும் விருத்தியாக்கலைக் குறிப்பிடலாம். இந்த வகையில், முழுமையான மனிதனையுருவாக்குதலில் ரூசோ முழு நம்பிக்கை கொண்டிருந்தார் எனலாம். இயற்கையான கல்வி இயற்கையான மனிதனை உருவாக்கும். மனிதனை இரு வேறு மனிதனாக உருவாக்க முடியாது. ஒரு மனிதனாக உருவாக்குவதே மனிதனது ஒரே செயல் என்பது ரூசோவின் கருத்தாகும். மனிதன், கைத்தொழில் நாகரிகச்சூழலுக்கு இயைந்து போகக்கூடிய வகையில் விருத்தியாக்கப்படல் வேண்டும். சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் முதலிய ஜனநாயகக் கோட்பாடுகளுக்காக எப்போதும் குரல் கொடுக்கும் வாதமாக இயற்கைவாதம் அமைகிறது. இயற்கைவாதம், உடற்பயிற்சி, சுகாதாரக் கல்வி என்பவற்றின் தேவையை வலியுறுத்துகிறது. ரூசோ நல்ல பல சுகாதார விதிகளைக் கூறுகிறார். குழந்தையின் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தக் கூடாது என்கிறார். குழந்தை உடல் நலமுள்ளதாக வாழ அதனைப் பல்வேறு சூழல்களுக்கும் பழக்கப்படுத்த வேண்டும் என்கிறார்.

ரூசோ ஒழுக்கக் கல்வியை, போதனையாகவன்றி அனுபவமாக்க வேண்டும் என்கிறார். ஒழுக்கக் கல்வி, இயற்கையான செயற்பாடுகளாக இருக்குமானால், அதுவே ஒழுக்க அனுபவங்களாகும் என ரூசோ குறிப்பிடுகிறார்.

அறிவுசார் கல்வியைப் புலன்களின் முறைசார் பயிற்சியாக மட்டுப்படுத்துகிறது இயற்கைவாதம். குழந்தையின் இயற்கை ஆர்வத்தையும் நாட்டத்தையும் தூண்டுதல் மூலம் குழந்தையின் புலனாற்றலை விருத்தியாக்கலாம் என்கிறது. பிள்ளை தன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்துக்களைச் சுதந்திரமாக வெளிப்படுத்த ஊக்குவித்தலும் சந்தர்ப்பமளித்தலும் வேண்டும். விஞ்ஞான ரீதியான அவதானத்துக்கும், ஆய்வில் ஈடுபடுவதற்கும், அவற்றின் மூலம் முடிவுகளை எடுப்பதற்கும் போதிய சந்தர்ப்பங்கள் அளிக்கப்பட வேண்டும். நூல்களில் அதிகளவு தங்கியிருத்தல் அறிவு விருத்திக்குத் தடையாகும் என்கிறது இயற்கைவாதம்.

இயற்கைவாதம் சமயத்தை மறுக்கவில்லை; வரவேற்கிறது. ஆனால் சமயம் என்பது உளம் சார்ந்த அம்சமாகும். சமயம் காரணம் காண்பதற்கு அன்று. அது உணர்வதற்காகவே என்கிறது. ஒவ்வொரு பிள்ளையும் தனது சமயத்தை அனுஷ்டித்து விருத்தியாக்க அனுமதிக்கப்படல் வேண்டும் என்பதில் இயற்கைவாதம் உடன்பாடானதாகும்.

## இயற்கைவாதமும் கல்வியின் உள்ளடக்கமும்

கல்வியின் உள்ளடக்கம் பற்றியும் இயற்கைவாதம் கருத்துக்களை வெளியிடுகிறது. இயற்கைவாதம் மரபுவழிக் கல்வியையன்றி எதிர்மறைக் கல்வியையே நம்புகிறது. குழந்தைக்குப் பாரம்பரிய முறையில் கல்வி போதிக்கப்படக் கூடாது; இயற்கை அடிப்படையில் அமைந்த கலைத்திட்டமே முன்வைக்கப்பட வேண்டும். உயர்வர்க்கம் கட்டியெழுப்பிய, பாரம்பரிய பழக்க வழக்கங்கள், கருத்துக்கள், அறிவு, தகவல்கள் என்பன கலைத்திட்டத்தில் இடம்பெறக் கூடாது. பிள்ளையின் இயல்பான நாட்டங்களுக்கும், செயற்பாடுகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்தல் வேண்டும். பிள்ளையின் தேவைகளைப் பூர்த்தி செய்வதும் இயற்கையான கற்றலை மலரச் செய்வதும் கலைத்திட்டத்தின் நோக்கமாயிருத்தல் வேண்டும். கலைத்திட்டம் பிள்ளையின் வாழ்க்கைத் தேவைகளிலிருந்து தோன்றும் செயற்பாடுகளைக் கொண்டிருத்தல் வேண்டும். ஆடுதல், பாய்தல், ஏறுதல், நீந்துதல் என்பன பிள்ளையின் இயற்கையான செயற்பாடுகள். அவை ஊக்குவிக்கப்படல் வேண்டும். புலன்வழி இயக்கம், செயல் முறையிலான தீர்மானம், விவசாயம், தச்சுவேலை என்பன அறிமுகப்படுத்தப்படல் வேண்டும். எண் கணிதம், கேத்திர கணிதம் என்பன பிள்ளையின் இயற்கையான வாழ்வில், பரீட்சார்த்த செயற்பாடுகளாகக் கற்பிக்கப்படல் வேண்டும். வான சாத்திரமும், புவியியலும் நூல்களின் மூலமல்லாது நேரடியாக இயற்கையிலிருந்தே கற்பிக்கப்படல் வேண்டும். இவை இயற்கைவாதக் கல்வியின் உள்ளுறைகளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயற்கைவாதமும் கல்வி முகவர்களும்

கல்விக்கான முகவர்களையும் இயற்கைவாதம் விதந்துரைக்கிறது. "குழந்தை பிறப்பின் போதே மாணவர் ஆகிவிடுகிறது; போதனையாளரால்ல, இயற்கையால்" என ரூசோவே குறிப்பிடுகிறார். ஆகவே, இயற்கைதான் குழந்தையின் முதன்மை ஆசிரியர் என்பது நினைவில் வைக்கப்படல் வேண்டும் என இயற்கைவாதம் வலியுறுத்துகிறது. பிள்ளையின் கல்வி குடும்பத்தால் ஆரம்பிக்கப்பட்டு அரசினால் கையேற்கப்படல் வேண்டும். இயற்கைவாதத்தின்படி இயற்கைக்கு அடுத்த கல்வி முகவர்களாக அமைபவர்கள் தந்தை, தாய், தாதி, ஆசிரியர், போதனையாளர், பயிற்சி பெற்ற ஆசிரியர் ஆகியோராவர்.

## இயற்கைவாதமும் கல்வி ஒழுங்கமைப்பும்

இயற்கையான வளர்ச்சி விதிகளுக்கிணங்க கல்வி மிகவும் கவனமாக ஒழுங்கமைக்கப்பட வேண்டுமென இயற்கைவாதம் நம்பிக்கை கொள்கிறது. ரூசோ நான்கு வளர்ச்சிக் கட்டங்களைக் குறிப்பிடுகிறார். அவை;

| | |
|---|---|
| பிறப்பு முதல் 5 வயது வரையானது | - குழந்தைப்பருவம் |
| 5-12 வயது வரையானது | - பிள்ளைப்பருவம் |
| 12-15 வயது வரையானது | - சிறார்ப்பருவம் |
| 15-20 வயது வரையானது | - கட்டிளமைப்பருவம் |

என்பனவாகும்.

ஒவ்வொரு பருவத்திற்குமேற்பக் கலைத்திட்டம் அமைய வேண்டுமென ரூசோ குறிப்பிடுகிறார்.

## இயற்கைவாதமும் கல்வி முறைகளும்

இயற்கைவாதம் சகல கல்விச் செயன்முறைகளுக்கும் மேலான மையமாகப் பிள்ளையையே குறிப்பிடுகிறது. கல்வி நுட்பங்கள் குழந்தையின் இயற்கைக்கும் வளர்ச்சிக்குமேற்பத் தீர்மானிக்கப்படல் வேண்டும். இயற்கைவாதம் நவீன கற்பித்தலின் பிரதான மூன்று அடிப்படைகளைக் கொண்டுள்ளது. அவை;

1. வளர்ச்சியின் அடிப்படை
2. மாணவர் செயற்பாட்டின் அடிப்படை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. தனியாள் மயப்படுத்தலின் அடிப்படை

என்பன.

வாழ்வின் இயற்கையான தேவைகள் மனித வளர்ச்சியின் பிரதான உந்து சக்திகளாகும். இத்தேவைகளை வழங்குவது மனித குலத்தின் எல்லா அம்சங்களையும் விருத்தியாக்கும். குழந்தை தேவையை உணர்கிறது. அதன்பின் அது சில நடத்தைகளுக்குத் தூண்டப்படுகிறது. அதனால் அனுபவம் பெறுகிறது. அந்த அனுபவங்களின் அடிப்படையில் அது தனது அறிவைக் கட்டியெழுப்புகிறது. கல்வி முறை மேற்கொள்ள வேண்டிய இயற்கையின் ஒழுங்கு இதுவேயாகும். அதாவது ஆசிரியரது செயற்பாடு குழந்தையின் இயற்கையான வளர்ச்சிக்கு வழிகாட்டுவதாகவே இருத்தல் வேண்டும் என இயற்கைவாதம் கருதுகிறது. வளர்ச்சியின் இயற்கை அடிப்படைகளை ஆசிரியர் பின்பற்றுவதன்றி கற்பிக்கவோ கற்றலை நடைமுறைப்படுத்தவோ கூடாது என்பதே இதனால் உணரப்பட வேண்டியதாகும்.

ஒவ்வொரு குழந்தையும் அதாவது சொந்த இயற்கை இயல்பின்படி வளர அனுமதிக்கப்பட வேண்டுமென்பதே தனியாள் மயப்படுத்தலின் அடிப்படைக் கருத்தாகும். குழந்தை சமூகத்துக்காகப் பலியிடப்படக் கூடாது. தனியாளின் விருப்பங்களும் தேவைகளும் சமூகத்தின் எந்தப் பிரதான அம்சத்தையும் விட மேலானதாகக் கருத்திலெடுக்கப்பட வேண்டும். குழந்தையின் தனித்தன்மை நசுக்கப்படக் கூடாது. குழந்தை சமூக ஒருமைப்பாடென்ற அச்சினுள் வலிந்து திணிக்கப்படக் கூடாது. கல்வி குழந்தையின் தேவைக்கேற்ப இயைபுபடுத்தப்படல் வேண்டுமே தவிர தீர்மானிக்கப்பட்ட கல்விக்கேற்ப குழந்தை தன்னை இயைபுபடுத்த வேண்டுமென வற்புறுத்தக் கூடாது. குழந்தை தனது இயற்கையான இயல்புக்கேற்ப இயங்குவதையே இயற்கைவாதம் விரும்புகிறது. அதாவது, இயற்கைவாதமானது பாடசாலையின் ஒழுகலாற்றினை முழுமையாக, புதிதான அடித்தளத்தின் மீதே கட்டியெழுப்ப விரும்புகிறது.

## நவீன கல்வி முன்னேற்ற இயக்கம்

அதிகமான கல்வியியலாளர்கள் இயற்கைவாதக் கோட்பாடுகளையே அடியொற்றிச் செல்கின்றனர். அவர்களது கல்வி நோக்கங்கள் இயற்கை விதிகளையே தழுவிச் செல்கின்றன. மனித வர்க்கத்தினதும், தனியாளதும் இயற்கையான வளர்ச்சிக்குத் தடையாக இருக்கும் எல்லா இடையூறுகளையும் அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகற்றவே விரும்புகிறார்கள். முன்னேறிச் செல்லும் நவீன கல்விக்கான இயற்கைவாதத்தின் தற்கால விளக்கவாளர்களாக அவர்களைக் குறிப்பிடலாம்.

இறுதியாக, இயற்கைவாதம் தரும் கல்விக் கருத்துக்களைப் பின்வருமாறு தொகுத்து நோக்கலாம்.

'குழந்தை சமூகத்துக்காகப் பலியிடப்படக் கூடாது. தனியாளின் விருப்பங்களும் தேவைகளும் சமூகத்தின் எந்தப் பிரதான அம்சத்தையும் விட மேலானதாகக் கருதப்படல் வேண்டும். குழந்தையின் தனித்தன்மை நசுக்கப்படக் கூடாது. கல்வி பிள்ளையின் தேவைக்கேற்ப இயைபாக்கம் பெற வேண்டும். சகல கல்விச் செயன்முறைக்கும் பிள்ளையே மையமாகும். கல்வி நுட்பங்களைப் பிள்ளையின் இயற்கைக்கும் வளர்ச்சிக்குமேற்பத் தீர்மானிக்க வேண்டும். கல்வி என்பது இயற்கை விதியைக் கண்டறிதல், உருவாக்குதல் என்பனவேயாகும். கல்வி என்பது மனிதனை விருத்தி செய்வதற்கேயாகும். எல்லா வகைச் செயற்கைகளிலிருந்தும் இயற்கைக்குத் திரும்புதல் அவசியம். ஒழுக்கத்தைப் போதிப்பதை விட அதை அனுபவமாக்க வேண்டும். நூல்களில் அதிகம் தங்கியிருத்தல் அறிவு விருத்திக்குத் தடையாகும்.

சமயம் என்பது உள்ளத்தைச் சார்ந்த அம்சம். அது உணர்வதற்காகவன்றிக் காரணம் காண்பதற்காகவன்று. எனவே, ஒவ்வொரு பிள்ளையும் தனது உள்ளத்தை விருத்தியாக்க அனுமதிக்கப்படல் வேண்டும்' இயற்கைவாதத்தின் இந்தக் கருத்துக்களைக் கவனத்தில் கொள்ளும் நாம் கூறக்கூடியது என்ன? நிகழ்காலத்துக்கு இட்டுச் செல்லும் எல்லா நவீன கல்விப் பாதையின் நுழைவாயில்களிலும் ரூசோவே தமது இயற்கைவாதக் கருத்துக்களோடு காணப்படுகிறார் என்பதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6

# கல்வியில் பயன்பாட்டு வாதம்

## பயன்பாட்டு வாதம் என்பது...

நடைமுறைச் சூழலில் தற்காலப் பயன்பாட்டை அடிப்படையாகக் கொண்டதே பயன்பாட்டு வாதமாகும். தத்துவார்த்த விளக்கங்களை முன்வைக்கும் பல்வேறு கோட்பாடுகளில் அண்மைக்காலத்தில் வளர்ச்சியடைந்த கோட்பாடே பயன்பாட்டு வாதம் எனலாம். இது அமெரிக்கத் தத்துவஞானிகளான ஜோன் டியூவி, சீ.எஸ்.பியர்ஸ், வில்லியம் ஜேம்ஸ், சில்லர் ஆகியோரின் கருத்துக்களின் வெளிப்பாட்டால் உருவாக்கம் பெற்றதாகும். ஆகவே, பயன்பாட்டு வாதம் ஓர் அமெரிக்க உற்பத்தி என்பர்.

மாற்றமடைகின்ற அநித்தியமான உலகத்திலே, நித்தியமான, மாற்றமடையாத நோக்கங்கள் இருக்க முடியாது என்பது பயன்பாட்டு வாதிகளின் பிரதான கருத்தாகும். அதாவது உலகம் நிரந்தரமற்றது; நிரந்தரமற்ற உலகிலே எவ்வித நிரந்தரமான நோக்கங்களோ, செயற்பாடுகளோ இருக்க முடியாது. மாற்றமடைகின்ற உலகிற்கேற்ப, புதிய புதிய கருத்துக்களும், சிந்தனைகளும் தோற்றம் பெறுகின்றன. அவை பின்னர் பழமையடைய, மீண்டும் புதியன தோன்றுகின்றன. எனவே எவையும் நித்தியமானவையல்ல. நிதர்சனமாக இன்று என்ன நிலவுகிறதோ அதுவே உண்மை. எக்கருமம் பயன்பாடுடையதோ அதுவே நல்லதும் சரியானதுமாகும் எனக் கருதும் இவர்கள், யாதேனும் கருத்தினால் பயன்பாடு கிடைக்கப் பெறாவிடின், அது தவறானதும், தீயதுமாகும் எனக் கருதுகின்றனர். அனுபவங்களுக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடுகளுக்கும் முதன்மையிடம் கொடுக்கும் இவர்கள், உயிர்ப்பான செயற்பாடுகளுடைய அறிவே பொருத்தமுடையது என்கின்றனர்.

கடந்தகால நிகழ்வுகள் கடந்த காலத்தனவே; அவை நிகழ்காலத்துக்குப் பொருத்தமற்றவை. எதிர்கால நிகழ்வுகளும் நிச்சயமற்றனவே. எனவே, அவற்றையும் ஏற்க முடியாது. இன்று நிதர்சனமாக உள்ள நிகழ்வுகளையும் அனுபவங்களையுமே ஏற்க முடியும். ஒருவரது நோக்கங்களை நிறைவு செய்து அவரது வாழ்க்கையை விருத்தி செய்யும் நிலையே உண்மையானது. எல்லாக் கருத்துக்களும் அவை தோன்றும் சூழலுடன் தொடர்புடையன. அனுபவங்களும் அத்தகையனவே. அவ்வாறான கருத்துக்களோ, அனுபவங்களோ நிரந்தரமானவையல்ல. அதேபோல நிரந்தரமான விழுமியங்களும் இல்லை. அவையெல்லாம் மாற்றமடைவனவே. ஆகவே அவற்றை ஏற்க முடியாது. எனவே, நிகழ்காலச் சூழலும் அதன் செயற்பாடுகளும் அனுபவங்களுமே உண்மையென ஏற்கக் கூடியவை. இவ்வாறான கருத்துக்களை வலியுறுத்துவதே பயன்பாட்டு வாதமாகும்.

பயன்பாட்டு வாதத்தை மானுட இயல்பு, பரிசோதனை இயல்பு, உயிரியல் இயல்பு ஆகிய மூன்று அமைப்புகளிற் காணலாம். மானுட இயல்பு பயன்பாட்டு வாதத்தின்படி, எது மனிதனின் தேவைகளை நிறைவு செய்கிறதோ அதுவே உண்மையாகும். பரிசோதனை இயல்பு பயன்பாட்டு வாதத்தின்படி, எந்த உண்மை பரிசோதனையின்படி பகுத்தாயக் கூடியதாக உள்ளதோ - அதாவது தொழிற்பாடுடையதோ அதுதான் உண்மை. உயிரியல் பயன்பாட்டு வாதமோ, தனது செயலில் சொந்த விதியைச் சரியாக ஒழுங்கமைப்பதற்கான மனித ஆற்றலில் அதிகளவு நம்பிக்கை கொண்டுள்ளது.

மனிதன் ஆற்றல் வாய்ந்தவன். அவன் தானாகவே சிறந்த சூழலை உருவாக்கக் கூடியவன். மனிதன் ஓர் உயிரியற் சமூகப்பிராணி. சமூக உயிரியற் சூழலுக்கேற்ப அவன் இயங்குபவனும் துலங்குபவனுமாவான். அவன் தற்போதைய பிரச்சினையில் நாட்டமுள்ளவனாக இருப்பதோடு அண்மித்த எதிர்காலத்திலும் நாட்டம் காட்டுபவன். கடந்த காலம் கடந்த காலமே. நாளை வேறொரு பிரச்சினையுடன் கூடிய வேறொரு நாள். எனவே மனிதனது கவனம், வேறெதையும் விட நிகழ்காலத்தைப் பற்றியதாகவே இருக்க வேண்டும் எனக் கருதுகிறது பயன்பாட்டு வாதம். எனவே பயன்பாட்டுவாதி, நிகழ்கால உணர்வுடைய நடைமுறையிலுள்ளனவற்றையே இலட்சியமாகக் கொண்டுள்ளான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயன்பாட்டு வாதம் - அறிஞர்களின் கருத்துக்கள்

சீ.எஸ்பியர்ஸ் என்பவரின் கருத்துக்களே பயன்பாட்டு வாதத்தின் தோற்றத்திற்கு வித்திட்டன என்பர். பியர்ஸ் ஒரு தர்க்கவியலாளரும், அதீத பௌதீகவியலாளருமாவார். - 'எந்த எண்ணக்கருவும் இறுதியானதன்று; செயற்பாடே முக்கியமானது. மாற்றங்கள் சதா நிகழ்ந்து கொண்டிருப்பவை. எதுவும் நிரந்தரமானவையல்ல. எண்ணக்கருக்கள் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவை. கற்றலின் நோக்கம் அவற்றிலுள்ள பொருத்தமான கருத்துக்களை அறிதலாகும். எண்ணக்கருவைச் சரிபார்த்து விருத்தியாக்குதல் மூலமே தர்க்கச் சிந்தனை சாத்தியமாகும்' - இவைகள் பியர்ஸின் கருத்துக்களாகும்.

வில்லியம் ஜேம்ஸ் என்பவர் பியர்ஸிடமிருந்தே நிகழ்காலச் செயற்பாடுகள் பற்றிய அம்சங்களைப் பெற்றுக் கொண்டார். சிந்தனை, செயற்பாடு என்பன மனிதனுடைய விருப்பங்களையும் நாட்டங்களையும் திருப்தி செய்ய வேண்டும். அது அனுபவத்தின் பாற்பட்டது. இது இலட்சியவாதிகள் கூறுவது போன்றதல்ல. அனுபவம்தான் மேலானது. விழுமியங்களும் பிறவும் அதனுள்ளேயே விருத்தியடைகின்றன. உண்மையென்பது முழுமையானதல்ல. தொழிற்படுவதுதான் உண்மையாகும். தொழிற்பாடு நோக்கத்தையும் தேவைகளையும் நிறைவு செய்ய உதவியாயிருக்க வேண்டும். அதுதான் பயன்படுதன்மை கொண்டது என ஜேம்ஸ் குறிப்பிடுகிறார்.

ஜோன் டியூவின் கருத்துக்கள் பயன்பாட்டு வாதத்துக்கு நடைமுறை சார்ந்த தெளிவான விளக்கமளித்தன எனலாம். "மனிதனை இயற்கையிலிருந்து பிரிக்க முடியாது. மனிதனுக்கும் இயற்கைக்கும் உள்ள இடைத்தொடர்பே அதற்கான அடிப்படைக் காரணியாகும். மனிதன் சூழலை உருவாக்குகிறான். சூழலானது மனிதனை வடிவமைக்கிறது. அவனது வாழ்வு பல்வேறு அனுபவங்களுடன் செயலில் வளம் பெறுகிறது. அவன் தனது செயற்பாடுகளை ஆக்கத்திறனான விவேகத்தால் ஒழுங்கமைத்துக் கொள்கிறான். அது வாழ்க்கைக்கான யதார்த்தமாகிறது. இயற்கை உலகிற்கு அப்பால் மனித அனுபவங்களுக்கு மேலாக உண்மையைத் தேடுவது பயனற்றது" எனக் குறிப்பிடுகிறார் ஜோன் டியூவி.

வாழும் வாழ்க்கையும் செயற்பாட்டால் ஏற்படும் உயர்ச்சியும் செயலாற்றல் மிக்கவையெனக் குறிப்பிடும் டியூவி, 'ஒவ்வொரு மனிதனும் அவனுக்கேயுரிய அனுபவங்களைக் கொண்டுள்ளான். அவற்றிலிருந்து அவன் தானாகவே முடிவுகளை எடுத்துக் கொள்கிறான். அனுபவத்தின் செயற்பாடு எதுவெனில், எவ்வாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்செல்வது என்பதைக் கற்றலும் பயன்பாடுடையதாக வாழ்தலுமாகும்' எனவும் குறிப்பிடுகிறார்.

தனிப்பட்ட அனுபவங்கள் அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்லக்கூடாது. அவை பொது விசாரணைக்கும் திருத்தத்திற்கும் வழியமைத்தல் வேண்டும். பொது விசாரணை முறையானது உணர்ச்சி வேகமானதாகவோ ஒழுங்கீனமானதாகவோ இருத்தலாகாது. அது விஞ்ஞான பூர்வமாகவும் தருக்க ரீதியாகவும் இருத்தல் வேண்டும். உண்மை அறிதல் அல்லது கண்டறிதல்கள் தனிமனிதன் ஒருவனுக்கு மட்டும் உரியதன்று. அது அனைவருக்கும் சொந்தமானது. அது பல தனியாட்களின் கூட்டு முயற்சியாகும். அது பல அனுபவங்களைப் பல அசைவுகளில் கொண்டதாகும் எனவும் டியூவி கருதுகிறார்.

பயன்பாட்டு வாதத்தின் தோற்றத்திற்கான கருத்துக்களை முன்வைத்த கல்வித் தத்துவஞானிகளின் கூற்றுக்களை ஒருங்கே தொகுத்து நோக்கலாம். நடைமுறை அனுபவம், செயற்படுதன்மை என்பன உண்மையானவை. எவையும் நிரந்தரமானவையல்ல. காலமாற்றத்திற்கேற்ப புதியவைகள் தோன்றிக் கொண்டேயிருக்கும். கடந்த காலம் கடந்த காலமே. எதிர்காலம் கூட நிச்சயமற்றதே. நிகழ்காலத்தில் உள்ளவையே உண்மையானவை.

## கல்வியில் பயன்பாட்டு வாதம்

பயன்பாட்டு வாதத்தின்படி, கல்வியானது மாணவனது சொந்த நலனுக்காக அறிவைப் பகிர்ந்தளிப்பதற்காகவன்று. கல்வியானது உயிரியல், சமூகவியற் சூழலில் குழந்தை தனது தேவைகளைச் சந்திப்பதற்கு உதவுவதற்காகவே. பயன்பாட்டு வாதம் தத்துவத்தின் சக்தி வாய்ந்த ஓர் அம்சமாகக் கல்விக்கு மதிப்பளிக்கவில்லை. அதாவது கல்விசார் பயிற்சி அல்லது செயற்பாட்டிலிருந்து வெளியாகும் ஒரு தத்துவமாகவே அது இருக்கிறது. பயன்பாட்டு வாதத்தைப் பொறுத்து எல்லாக் கல்வியியல் விழுமியங்களும் அவர்கள் வாழ்வில் ஏற்படுத்தும் வேறுபாடுகளுக்கேற்ப மதிப்பீடு செய்யப்படல் வேண்டும். கல்வியின் பயன்பாட்டுப் பார்வையில் இது சார்பாக ஜேம்சும், டியூவியும் இரு தலைமை விளக்கவாளர்களாகக் காணப்படுகின்றனர்.

பயன்பாட்டு வாதத்தின் இத்தகைய கருத்துக்கள் இன்று மிகவும் வரவேற்கப்படுகின்றன. காரணம் குழந்தையின் நிகழ்காலத் தேவைகளை நிறைவேற்றாத கல்வி முறை நடைமுறையில் இல்லாத போது, பயன்பாட்டு வாதக் கருத்துக்கள் இயல்பாகவே முனைப்புப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறும். குழந்தையின் தேவைகளை நிறைவேற்றாத கல்வி வீணானதேயாகும். எனவேதான் பயன்பாட்டு வாதம் பிள்ளையின் நிகழ்காலத் தேவை எதுவோ அதைக் கல்வியானது நிறைவாக்க வேண்டும் என்கிறது. அதனால், இக்கோட்பாடு இன்று முக்கியத்துவம் பெறுகிறது.

## பயன்பாட்டு வாதமும் கல்வி நோக்கங்களும்

பயன்பாட்டு வாதம் ஆளுமையை நம்புவதில்லை. ஆளுமை என்பது ஆய்வுக்குரிய ஒரு விடயமாகும். அத்தோடு அது ஒவ்வொரு சமூகச் சந்தர்ப்பத்துக்குமேற்பக் காணப்படுவது. தளம்புகின்ற ஆளுமை உலகில் கல்வி செய்யக் கூடியதெல்லாம், சமூகப் பின்னணியையும், சமூகக் குணவியல்புகளையும், முழுமையாக உதயமாகும் பரம்பரை அங்கத்தவர்களுக்குக் கையளிக்க வேண்டியதே. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், கல்வியின் நோக்கம் நவீன சமூகத்தின் அங்கத்தினனாகப் பிள்ளையைத் தயார்படுத்தலேயாகும். மாற்றம் பெற்று வரும் புதிய சமூகத்திற்கேற்ற, பொருத்தப்பாடுடைய பிள்ளைகளை உருவாக்குதலே கல்வியின் நோக்கமாகும். இதுதான் நிகழ்காலத் தேவையுமாகும். இலங்கையைப் பொறுத்தும் கடந்த காலங்களில் இத்தகைய பிள்ளைகளை உருவாக்கத் தவறியமைதான் கல்வி முறை மாற்றப்பட வேண்டியதற்கும் பொருத்தமற்ற விளைவுகள் ஏற்படுதலுக்கும் காரணமாயின. மேலும் இந்த நோக்கத்தின்படி செய்ய வேண்டியது யாதெனில், அதற்கான தொழில்நுட்பங்களை வழங்கி, குழந்தைகளை நிகழ்காலப் பிரச்சினைகளைத் தீர்க்கக் கூடிய ஆற்றலுள்ளவர்களாக ஆக்குவதே. அதாவது, கல்வி செய்ய வேண்டியது யாதெனில், குழந்தையைச் சிறந்த பயன்பாட்டுவாதியாக மாற்றுதலாகும். எவ்வாறெனில், அவர்கள் ஒரு நேரத்தில் ஒரு பிரச்சினையை அணுகி புதிய சூழலில், புதிய தொழில்நுட்பத்தோடு சந்தர்ப்ப சூழ்நிலைகளின் தேவைகளுக்கேற்பக் கூட்டுறவாக அப்பிரச்சினையைத் தீர்க்கக் கூடிய ஆற்றலுள்ளவர்களாக அவர்களை ஆக்குதலாகும். கல்வி உலகில் பயன்பாட்டு வாதிகள் உண்மையான அனுபவத்துக்கே முதலிடமளிக்கிறார்கள். பயன்பாட்டு வாதிகள் தனியாட்களை விரக்தியுற்றவர்களாக்காமல் வெற்றி மேல் வெற்றி பெற வல்லவர்களாக ஆக்க முயலுகின்றனர். மனித குலத்துக்கு மனிதச் சூழலில் கருத்துள்ள வெற்றியாளர்களைப் பயிற்ற முயலுகிறார்கள். பயன்பாட்டு வாதத்தின் படி, கல்வியின் நோக்கம், சுதந்திர இயைபுடைய, விழிப்புள்ள மனித குலத்தை உயிரியல், சமூகவியல் சுற்றாடலில் படைப்பாற்றல் நடத்தையுள்ளவர்களாக ஆக்குதலேயாகும். ஏனெனில், தனிமனிதன் சுற்றாடலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னைத்தானே இயைபுபடுத்திக் கொள்வதை மட்டும் எதிர்பார்க்கவில்லை. அந்த நிலையில் அவனது தேவைகளுக்கு அதிக கேள்வி இருக்குமானால் அவற்றை மேலும் மேலோங்குவிப்பதையும் எதிர்பார்க்கிறான்.

## பயன்பாட்டு வாதமும் பாடவிதானமும்

பயன்பாட்டு வாதத்தின்படி, பிரச்சினை ஒன்றன்பின் ஒன்றாக எழுந்து கொண்டிருப்பதால், ஒரு நிரந்தரமான பாடத்திட்டத்தை மேற்கொள்ள முடியாது. காலம் மாறிக் கொண்டிருப்பதால் ஒரு நிலையான கலைத்திட்டம் பொருத்தமான வெளிப்பாடுகளைக் காட்டாது என்பதே இதன் அர்த்தமாகும். பிள்ளைகள் பாடத்தில் நிபுணர்களாக வேண்டும் என்பதைப் பயன்பாட்டு வாதம் விரும்புவதில்லை. பிள்ளைகள் அறிவுக்காகப் புத்தகங்களைப் பயன்படுத்தினாலும், அவர்கள் புத்தகப்பூச்சிகளாவதைப் பயன்பாட்டு வாதம் விரும்பவில்லை. இலங்கையின் கலைத்திட்டம் கடந்த காலத்தில் புத்தகப் பூச்சிகளை உருவாக்கியதால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை நாம் அறிவோம். பெருகிவரும் வேலையில்லாப் பட்டாளமே அதனால் இலங்கை பெற்ற வெகுமதியாகும். இத்தகைய கலைத்திட்டத்தைப் பயன்பாட்டு வாதிகள் விரும்பாததில் விந்தையில்லை.

புத்தகங்களைப் படிப்பதன் நோக்கம் புதிய பிரச்சினையைத் தீர்ப்பதற்கு புதிய தொழில் நுட்பங்களைக் கண்டறிவதேயாகும். இதனால் பிள்ளை பயனுள்ள அனுபவங்களைப் பெற வேண்டும் என்கிறது பயன்பாட்டு வாதம். கலைத்திட்டத்தில் தேவையான திறன்களை வழங்கக்கூடிய பாடங்கள் உள்ளடக்கப்பட வேண்டியதன் அவசியத்தைப் பயன்பாட்டு வாதம் வலியுறுத்துகிறது. இன்றைய இலங்கையின் கல்விக் கலைத்திட்டத்திலும் திறன் வழங்கக்கூடிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பது பயன்பாட்டு வாதத்தின் அடிப்படையிலேயே என்பது கவனிக்கத்தக்கதாகும்.

ஆண் மாணவர்களுக்கு மொழி, சுகாதாரம், புவி யியல், உடற்பயிற்சி, விஞ்ஞானம், விவசாயம் என்பனவும், பெண் மாணவர்களுக்கு வீட்டு விஞ்ஞானமும் கலைத்திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டும் என்பதைப் பயன்பாட்டு வாதம் விதந்துரைக்கிறது. பாடங்கள் அறிவை மட்டும் தருவதாக இருத்தலாகாது. பயனுள்ளவையாகவும் இருத்தல் வேண்டும். இந்த வகைக் கலைத்திட்டத்தையே பயன்பாட்டு வாதம் அனுமதிக்கிறது.

குழந்தையின் வளர்ச்சியில் - அதன் இயற்கையான வளர்ச்சியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவனம் செலுத்தப்பட வேண்டும். கலைத்திட்டம் குழந்தைக்கே முதலிடம் கொடுக்க வேண்டுமேயன்றி புத்தகத்துக்கோ, பாடத்திற்கோ, ஆசிரியருக்கோ அல்ல.... இக்கருத்துக்களால் பயன்பாட்டு வாதமும் குழந்தை மையக் கல்வியையே வலியுறுத்துகிறது எனலாம்.

சிறந்த அனுபங்களை வழங்குவது மூலமே நல்ல கல்விக்கு வழியமைக்கலாம். அனுபவக் கல்வியைக் கலைத்திட்டம் கொண்டிருக்க வேண்டும். சம்பிரதாயப்படியான போதனையைப் பயன்பாட்டு வாதம் எதிர்க்கிறது. கற்றல் ஒரு சுறுசுறுப்பான உயிர்ப்புள்ள செயற்பாடாக இருக்க வேண்டும். அது மந்தமான அறிவு பெறும் செயற்பாடாக இருக்கக் கூடாது. இந்த வகையில் கலைத்திட்டம் அமைய வேண்டுமெனப் பயன்பாட்டு வாதம் கூறுகிறது. குழந்தை விரும்புபவற்றை டியூவி நான்கு பகுப்பாகத் தருகிறார்.

1. கலந்துரையாடல் அல்லது தொடர்பாடலில் விருப்போடு ஈடுபடல்

2. விசாரணை செய்தல் அல்லது பொருட் காட்சிகளைக் கண்டறிதல்

3. பொருட்களை ஆக்குதல் அல்லது கட்டியெழுப்புதல்

4. கலைசார் வெளிப்பாடு

இவைகள் இயற்கையின் வளங்கள், இவற்றில் பயிற்சி பெறுதலில்தான் குழந்தையின் சுறுசுறுப்பான வளர்ச்சி தங்கியுள்ளது என டியூவி குறிப்பிடுகிறார். இவற்றிற்கேற்பக் கலைத்திட்டம் அமைவதையே பயன்பாட்டு வாதம் ஏற்கிறது. இத்தகைய கலைத்திட்டங்களே இன்று பல நாடுகளிலும் பயன்பாட்டில் இருப்பதை நாம் காணலாம்.

பிள்ளை வாசித்தல், எழுதுதல், எண்ணுதல் முதலியவற்றில் ஆற்றலை மேற்கூறிய விருப்பச் செயற்பாடுகள் மூலம் பெறல் வேண்டும். இவற்றில் புலமை பெறுவது இத்தோடு முடிவு பெறாது. இவை கற்றலுக்கான கருவிகளேயாகும்.

ஆரம்பப் பாடசாலைக் கலைத்திட்டத்தில் வாசிப்பு, எழுத்து, எண், இயற்கைக் கல்வி, கைவேலை, வரைதல், ஆக்க வேலை, அழகியற் தொழிற்பாடு என்பன இடம்பெறும். இவை பிள்ளையின் இயல்பான நாட்டங்களுக்கு உகந்தனவாக அமையும். பயன்பாட்டு வாதம் பிள்ளையின் இயற்கையான யதார்த்த நிலையையும், வாழ்க்கையையும் கருத்திற் கொண்டு கலைத்திட்ட உள்ளடக்கத்தைக் குறிப்பிடுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனித்தனிப் பாடங்களாகக் கலைத்திட்டத்தைப் பிரிப்பதைப் பயன்பாட்டு வாதம் விரும்பவில்லை. பயன்பாட்டுவாதி அறிவின் ஒருமைப்பாட்டையும் ஆற்றலையும் நம்புகிறான். ஆகவே அவன் கலைத்திட்ட உருவாக்கலில் ஒருங்கிணைப்புத் தத்துவத்தை மேற்கொள்ள விரும்புகிறான்.

பயன்பாட்டு வாதம் ஏற்றுக் கொள்ளும் கலைத்திட்டத்தை நோக்கினால், நவீன உள்ளடக்கம், உளவியல் அம்சங்கள், பிள்ளை மையம், செயற்பாட்டு அனுபவம் முதலிய பயனுள்ள கல்விசார் நியமங்களை அவதானிக்க முடியும். பயன்பாட்டு வாதத்தின் கோட்பாடுகளை ஏற்றுக் கொண்டுள்ள பல நாடுகளில் இன்று இவ்வகைக் கலைத்திட்டமே நடைமுறையில் உள்ளதை உணரலாம்.

## பயன்பாட்டு வாதமும் ஆசிரியரும்

பயன்பாட்டுவாத ஆசிரியர் முதலில் ஒரு பயன்பாட்டு வாதி. அதன் பிறகே அவர் ஓர் ஆசிரியர். நாம் முன்னர் கண்டது போல, பயன்பாட்டுவாதி ஆரம்பத்தில் உயிரியல், சமூகவியல், சுற்றாடலில் தோன்றும் பிரச்சினைத் தீர்வில் நாட்டமுள்ளவனாகின்றான். அவன் ஒரு மூலாதார அனுபவவாதி, மிக அத்தியாவசியமான பரிசோதனையாளன், ஒரு முயன்று தவறும் மனிதன், பிரச்சினைகள் தோன்றிய சூழ்நிலையோடு பொருந்திப் போய், சிறிது சிறிதாகப் பிரச்சினையைத் தீர்ப்பவன், பயன்பாட்டு வாதியான ஆசிரியர் அதே உளச்சார்போடு பொருந்திப் போய் வகுப்பறையில் தனது மாணவருக்கேற்பத் தனது உளச்சார்பை நன்றாக மாற்றிக் கொள்ளக் கூடியவர். பயன்பாட்டு வாதியான ஆசிரியர் பாடங்களை முறைப்படி கற்பிப்பதில் நம்பிக்கை உடையவரல்லர். உதாரணமாக, அவர் இரசாயனம் கற்பிக்கும் போது பாடநூலை முறைப்படி பின்பற்ற வேண்டும் என்பதில் கரிசனை கொள்ளமாட்டார். முக்கியமாக அவர் பாடநூலை அடியோடே பின்பற்றமாட்டார். அதுவுமன்றி, அவர் தொடர்பற்ற வகையில் ஒரு பரிசோதனையிலிருந்து அடுத்த பரிசோதனைக்குச் செல்வார். ஒவ்வொரு பரிசோதனையும் அதன் இயல்புக்கேற்பப் பூர்த்தியாவதற்கு வகை செய்வார். பிரச்சினைக்கான தொழில்நுட்பங்களைக் காட்டிப் பரிசோதனைகளை நிகழ்த்த ஊக்குவிப்பார். பிரச்சினைகளை மாணவருக்குக் கொடுத்து, அவற்றுக்கான தீர்வுகளை அவர்களே கண்டுகொள்ள வழிநடத்துவார்.

பயன்பாட்டு வாதியான ஆசிரியர் விடயங்களைத் தெரிந்து கொள்வதிலும் பார்க்க, மேலாக அவற்றைச் செய்து காட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையில் வித்துவச் செருக்கோடு தன் மாணவர்களுக்குக் கற்பிப்பார். இந்த வகையில், பயன்பாட்டுவாதியான ஆசிரியர் சோக்கிரடீஸின் முன்மாதிரியைப் பின்பற்றுவார். தனது மாணவருக்குச் சிந்திக்கக் கற்பிப்பார். அறிவதை விட செயலாற்றக் கற்பிப்பார். திருப்பிச் சொல்வதை விடப் புதிதாக உருவாக்கக் கற்பிப்பார். இவ்வாறு சோக்கிரடீஸின் உயரிய சிறப்பான கற்பித்தல் முறையை மேற்கொள்பவனே பயன்பாட்டு வாதியான ஆசிரியனாவான்.

ஆசிரியன் பிள்ளையை வெற்றிக்கு மேல் வெற்றிக்கு இட்டுச் செல்பவன். ஏமாற்றத்திலிருந்து மேலும் ஏமாற்றத்துக்கு இட்டுச் செல்பவனல்லன்.

ஆசிரியன் தான் சேர்த்து வைத்திருக்கும் அறிவையோ, தமது கருத்துக்களையோ, நம்பிக்கைகளையோ மாணவரிடத்தே திணிப்பவனல்லன். மாறாக பிள்ளையின் அறிவு தொழிற்படுதலுக்குத் தேவையான பிரச்சினைகளையும் அதற்கான செயற்பாடுகளையும் தெரிந்து கொண்டு அவற்றின் மூலம் பிள்ளைகளைச் செயற்பட வைப்பவன். இந்த வகையில் மாற்றமடையும் உலகிற்குப் பொருத்தமான வகையில் பிள்ளையை உருவாக்க முயல்பவனே பயன்பாட்டு வாதியான ஆசிரியனாவான். அவன் நிகழ்காலத் தேவைக்கும் அது சார்பான உணர்வுகளுக்கும் பொருத்தப்பாடுடையவன். இத்தகைய ஆசிரியனே கல்வியுலகில் மிக முக்கியத்துவமான பங்கினை வகிப்பவனாவான்.

## பயன்பாட்டு வாதமும் கற்பித்தல் முறைகளும்

பயன்பாட்டு வாதத்தின் கற்பித்தல் முறை முயன்று தவறுதல் அல்லது பரிசோதனை முறையாகும். இந்தக் கற்பித்தல் முறையில் நோக்கம் உயிரியல், சமூகவியல் இயல்பின்படி பிரச்சினையைத் தீர்ப்பதாகும்.

பயன்பாட்டு வாதியான ஆசிரியர், இயற்கைவாதிகளின் விரிவுரை முறைக்குப் பதிலாக சுறுசுறுப்பான மாணவரின் கூட்டுறவோடு பரிசோதனை முறையைப் பயன்படுத்தி பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வழிநடத்துகிறார். இந்தப் பரிசோதனைப் பயன்பாட்டின் நோக்கம் மாணவர்களைப் பயிற்றப்பட்ட ஆய்வாளர்களாக மாற்றுவதேயாகும்.

முயன்று தவறுதல் மூலமாக, பயன்பாட்டுவாதி செய்து கற்றல் முறையை விருத்தியடையச் செய்கிறான். "ஒரு குழந்தை கற்கிறது. புத்தகத்தை வாசிப்பதாலோ, அல்லது விளக்க விரிவுரைகளைச் செவிமடுப்பதாலோ அல்ல. ஆனால் தானாகவே தீவிரமடைவதாலும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானாகவே எதையாவது செய்வதற்கு ஊக்கம் பெறுவதாலுமே. கைகள், கண்கள், செவிகள், கூறப்போனால் முழு உடலுமே தகவல் தரு சாதனங்களாகின்றன. அதேநேரம் ஆசிரியரும் பாடநூல்களும் முறையே ஆரம்பிப்பவரும் பரீட்சிப்பவருமாகின்றனர்" என ஜோன் டியூவி கூறுகிறார். இதனால் பயன்பாட்டு வாதத்தின் கற்பித்தல் முறை எதுவெனத் தெளியலாம்.

பயன்பாட்டு வாதியான ஆசிரியர், கற்பித்தல் முறைகளை எப்போதும் தீர்மானித்துக் கொள்வதில்லை. அவர் தனது மாணவருக்காகக் கையாளும் முறைகள் வகுப்புக்கு வகுப்பு, வருடத்துக்கு வருடம் வேறுபடும். அதாவது பாடவகுப்புக்கான கற்பித்தல் முறை முழுமையான சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்ப அமையும். அந்தக் குறிப்பிட்ட முழுச் சந்தர்ப்ப சூழ்நிலையுள்ளேயே ஆசிரியர், மாணவர், சாதனங்கள், பரிசோதனை யாவும் அடங்கும்.

கில் பெற்றிக்கினால் கண்டறியப்பட்டதும் டியூவியால் பின்பற்றப்பட்டதுமான இணையற்ற செயற்திட்ட முறை பயன்பாட்டு வாதத்தால் ஏற்கப்பட்டுள்ளது. செயற்திட்ட முறையானது, எல்லா இதயத்தையும் கவர்ந்ததாக, செயற்பாடுகள் நிறைந்ததாக, சமூகச் சுற்றாடலுக்கு ஏற்றதாக பயன்பாட்டு வாதத்தால் ஏற்கப்பட்டுள்ளது. பயன்பாட்டு வாதத்தின் எல்லாக் கோட்பாடுகளுக்கும் ஈடுகொடுக்கும் ஒரு கற்பித்தல் முறையாக செயற்றிட்ட முறையைக் குறிப்பிடலாம்.

மாணவரைக் கற்றல் செயற்பாட்டில் ஈடுபடுத்துவதற்காக வெகுமதியையும் தண்டனையையும் பிரயோகிக்கும் ஆசிரியரை பயன்பாட்டு வாதம் தரக்குறைவான ஆசிரியராகவே கருதுகிறது. பயன்பாட்டு வாதத்தின் படி மாணவருக்குத் தண்டனையோ வெகுமதியோ அவசியம் இல்லை. பயன்பாட்டு வாதம் மாணவனுக்கு முன்னுரிமையளிக்கிறது. அதற்கேற்பவே கற்பித்தல் முறைகளையும் விதந்துரைக்கிறது.

பயன்பாட்டு வாதமானது இயற்கை வாதத்துக்கும், இலட்சிய வாதத்துக்கும் இடைப்பட்ட போக்கைக் கொண்டது. மனித இயல்பு, பரிசோதனை இயல்பு, உயிரியல் இயல்பு என்ற மூவகை அமைப்பில் அது தன்னை வெளிப்படுத்துகிறது. பயனுள்ள அனுபவத்துக்காகவே மனிதப் பிரச்சினைகளுக்கு வழிகாட்டல் வேண்டும். ஓர் ஆசிரியர் பரிசோதனை மூலமே கற்பித்தல் வேண்டும். ஒழுக்கம் பலாத்காரமாகத் திணிக்கப்படக் கூடாது. விளையாட்டும் வேலையும் இணைந்திருக்க வேண்டும். இவையே பயன்பாட்டு வாதத் தத்துவங்களாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7

# கல்வியில் இலட்சிய வாதம்

மனிதன் வாழ்வதற்காகவே பிறக்கிறான். எப்படியும் வாழலாம் என்பதன்றி, இப்படித்தான் வாழவேண்டுமென்று வாழும் போதுதான் வாழ்வாங்கு வாழ்தல் அமைகிறது. வாழ்வாங்கு வாழ்வதற்கு இலட்சியம் அவசியம். மனம் போல வாழ்வு என்பர். எண்ணம் போல செயல் அமைகிறது. எனவே, மனம் - ஆன்மா தூய்மையாய் இருக்கும் போதுதான், இலட்சிய வாழ்வு அமைகிறது. இந்த வகையில், இலட்சியக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டது இலட்சிய வாதம் எனலாம்.

சோக்கிரடீஸ், பிளேட்டோ, டெஸ்காட்ஸ், பேக்கலி, பிற்சி, ஹேகல், ஹியூம், கான்ற், செல்லிங், சோபன்ஹோவர், ஸ்பினோசா, ஜென்றில் போன்றோர் தத்துவத்தில் இலட்சிய வாதம் இடம்பெறப் பங்களிப்புச் செய்தவர்களாவர். இவர்களது கருத்துக்களில் வேறுபாடு காணப்படுகின்றன. எவ்வாறாயினும் இலட்சிய வாதத்திற்கு ஆதாரமானவற்றை நோக்கலாம்.

இலட்சிய வாதமானது மனம், ஆன்மா என்பவற்றின் தூய்மை பற்றி அழுத்தமாகக் குறிப்பிடுகிறது. உலகை இயற்கையான தோற்றப்பாடு என இலட்சிய வாதம் கருதுவதில்லை. அது, மனத்தால் தோற்றுவிக்கப்பட்ட ஒன்றாகவே உலகைக் கருதுகிறது. எனவே, இலட்சிய வாதத்தின்படி, இயற்கைத் தோற்றப்பாடு உண்மையானதன்று; உண்மையானது, ஆன்மாவும் எண்ணமுமேயாகும். அதாவது, உலகைப் பற்றிய மனத்தின் வெளிப்பாடே உண்மையானதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகமென்பது, மனத்தாலும் ஆன்மாவாலும் உருவாக்கப்பட்ட ஒரு நிலத் தோற்றமாகும். இலட்சியவாதி மன உலகில் அல்லது ஆன்ம உலகில் வாழ்கிறான். உலகில் அவன் அறிவதெல்லாம் அவனது மனம் உருவாக்கியவை அல்லது பிரதிபலித்தவைதான்.

இலட்சிய வாதத்தைப் பொறுத்து மனித ஆளுமையென்பது, கருத்துக்களின் சங்கமமாகும். அதுதான் இறுதியான உண்மையுமாகும். அறிவு, கலை, ஒழுக்கம், சமயம் என்பன மேலான முக்கியத்துவம் வாய்ந்த வாழ்வின் அம்சங்களாகும்.

இலட்சிய வாதம் சுயநிர்ணயத்தை உண்மையின் சாரமாக மதிக்கிறது. யதார்த்தமான உண்மைத்தன்மை நமது மனத்தாலும் ஆன்மாவாலும் தான் விளங்கிக் கொள்ளக் கூடியது. இயற்கையின் சுயநிறைவான வெளித்தோற்றம் மாயையானது. பௌதீக விஞ்ஞானத்தின் அதிகார எல்லை இயற்கையின் முழுமையற்ற வெளிப்பாடே.

'மனமானது தனது சிந்தனையைப் பொறுத்து பௌதீக உலகில் தங்கியிருப்பதில்லை. மனமானது சொந்த விதிகளைக் கண்டறிந்து அதன் மீதே வாழக்கூடியது. மனமே பிரதான அம்சம். ஒருவர், மனதில் இருந்து விலகிச் செல்ல முடியாது. மனமானது எத்தகைய வினாவுக்கும் விடையளிக்கக் கூடியது; அது, எழுப்பும் எந்தப் பிரச்சினைக்கும் தீர்வு காணக்கூடியது. மனத்தின் ஆற்றலும், சக்தியும் முழுமையாக இன்னும் கண்டறியப்படவில்லை' என இலட்சிய வாதம் கருதுகின்றது. இலட்சிய வாதம் மனதைப் பௌதீகப் பொருளாகவன்றி, ஆன்மீகமானதாகவே கருதுகிறது. மனமானது, தன் சொந்த விதிகளை அதன் உள்மையத்தில் இருந்தே உருவாக்கிக் கொள்கிறது. அது ஒரு போதும் வெளியிலுள்ள பௌதீக உலகில் தங்கியிருப்பதில்லை.

இலட்சிய வாதம், அனுபவங்களைப் பெரிதாக மதிக்கிறது. எனவே, மனிதனைப் பற்றிய ஆராய்ச்சியை அது மேலாகக் கருதுகிறது. அதாவது, அனுபவஸ்தனையும் அவனது மனத்தையும் அது முக்கியமாகக் கருதுகிறது. மனிதனின் உயிரியல் எண்ணக்கரு மாயையாகும். மனிதன், இயற்கையாக ஆன்மீகமானவன். அவன் தன்னை கலாசாரம், கலை, ஒழுக்கம், சமயம் என்ற வடிவங்களில் வெளிப்படுத்துகிறான். மனிதன், தனது சுற்றாடலில் ஓர் உதவியற்ற பிராணியல்லன். அவன் தனது தேவைக்கேற்பத் தன்னை மாற்றியமைக்கக் கூடிய சக்தியுள்ளவன். இவ்வாறு வளர்ந்து வரும் மனித நாகரிகம், கலாசாரம் என்பனவற்றிற்குத் தனது சொந்தப் பங்களிப்பைக் கொடுக்கக் கூடிய ஆற்றலை மனிதன் கொண்டுள்ளான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கல்வியில் இலட்சிய வாதம்

பிளேட்டோ, கொமெனிஸ், பெஸ்ரலோசி, புரோபல், ரி.பி.நன், பென்றறோ, ஜியோவன்னி, ஜென்றில், போல் ஜகீப், விக்டர் கசின், மேசின்கிளையர், யோசிறோய்ஸ், ஹேமன் ஹறல், ஹியூம் ஆகியோர் கல்வியில் இலட்சிய வாதத்திற்குப் பங்களிப்புச் செய்தோராவர்.

இலட்சிய வாதம் மனிதனை ஒரு சுதந்திர ஆளுமையுள்ளவனாகக் கருதுகிறது. ஆகவே, கல்வியின் செயற்பாடு, சுதந்திர ஆளுமையுள்ளவர்களை உருவாக்குவதேயாகும். மனிதனின் ஆற்றலுக்கு எல்லையில்லை. ஆகவே, கல்வியென்பது எப்போதுமே முடிவடைவதில்லை. எவ்வாறாயினும், இலட்சியவாதி கல்வியானது நிலையான இலக்கைக் கொண்டிருக்க வேண்டும் எனக் கருதுகின்றான். இவ்விலக்கு முடிவுற்றதை நோக்கிச் செல்லும் ஒரு வளர்ச்சியாகும். கல்வித் துறையில் இலட்சிய வாதமானது கல்வியின் நோக்கங்கள், குறிக்கோள்கள் பற்றி அதிகமாகப் பேசுகிறது. ஆனால் அதற்கான வழிகள், முறைகள், ஒழுங்கமைப்புக்கள் பற்றிக் குறைவாகவே கூறுகிறது.

### இலட்சிய வாதமும் கல்வி நோக்கங்களும்

இலட்சிய வாதத்தின்படி, கல்வியின் நோக்கம், மாணவன் தனது சொந்த வாழ்வில் உண்மை, அழகு, நன்மை என்பனவற்றை உணர்தல் ஆகும். இதற்காக அவனது சுதந்திர ஆளுமை விருத்தியாக்கப்படல் வேண்டும். இவ்வகையான தன்னை உணர்தலானது சிலருக்கான குறிக்கோளன்று. அது எல்லோருக்குமானதே. எனவே, ஒவ்வொரு தனியாளும் தன்னை உணரக்கூடிய சூழலை ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும். இலட்சிய வாதத்தின் படி கல்வியின் நோக்கம் ஆளுமை விருத்தி, தன்னை உணர்தல், தனியாளின் ஆற்றலை வெளிக்கொணர்தல் என்பன. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், ஒருவர் தனது உயர்வான உண்மையான தன்னிலையை அடைதல் இலட்சிய வாதத்தின் கல்வி நோக்கமாகும். இலட்சியவாதி இவ்வகையான தத்துவார்த்தக் கோட்பாடே அனைத்துலகக் கல்வி இயல்பாக இருக்க வேண்டுமென விரும்புகிறான் என்பதை இங்கு கவனிக்கலாம்.

இலட்சிய வாதத்தைப் பொறுத்து ஆன்மீக அல்லது கலாசாரச் சுற்றாடல் என்பது மனிதனது சொந்த உருவாக்கமாகும். அது மனிதனது படைப்பாற்றலின் ஓர் உற்பத்திச் செயற்பாடாகும். அது எல்லா மனித குலத்தையும் கருதுகிறது. அதாவது கலை, இலக்கியம், சமயம், ஒழுக்கம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய யாவும் மனிதனின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவாற்றலின், ஒழுக்கத்தின், அழகியலின் உற்பத்திகளாகும். கலாசாரம் காலங்காலமாக வளர்வது; அது எப்போதும் வளர்ந்து கொண்டே செல்வது; அது அனைவருக்குமுரியது; அது மனித இனத்தின் பொதுவான பாரம்பரியச் சொத்தாகும். மனிதனின் நோக்கம் இத்தகைய கலாசார பாரம்பரியத்துள் நுழைந்து, அவனது சுயவிருத்திக்காக அவசியமானவற்றைப் பெற்று, மீண்டும் அந்தப் பாரம்பரியச் சொத்துக்குள் சேர்ப்பதாகும். எனவே, தன்னை உணர்தல் என்பது கல்வியின் நோக்கமாக இருப்பதைக் காணலாம். இதன் கருத்து, மேலும் வளம் பெறுவதாகும். கல்வியானது மனித குலத்தை அதன் கலாசாரத்தினூடாக மேலும் மேலும் முழுமையாக ஆன்மீக உலகுக்குள் நுழையக் கூடியதாக்க வேண்டும். எனவே, கல்வியின் நோக்கம், தனியாளின் ஆன்மீக விருத்தியின் மேம்பாடாகும். இலட்சிய வாதத்தின்படி, கல்வியானது தனிமனிதனைப் பூரணமான சுயவுணர்வுள்ளவனாக்க வழிகாட்ட வேண்டும்.

## இலட்சிய வாதமும் கலைத்திட்டமும்

இலட்சிய வாதம் கல்வியினைச் சுய அபிவிருத்தியாகக் கொள்கிறது. ஆகவே மாணவனின் உயிரியல், சமூகவியல் உணர்ச்சிகளை நன்றாக விருத்தி செய்து சிறந்த சுய அபிவிருத்தி உள்ளவர்களாக்க வேண்டும். பேக்கலி, "கல்வியின் முக்கிய நோக்கம், நடுநிலையாகச் செயற்படக்கூடியதாக இலட்சியங்களை மனதில் பதித்தல், போதிக்கும் பாடப்பொருள் முழுமையாக நோக்கத்துக்கு அனுகூலமாயிருத்தல், மாணவரின் பாடம் சார்பான உளச்சார்பு முக்கியமானது" எனக் குறிப்பிடுகிறார். அதாவது, கலைத்திட்டத்தின் பிரச்சினை, கருத்துக்களினதும் இலட்சியங்களினதும் நிலையிலிருந்து எட்டக் கூடியதாக இருத்தலாகும்.

இலட்சியவாதியைப் பொறுத்துக் கற்கும் எல்லாப் பாடங்களும் அவசியமானவையாகவும், அடிப்படைகளாகவுமுள்ளன. இந்தக் கலைகளின் கற்கையில் அவை ஒரு படைப்பாற்றல் நடிபங்கை வகிக்கின்றன. அதாவது அவை தானாகவே படைப்பாற்றலை விருத்தியாக்குகின்றன. இலட்சிய வாதத்தின் கலைத்திட்டத்தில் எந்தப் பாடத்திற்கும் அது முன்னுரிமை கொடுப்பதில்லை. இலட்சிய வாதத்தைப் பொறுத்து தானாகப் படைப்பாற்றலை விருத்தியாக்குவதற்கு எந்தப் பாடத்துக்காவது போதிய சந்தர்ப்பம் வழங்கப்படுமானால் அது கற்பதற்குப் பொருத்தமானதேயாகும். இலட்சிய வாதம் தடையில்லாமல் எந்தப் பாடமும் இத்தகைய சந்தர்ப்பங்களைப் பெறலாம் என நம்புகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனியாளுக்குப் பெருமை தரக்கூடிய பாடங்களுக்கு இலட்சிய வாதம் அழுத்தம் தருகிறது. எடுத்துக்காட்டாக ஓர் இலட்சியவாதி தரக்குறைவான நூல்களைப் படிப்பதை விட தாகூரைக் கற்பது தனித்துவமான திறனை வளர்க்கக் கூடியது எனக் கருதுகிறான். எங்கு உயர்ந்த பெருந்தன்மை இருக்கிறதோ, அங்கு வளர்ச்சிக்கான விசேட சாத்தியப்பாடும் உண்டு என இலட்சிய வாதம் கூறுகிறது. ஓர் இலட்சியவாதி சுய வளர்ச்சியில் விசேட நாட்டம் கொண்டுள்ளான். பாட விடயத் தெரிவிலும் இலட்சியவாதி ஆளுமையின் அழுத்தத்தை விரும்புகிறான்.

கலைத்திட்டப் பிரச்சினை மீதான அதன் அணுகுமுறையில் பிள்ளையின் நிகழ்கால அனுபவங்களுக்கு அதிக கவனத்தை இலட்சிய வாதம் கொடுப்பதில்லை. மாறாக மனித இனத்தின் அனுபவத்தை முழுமையான ஒன்றாக இலட்சிய வாதம் அழுத்திக் கூறுகின்றது. மனித இனத்தின் முழுமையான அனுபவத்தைப் பாடசாலைக்குள் கொண்டு வர இலட்சியவாதம் விரும்புகின்றது. கலைத்திட்டமானது அறிவின் சுருக்கமாக உள்ளது. பாடசாலையின் வேலை தானாகக் கலாசாரத்தைப் பிரதிபலிப்பதாகும். எனவே, கலைத்திட்டமானது ஓர் இனத்தின் அனுபவங்களைப் பிரதிபலிக்கும் வகையில் நன்கு ஒழுங்குபடுத்தப்பட வேண்டும். ஒரு பிள்ளை தனது படைப்பாற்றலை வளர்ப்பதற்கு இவ்வனுபவங்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இனத்தின் அனுபவங்களை இரு பிரதான பிரிவுகளாகப் பாகுபடுத்தலாம்:

1. பௌதீகச் சுற்றாடல்
2. தோழமையாளன்

இவையிரண்டும் கலைத்திட்டத்தின் விரிவான இரு பிரிவுகளைக் குறிப்பிடுகின்றன. (அ) விஞ்ஞானம் (ஆ) மானுடவியல். இவ்விரு பெரிய தலைப்புகளும் எவ்வகையான கற்கை நெறிகளையும் உள்ளடக்கலாம். ஆனால் பாடநெறிகளின் தெரிவானது ஆளுமை விருத்தி நோக்கத்தை மட்டுமே கொண்டதாக அல்லாது, மாணவன் தன்னை உணர்தலுக்கான நோக்கத்தைக் கொண்டிருக்க வேண்டும்.

"பாடசாலையானது மிக உயரியதும் பரந்த உலக நோக்கில் நிரந்தர முக்கியத்துவம் வாய்ந்ததுமான மனிதச் செயற்பாடுகளுக்கு இடம் கொடுக்க வேண்டும்" எனவும் 'நன்' கூறுகிறார். அதாவது இலட்சிய வாதியின் கலைத்திட்டம் பற்றிய கருத்து நிலையை 'நன்' வழங்குகிறார். அதிமுக்கியம் வாய்ந்த மனிதச் செயற்பாடுகள் யாவை? முதலில் இச்செயற்பாடுகள் மனிதனின் தனிப்பட்ட வாழ்க்கையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரத்தைப் பேணக்கூடியதாக இருக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, சுகாதார விடயங்களில் கவனம், ஒழுக்கம், சமயம், சமூக ஒழுங்கமைப்பு போன்றன.

இரண்டாவதாக, பயனுள்ள நாகரிகத்தை அடைவதற்கான செயற்பாடுகளைக் கொண்டிருக்க வேண்டும். முதலாவது முக்கியமானதாயினும் அதற்கான பாடங்கள் முறைசார்ந்தனவாக இருக்க வேண்டியதில்லை. இரண்டாவது பகுப்பில் நாம் இலக்கியம், கலை, கைப்பணி, விஞ்ஞானம், கணிதம், வரலாறு, புவியியல் போன்றவற்றை இடம்பெறச் செய்யலாம். இவை ஓர் இலட்சியவாதி கலைத்திட்டத்தில் உள்ளடங்கச் செய்யும் பாடங்களாகும்.

## இலட்சிய வாதமும் ஆசிரியரும்

இலட்சியவாதியான ஆசிரியன் தனது மாணவர்களுக்கு உதவுதல் மூலமே தனது ஆன்மீக வளர்ச்சியைக் காணுகிறான். தன்னைப் போலவே தனது மாணவர்களும் முக்கியமானவர்கள் எனக் கருதுகிறான். பாடப்பொருள் தொடர்பான தகவல்களைக் கொடுப்பது மாத்திரம் இலட்சியவாதியான ஆசிரியனைப் பொறுத்துப் போதியதாகாது. ஏனெனில், அவனுக்குக் கற்பித்தலில் பாடப்பொருள்கள் சம்பந்தமான சந்தேகங்கள் இருக்கலாம். அவன் ஆன்மீக வளர்ச்சிப் பாதைக்கு மாணவனைக் கொண்டுவரக் கூடியதாக வழிகாட்ட விரும்புகிறான். இலட்சியவாதியான ஆசிரியன் மூன்று சிறப்பான வழிகளில் மாணவனுக்கு உதவ முடியும் எனக் கருதுகிறான். முதலில், ஆசிரியன் அவனுடன் தொடர்பு கொள்ளல் மூலம் அவனுக்கு உதவலாம். அதாவது அவன் எத்தகைய மனிதனாக வர முயலவேண்டும் என அவன் விளங்கிக் கொள்வதற்கு வழிகாட்டலாம். இதனைக் கலந்துரையாடல் மூலமும் பொதுவான பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தல் மூலமும் செய்யலாம். இவ்வாறான ஆசிரியரின் ஆளுமையானது எப்பொழுதும் மாணவன் மீது செல்வாக்குச் செலுத்த வேண்டும்.

இரண்டாவதாக, ஓர் இலட்சியவாதியான ஆசிரியன் பிரச்சினைக்கான தீர்வை முயற்சியின் அடிப்படையில் காண்பதற்கு எப்பொழுதும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். மாணவனை விருத்தி செய்ய வேண்டுமென இலட்சியவாதியான ஆசிரியன் விரும்புவதால் வார்த்தைகளால் மட்டும் போதிப்பதில் அவன் நம்பிக்கை கொள்வதில்லை. அதிக வினாக்களைக் கேட்டு மாணவனிடமிருந்து விடை பெறுவதற்கு அவன் முயற்சிக்கிறான். இது தலைசிறந்த இலட்சியவாதியான சோக்கிரடீசின் முறையின் சாரமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாவதாக, ஓர் இலட்சியவாதியான ஆசிரியன் விஞ்ஞான ரீதியான முறையை, மாணவன் விளங்கிக் கொள்ள வழிகாட்டல் மூலம் உதவுவதாகும். பகுப்பாய்வு, தொகுப்பாய்வு என்பவற்றால் அதற்கு உதவுகிறான். மிகவும் கடினமான பிரச்சினைகளின் தீர்வு காண முடியாதவற்றை முதலில் எடுத்துக் கொண்டு, அவற்றைச் சிறு பகுதிகளாகப் பிரிப்பதன் மூலம் இலகுவாகத் தீர்வு காண முடியும் என்பதை மாணவன் விளங்கிக் கொள்ளுமாறு வழிநடத்துகிறான். பகுப்பாய்வும் தொகுப்பாய்வும் ஒன்றாகத் தொழிற்படும் போது, அது ஒரு பகுதிப் பிரச்சினையைத் தீர்ப்பது போல முழுப் பிரச்சினையையுமே தீர்த்துக் கொள்ள முடியும். இவ்வகையில், அவர்கள் எந்த அனுபவத்துறையிலும் பிரயோகிக்கக் கூடிய ஓர் ஆயுதத்தைப் பெற்றுக் கொள்கிறார்கள்.

இலட்சியவாதியான ஆசிரியன் எத்தகைய கருத்தையும் ஏற்றுக் கொள்ளுமாறு வற்புறுத்தமாட்டான். எந்த யதார்த்தவாத, பயன்பாட்டுவாத மாணவனையும் இலட்சியவாதியாக்க முயலமாட்டான். இலட்சியவாதியான ஆசிரியன் மாணவனை அவனாகவே உருவாகச் செய்வது தனது கடமையென உணருகிறான். இந்நிலையில் ஒரு வகுப்பறையில் இலட்சியவாத, யதார்த்தவாத, பயன்பாட்டுவாத மாணவர்கள் என்று பலவகையான மாணவர்கள் இருக்கும்போது, இலட்சியவாதியான ஆசிரியனின் பணியானது மிகவும் கடினமானதொன்றாகிறது. எனவே, ஓர் இலட்சியவாதியான ஆசிரியன் பல்வேறு கற்பித்தல் நுட்பங்களை மேற்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. எடுத்துக்காட்டாக, யதார்த்தவாதிக்கு உண்மை ரீதியான; பயன்பாட்டுவாதிக்குப் பிரச்சினை ரீதியான; இலட்சியவாதிக்கு மனத்தோற்ற ரீதியான நுட்பங்களை மேற்கொள்ள வேண்டியிருக்கிறான். ஒரு குறிப்பிட்ட வகையான மாணவன் இவ்வாறான கற்பித்தலில் இருந்து தனது இயல்புக்குத் தேவையானவற்றைப் பெற்றுக் கொள்கிறான்.

இவ்வகையில், ஓர் இலட்சியவாதியான ஆசிரியனுக்கான கல்வியின் கருத்து உள்ளக ஆன்மாவின் வளர்ச்சியாகும்; சுயம் நோக்கிய உள்ளகத் தீவிரமாகும்; தன்னை உணர்தலாகும்; சுய இயக்கமாகும். 'புரோபல்' உருவகிக்கும் குழந்தைப் பூங்காவில் இலட்சியவாதியான ஆசிரியனின் செயற்பாட்டை நாம் காணலாம். புரோபல், பாடசாலையைத் தோட்டமாகவும், ஆசிரியனைத் தோட்டக்காரனாகவும் காட்டுகிறார். தோட்டக்காரன், சிறிய செடிகள் அழகிய பெருமரங்களாக வளருவதற்கான அனைத்தையும் கவனமாகச் செய்கிறான். அதுபோல, ஓர் ஆசிரியன் குழந்தைகள் முழு வளர்ச்சியும் பெறுவதற்கு அவர்களை வழிநடத்துதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். அவர்கள் சுய உணர்வு பெற வேண்டும்; உண்மை உணர்வு பெற வேண்டும்; அழகும் நன்மையும் பெற வேண்டும். சுருக்கமாகக் கூறுவதானால், இலட்சியவாதியான ஆசிரியனால் குழந்தைகள் உண்மை, அழகு, நன்மை பெற வேண்டும். இத்தகையவனே ஓர் இலட்சியவாத ஆசிரியனாவான்.

## இலட்சிய வாதமும் கற்பித்தல் முறையும்

கல்வியளிக்கும் செயல்முறையில் இலட்சியவாதி இயற்கையை விட அனுபவங்களுக்கே அழுத்தம் கொடுக்கிறான். கருத்துக்கள், விடயங்களிலும் பார்க்க மாணவனுக்கே முக்கியத்துவமளிக்கிறான். இலட்சியவாதியைப் பொறுத்து அபிவிருத்தியானது எப்பொழுதும் உள்ளிருந்து ஏற்படுவதேயாகும். வகுப்பறையை அவன் ஆளுமையைக் காட்டுகின்ற ஒரு களமாகக் கருதுகிறான். வகுப்பறை இடைவினைகளால் குறை விருத்தியுள்ள மாணவன் கூடிய முதிர்ச்சியுள்ள நிலையில் பங்கு கொள்ளத் தூண்டுதல் பெறுகிறான். இலட்சியவாதியான ஆசிரியனின் அழைப்பினால் மாணவர்கள் வந்து, பரந்த, ஆழமான, சுவாரஸ்யமான அனுபவங்களைப் பரிமாறிக் கொள்ளுமாறு தூண்டப்படுவதால் அவர்கள் தம்மைப் பற்றிய பரந்த, ஆழமான விளக்கம் பெறுகிறார்கள்.

இலட்சியவாதியான ஆசிரியனால் மேற்கொள்ளப்படும் கற்பித்தல் முறைகள், தத்துவ உண்மைகளை அடிப்படையாகக் கொண்டவையல்ல. ஓர் இலட்சியவாதியான ஆசிரியனைப் பொறுத்து, அவனது பிரதான நோக்கம், மாணவன் ஏற்கனவே பெற்றிருந்ததை விட ஆழமான உள்ளுணர்வைப் பெறுதலாகும். இந்த அடிப்படையில் அவன் விரிவுரை முறையில் தங்கியிருப்பதில்லை. மாணவரிடமிருந்து பல்வகைக் கருத்துக்களையும் வெளிப்படுத்தக் கூடியதான கலந்துரையாடல் முறையிலேயே அவன் பெருமளவு தங்கியிருக்கிறான். இதன் மூலமாகத் தங்கள் எண்ணங்களை விரிவாக்கிக் கொள்கிறார்கள். விமர்சிக்கவும் தங்கள் கருத்துக்களைப் பிறருடன் விவாதிக்கவும் ஆற்றல் பெறுகிறார்கள். இதனால் தாம் எப்பொழுதும் முன்னேற்றமடைந்து கொண்டிருப்பதாக உணர்கிறார்கள். அதாவது அவர்கள் முடிவில்லாமல் தாமாகவே தொடர்ந்து வளர்ச்சியடைந்து கொண்டிருப்பதாக நம்பிக்கை பெறுகிறார்கள்.

இந்த முறையில் இலட்சியவாதியான ஆசிரியன், தான் அதி உன்னதமாகக் கருதும் சில நூல்களைப் பயன்படுத்த நினைக்கிறான். ஏனென்றால், அந்நூல்களின் உதவியோடு மாணவனை சாதாரண உயிரியல், சமூகவியல் மீள்செயற்பாடுகளிலிருந்து விலக்கி அனுபவ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படை நிலையை அடைவிக்கலாம் என நம்புகிறான். இலட்சியவாதியின் கற்பித்தல் முறையின் செயற்பாடு ஆசிரியனையும் மாணவனையும் அதிகமான படைப்பாற்றல் மிக்க நுண்ணறிவுக்கு இட்டுச் சென்று எல்லாவற்றிற்கும் மேலான நிலையையடையச் செய்தல் ஆகும். ஆசிரியனாலும் மாணவனாலும் அந்த முறையால் கருணையுள்ள இலௌகீக உலகிலிருந்து நிரந்தரமான இராச்சியத்துக்குச் செல்ல முடியும். அங்கிருந்து இலௌகீக உலகின் மீது விழுமியங்களால் ஒளிபரவச் செய்யலாம்.

## இலட்சிய வாதம் - அக்கறையும் ஒழுக்கமும்

இலட்சியவாதம் கடுமையான கட்டுப்பாடுகளை விரும்புவதில்லை. மாணவர்கள் தாமாகவே தொடங்குதல், தமக்குத் தாமே நெறிப்படுத்திக் கொள்ளுதல் போன்றவற்றில் கூடிய ஆர்வம் காட்டுகிறது. மாணவன் தனக்குத்தானே கட்டுப்பாடுகளை ஏற்படுத்திக் கொண்டு தன்னை நெறிப்படுத்திக் கொள்வதை இலட்சிய வாதம் விரும்புகிறது. மாணவர் சுயமாக வெளிப்படுத்தும் அக்கறை அவர்களைத் தூண்டுவதோடு அவர்களது பூரண முதிர்ச்சிக்கும் உதவுகிறது. ஏனெனில், சுயமாகவே உள்ளிருந்து உருவாகும் அக்கறை சுயநம்பிக்கையை ஏற்படுத்தி ஒரு மேம்பாடான உள்ளுணர்வையும், உன்னதமான சக்தியையும் பெற்றுத் தருகிறது. இந்தக் கோணத்திலிருந்தே இலட்சிய வாதம் ஒழுக்கப் பிரச்சினையை நோக்குகிறது. ஆகவே, ஒழுக்கமானது, இல்லாத ஏதாவது ஒன்றிலிருந்து மாணவர் மீது குறிப்பாகத் திணிக்கப்படுவதல்ல. அது சுயமாக ஏற்பட வேண்டியதாகும்.

இலட்சிய வாதம் முதலிடத்தை அழுத்தமாக மனத்துக்கும் சுயநிலைக்கும் அளிக்கிறது. உலகம் மனத்தின் ஒரு படைப்பு ஆகும். மனம் அதில் தங்கியிருப்பதில்லை. மனிதனைப் பற்றிய கற்கையே அதிமுக்கியமானது. இலட்சிய வாதக் கல்வியின் நோக்கம் ஒருவன் உன்னத நிலையடைதலும் உண்மையான தன்னை அறிதலுமாகும். கலைத்திட்டம் ஆளுமைக்கே அழுத்தம் தருகிறது. மாணவனின் சுயவுணர்வை மேலோங்கச் செய்ய உதவுபவரே ஆசிரியராவார். வகுப்பறையில் கலந்துரையாடலை ஊக்குவித்தல் வேண்டும். இயற்கையான ஒழுக்க முறையே மாணவனைச் சொந்த உயிர்ப்பின் தலைவனாக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8

## கல்வியில் ஜோன் டியூவியின் சமூகச் சிந்தனைகள்

கல்வியின் இலட்சியங்களைப் பிளேட்டோ கூறினார். கல்வித் தத்துவங்களை ரூசோ விளக்கினார். ஹேபர்ட்டும், புரோபலும் உளவியல் அடிப்படையில் கல்விக்கு விளக்கம் தந்தனர். ஆனால் கல்வி முறை, கல்வித் தத்துவம், கல்வி உளவியல் மூன்றையும் இணைத்துக் கல்வியைச் செயல்முறையாக்கியவர் அமெரிக்க நாட்டுக் கல்விச் சிந்தனையாளர் ஜோன் டியூவியாவார். அக்காலத்தில் அமெரிக்கச் சமூகத்தில் இடம்பெற்ற நவீனமயமாக்கல் சமூகத்தில் பல்வேறு நிலைமைகளிலும் கவனம் செலுத்திய டியூவி, மிகப் பொருத்தமான யதார்த்தக் கருத்துக்களைச் சமர்ப்பித்தார். சுமார் 10 வருடங்கள் பாடசாலைக் கல்விப் பணிப்பாளராகவிருந்த அவர், பல்கலைக்கழகத்துடன் இணைந்த ஆய்வுப் பாடசாலை ஒன்றை அமைத்து கல்வி சார்ந்த நடவடிக்கைகளையும் ஆய்வுகளையும் நடத்தினார். தத்துவ, உளவியல், கல்விசார் கருத்துக்களை வெளியிட்ட அவர், விஞ்ஞானபூர்வ பரீட்சார்த்த நடவடிக்கைகளையும் பல ஆய்வுகளையும் நடத்தினார். அவரது விரிவுரைகள், ஆய்வுகள், எழுதிய நூல்கள் போன்றன அறுநூற்றுக்கும் மேற்பட்டவையாகும். பிளேட்டோ, ஹேகல், கான்ற் போன்ற தத்துவஞானிகளின் செல்வாக்கால் பாதிக்கப்பட்டவர் டியூவி ஆவார். பிற்காலத்தில் பயன்பாட்டு வாதச் சிந்தனையால் ஈர்க்கப்பட்டார். வில்லியம் ஜேம்ஸ், பீ.எஸ்.பியர்ஸ் போன்ற பயன்பாட்டுவாதிகளின் கருத்துக்கள் அவரது நுண்ணிய ஆய்வுக்கு வழிகாட்டின. அப்போது அமெரிக்காவில் ஏற்பட்ட சமூகப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுத்திருப்பம், உற்பத்திக் கைத்தொழில்களின் தோற்றம், வர்த்தகப் பொருளாதாரக் கோலத்துக்கேற்ப சமூகம் மாறியமை போன்ற காரணங்களால் அவரது கருத்துக்கள் ஹெகலிய சிந்தனையிலிருந்து பயன்பாட்டுவாதச் சிந்தனைக்கு மாறின. பிற்காலத்தில் அவர் ஹெகலின் சிந்தனையிலிருந்து விடுபட்டு தனது தத்துவக் கருத்துக்களை வெளியிட்டார். டார்வினின் உயிர்க் கூர்ப்புக் கொள்கையும், பரிசோதனை ரீதியான விஞ்ஞானமுறையும் அறிவு பெறுவதற்கான ஊடகங்களென ஏற்றுக் கொண்டார். கல்வி தொடர்பாக அவரது கருத்துக்களுக்கு மையமாக மூன்று எண்ணக்கருக்கள் அமைந்தன.

1. மனிதனும் அவனது சிந்தனையின் தன்மையும்

2. அனுபவங்கள் தொடர்பான அபிப்பிராயங்கள்

3. முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட முடிவுகள் அனைத்தையும் மறுதலித்தல்

என்பன அவையாகும். மனிதன் கொண்டுள்ள உயர்ச் சிந்தனையாற்றல் காரணமாக அவன் விலங்குகளை விட முன்னேறிச் செல்லலாம். சிந்தனைச் சக்தியை விருத்தி செய்து கொண்டு சாதனங்களை ஆக்கிப் பயன்படுத்துகின்ற விலங்கே மனிதனாவான். இது கூர்ப்பினாலேயே கிடைத்தது - மனிதன் பெற்ற சக்தி சிந்தனையாகும் எனக் கருதுகிறார். மனிதன் அறிவைப் பெற்றுக் கொள்ளும் பிரதான வழி உயிர்ப்பான, செயல்ரீதியான அனுபவமாகும். கல்வியென்பது பல்வேறு விதங்களில் சுற்றாடலிலிருந்து கிடைக்கும் அனுபவங்களின் ஒழுங்கமைப்பாகும். பிரச்சினைகளைத் தீர்த்தலானது அனுபவங்களைப் பெற்றுக் கொள்வதற்கான வழி. கல்வி என்பது அனுபவங்கள் மூலம் கிடைக்கப் பெறுவது என்பது டியூவியின் கருத்தாகும். இயற்கையான உலகில் உறுதியும் நிலைப்பாடும் இல்லை. மாறானது எதுவும் இல்லை. முன்கூட்டி எதையும் தீர்மானிக்க முடியாது. குறித்த நோக்கங்களும் இல்லை. எல்லாப் பொருளும் வேறுபடுவதே. கல்வியென்பது வாழ்தற்குத் தயாராதல் அல்ல. வாழ்வே கல்வியாகும். எதிர்கால வாழ்க்கைக்கு மாணவரைத் தயார்ப்படுத்தலன்றி பாடசாலையில் யாதேனும் விதத்தில் வாழ்வதற்கான சந்தர்ப்பத்தைப் பெற்றுக் கொடுத்தல் என்பதை கல்வி மூலம் டியூவி எதிர்பார்த்தார்.

டியூவி தனது தத்துவத்திற்கேற்பப் பரம்பொருளையோ, மெய்ப்பொருளையோ ஏற்கவில்லை. அவரது கல்வித் தத்துவத்தில் முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட குறிக்கோளோ, நோக்கமோ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடையாது. அவர் குறிப்பிடுவதன்படி, கல்வியென்பது அனுபவங்களை மீண்டும் மீண்டும் பழுதுபார்த்தலாகும்; புனரமைப்பதாகும். அது தொடர்ச்சியானதொரு கருமத் தொடராக முன்னேறிச் செல்கின்றது. இக்கருமத் தொடர் தனியாளின் முன்னைய அனுபவத்துடன் தொடர்புறும் அதேவேளை, பாடசாலையில் அதன் சிறுபகுதி மட்டுமே நடைமுறைப்படுத்தப்படுகிறது. இந்த அடிப்படைச் சிந்தனையிலே டியூவியின் கல்விக் கருத்துக்கள் வெளிப்படுகின்றன.

சமகாலக் கல்வி முறைகளிலுள்ள பல அம்சங்களை டியூவி விமர்சிக்கிறார். உதாரணமாக, எதிர்கால வாழ்க்கைக்கு பிள்ளைகளைத் தயார்படுத்தல், பிள்ளைகளிடத்தே மறைந்து கிடக்கும் உள்ளார்ந்த திறன்களை வெளிக்கொணர்தல், அரிஸ்டோட்டில், ஜோன்லொக் போன்றோரின் ஆற்றல், கொள்கை, முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட குறிக்கோள்கள் என்பவற்றையெல்லாம் விமர்சிக்கிறார் டியூவி. மாணவரின் தேவை, திறன்கள், அனுபவங்கள் ஆகியவற்றின் துணையுடன் உத்திகளைக் கையாண்டு நல்ல கல்வி வாய்ப்புகளைத் தயார்ப்படுத்த வேண்டுமெனக் கருதுகின்றார். செயற்பாடு சந்தர்ப்பத்தின் அடிப்படையிலேயே பிள்ளையின் கல்வி நோக்கம் கட்டியெழுப்பப்படுகிறது. புறத்தே கட்டியெழுப்பப்பட்ட நோக்கங்கள் இவ்வாறான உள்ளார்ந்த திறன்களை வெளிக்கொணரத் தவறுகின்றன. குறித்த நோக்கங்களை ஏற்படுத்திக் கொள்வதன் மூலம் ஆசிரியரின் உள்ளார்ந்த திறன்கள், பிள்ளைகளின் திறன்கள் ஆகிய இரண்டுமே வெளிக்கொணரப்படல் தடைப்படுகிறது. டியூவி கூறுவது போல, இவ்வாறான குறித்த நோக்கங்களை எதிரில் வைத்து அதற்கேற்ப கருமமாற்றுவதன் மூலம் கற்றல் நிகழுவதில்லை. பிரச்சினைகளுடன் திண்டாடுவதனூடாகத் தனிப்பட்ட முறையில் பெறும் அனுபவங்களே உண்மையான கல்வியாகும் என அவர் கருதுகிறார். எதிர்கால அனுபவங்களைப் பெற்றுக் கொள்வதிலும் நிகழ்காலத்தை விழிப்புடன் பயன்படுத்துவதிலுமே கல்வியின் அபிவிருத்தி தங்கியுள்ளதென ஜோன் டியூவி கருதுகிறார். இந்தக் கருத்துக்களின் பின்னணியில் ஜோன் டியூவியின் கல்வி சார்பான சமூகச் சிந்தனைகளை நோக்கலாம்.

## பாடசாலையும் சமூகமும்

கல்வியென்பது சமுதாயம் அழியாமல் பேணிக் கொள்வதற்கு வேண்டிய கருவியாகும். சமூக அனுபவங்கள் கல்வியினால் கல்வி மூலம் பரிமாற்றம் செய்யப்பட்டு, எல்லோரும் பங்குபெறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபவங்களாக இருக்க வேண்டும். எனவே, கல்வி தனியாள் ஆளுமையை வளர்ப்பதோடு சமூக வாழ்வையும் தொடர்புபடுத்தக் கூடியதாக இருக்க வேண்டும். அதன் மூலம் தனியாள் சிறப்புற, சமூகம் சிறப்புறும். எனவே, கல்வி வாழ்க்கையையும், சமூக முன்னேற்றத்தையும் நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டுமென டியூவி கருதுகிறார்.

பாடசாலைக்கும் சமூகத்துக்கும் இடையில் இருக்க வேண்டிய தொடர்பு பற்றியும் டியூவி கருத்துத் தெரிவிக்கிறார். பாடசாலையுள்ளும் பாடசாலைக்கு வெளியேயும் பிள்ளை பெறும் அனுபவங்களுக்கிடையே ஒற்றுமை காணப்பட வேண்டும். இல்லையேல் கல்வி பொருளற்றதாகி விடும். வகுப்பறையுள் நுழையும் மாணவனுக்கு அவன் வீட்டில் பெற்ற அனுபவங்களை மறுதலிக்க நேரிடின், அது தீங்கானதாகும். பிள்ளையின் தேவைகள், ஆசைகள், செயற்பாடுகள் என்பன அன்றாட வாழ்க்கையுடன் தொடர்புபட வேண்டும். அத்தகு தொடர்பே கல்விப் பேறாகும். அத்தகைய தொடர்பை ஏற்படுத்தல் ஆசிரியரின் பொறுப்பாகும். இதில் வெற்றி பெறுவதானால், பாடவிதானத்திற்கும், அனுபவ உலகுக்குமிடையிலான பரஸ்பரத் தொடர்பு கட்டியெழுப்பப்பட வேண்டும். பாடசாலைச் செயற்பாடுகளுக்கும் வாழ்க்கை அனுபவங்களுக்கும் தொடர்பில்லாவிடில் கல்வியின் உயிரோட்டம் நலிவுறும் என எடுத்துக்காட்டும் அவர், அந்நிலையில் வெற்றிகரமான கற்றல் நடைபெறமாட்டாதெனக் கூறுகிறார். பாடசாலை வலிமையுள்ள கல்விக் கருவியாக அமைய வேண்டும். சமூகமானது பொதுநோக்கமொன்றுக்கமைய, பொது உணர்வுக்கியைய பொது வழிவகையொன்றுக்கேற்பக் கருமமாற்றுகின்ற மனிதக் குழுவொன்றின் கூட்டமைப்பாகும். பொது நோக்கங்கள், பொதுத்தேவைகள் ஆகியவற்றின் மீது கட்டியெழுப்பப்பட்டால் அங்கே பரஸ்பர தொடர்பும் காணப்படும். பாடசாலைக்கும் சமூகத்துக்குமிடையே பரஸ்பர இடைத்தாக்கங்கள் காணப்பட வேண்டியது அவசியம் என டியூவி வலியுறுத்துகிறார்.

பாடசாலை நடவடிக்கைகளைத் திட்டமிடுகையில் உளவியல், சமூகவியல் அடிப்படைகளைக் கவனத்திற் கொள்ள வேண்டும். அயல் சமூகத்தோடு தொடர்புகளை ஏற்படுத்துதல் மூலமே பாடசாலையை உயிர்ப்புள்ளதாக்கலாம். அப்போதுதான் பிள்ளைகளின் கற்றலும் இடையறாது நிகழும். பாடசாலையின் கற்றல் அனுபவங்கள் வாழ்க்கை அனுபவங்களுடன் தொடர்புபடுத்தப்படல் அவசியமாகும். பாடசாலைகள் உண்மையான கல்வி நிறுவனங்களாகக் கருதப்பட வேண்டுமானால்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களைச் சமூக வாழ்க்கைக்குத் தயார்ப்படுத்தல் அவசியமாகும். தனியாள் சமூக இசைவாக்கம் பெறும் ஒழுங்கின் மீதே அவனது முக்கியத்துவம் தங்கியுள்ளது. பாடசாலையென்பது நல்லதையும் கெட்டதையும் வேறாக்கிக் காட்டுவதும் ஒன்றுக்கொன்று எதிரான இயல்புகளைச் சமப்படுத்துவதுமானதோர் இடமாக இருத்தல் வேண்டுமென டியூவி குறிப்பிடுகிறார். எனவே, சமூகக் கருமத்தொடரில் பங்குபற்றுவதற்கும் கலாசாரத்தைப் போதிப்பதற்குமான சகல செயற்பாடுகளும் பாடசாலையினால் ஒழுங்கமைக்கப்படல் வேண்டும்.

## சமூகவியல்சார் கல்விக் கருத்துக்கள்

சமூகம் என்பது அனுபவங்களைச் சேகரிக்கும் ஒரு நிறுவனமாகும். எனவே, கல்வி நிறுவனங்களும் அக்கருமத் தொடருடன் இணைவது அல்லது தொடர்புறுவது அவசியமாகும். கல்விக்குப் பிள்ளையின் திறன்கள் அடிப்படையாக அமைய வேண்டும். அத்திறமைகளைச் சரியாக விளங்கிக் கொள்வதும், அத்திறன்கள் மூலம் இயலுமான அளவு நன்மைகளைச் சமூகத்துக்குப் பெற்றுக் கொடுப்பதும் அவசியமாகும். கல்வியென்பது வாழ்க்கைக்காகத் தயாராவதல்ல; வாழ்க்கைக் கருமத்தொடரில் பங்குபற்றுவதே கல்வியாகும். எனவே, கல்வியானது சமூகத்துக்கும் இயற்கைக்குமிடையிலான பரஸ்பரத் தொடர்பை விருத்தி செய்வதொன்றாகும். தொடர்ச்சியான ஒரு கருமத் தொடரே முழுமையான கல்வியாகும். பிள்ளை வளரும் வீட்டையும், அவன் கல்வி பெற்ற பின் நுழையும் சமூகத்தையும் இணைக்கும் கருமம் பாடசாலையினால் ஆற்றப்பட வேண்டியதொன்றாகும். பாடசாலையானது சமூகத்துக்கு இயைபானதாக அமையாது, போலியானதொரு தன்மையைப் பெற்றதே பண்டைய கல்வி முறைமை வெற்றிகரமானதாக அமையாததற்குக் காரணமாகும் என்பது டியூவியின் கருத்தாகும்.

பாடத்தைக் கற்பிப்பதோடு நில்லாமல், சமூகக் கருமங்களில் ஈடுபடுத்திக் கொள்வதற்கும், கூட்டுத் தொழிற்பாடுகள் மூலம் சமூகம் தொடர்பான அறிவைப் பெற்றுக் கொடுப்பதற்குமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். இதற்குகந்ததாக கலைத்திட்டத்தைத் தயாரிக்கையில், பாடசாலைச் சமூகத்துக்கும் சமூக அனுபவங்களுக்கும் பிரதான இடம் கொடுக்கப்படல் வேண்டும். டியூவியின் மாதிரிப் பாடசாலையில், உணவு தயாரித்தல், துணி தோய்த்தல் போன்ற பாடங்களையும் இடம்பெறச் செய்து, அப்பாடங்கள் மூலம் பரீட்சார்த்த நடவடிக்கைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொண்டார். வாழ்க்கையிலிருந்தும், சமூகத்திலிருந்தும் விலகி நிற்கும் பாடசாலைகளைத் தொழிற்பாடுகள் மூலம் வாழ்க்கை, சமூகம் ஆகியவற்றுடன் ஒன்றிணைத்தல் வேண்டும் என்பது டியூவியின் கருத்தாயிருந்தது.

உணவு தயாரித்தல், தையல் வேலை, கைப்பணி போன்றவற்றைக் கலைத்திட்டத்தில் இடம்பெறச் செய்தல் மூலம் அவர் நவீன சிந்தனையொன்றையும் நவீன வழிவகையொன்றையும் ஏற்படுத்தினார். ஆக்கபூர்வமான வெளியீட்டு வழிவகைகள் மூலம் நவீன சிந்தனையைத் தோற்றுவிப்பதற்கும், சமூகத்துடன் முன்னேறிச் செல்வதற்கும், சமூகத்துக்கு எவற்றையேனும் ஒப்படைப்பதற்குமான திறமையைப் பாடசாலை கொண்டிருக்க வேண்டுமெனக் கருதினார்.

ஜோன் டியூவியின் இவ்வாறான விதந்துரைகளுக்கேற்ப, ஆசிரியரின் கருமம் வேறுபடுகின்றது. குழந்தையை விளங்கிக் கொண்டு, அவனது விருத்திக்கும், முதிர்ச்சிக்குமேற்ப, அவனது ஆசைகள், விருப்புகளுக்குப் பொருத்தமாக முழு வளர்ச்சிக்கும் தேவையான அனுபவங்களை வழங்குதலே ஆசிரியரது கருமமாக இருத்தல் வேண்டும். ஆசிரியர் அறிவைக் கொடுப்பவராகவன்றி அறிவைத் தோற்றுவிப்பதற்கு வழிகாட்டியாகவே அமைய வேண்டுமென டியூவி வலியுறுத்தினார்.

புது அனுபவங்களைப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான முறைகளை நுண்ணாய்வு செய்பவர் ஆசிரியர். அவர் ஆக்கபூர்வமான சிந்தனைக்கு வழிகாண்பவர். அதற்கேற்றது பிரச்சினை தீர்க்கும் முறையேயாகும். டியூவியின் இக்கருத்துக்களே பிற்காலத்தில் செயல்திட்ட முறையாக விருத்தியடைந்தன. வறுமையான இடத்தில், உயிர்ப்பற்றதோர் இடத்தில், பிரச்சினைகள் எதுவுமில்லாத இடத்தில் கற்பனை ரீதியான அறிவைக் கட்டியெழுப்ப முடியாது. எனவே, செயற்படுகின்ற, உயிர்ப்பான சுற்றாடலில் அறிவைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பைப் பெற்றுக் கொடுத்தல் வேண்டும். பிரச்சினை தீர்க்கும் போது, தனித்தனியாகவும் கூட்டாகவும் செயற்படுவதற்கான வாய்ப்புக்கள் கொடுக்கப்படல் வேண்டும். இதற்கேற்ப, குழுக்கற்பித்தல் முறைக்கும் ஆர்வமூட்டுதல் வேண்டும். பாடசாலை என்பது சமூகத்தின் பிரதிபலிப்பாகும். எனவே, கூட்டு முயற்சி, கூட்டுத்தொடர்பாடல், பரஸ்பர நல்லெண்ணம் என்பன விரிவடையும் வகையில் அனுபவங்களைப் பெற்றுக் கொடுத்தல் வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனநாயகம் என்பது ஒரு வாழ்க்கைக் கோலம். ஜனநாயகம் சமூகத்தில் எவ்வாறு கருமமாற்ற வேண்டும் என்பதை பாடசாலை அனுபவங்களூடாகப் பெற்றுக் கொடுத்தல் வேண்டும். ஜனநாயகம் மூலம் சாதி, குலம் போன்ற வேறுபாடுகளை நீக்கி, சமூக முன்னேற்றத்துக்கு வழிகோல வேண்டும். அத்தகைய சமூகத்துள் பழக வேண்டிய வழிமுறைகளைப் பாடசாலை மூலம் பெற்றுக் கொடுப்பது கல்வியின் முக்கியமானதோர் எதிர்பார்ப்பாகும். மாணவன் சுதந்திரமாகப் புது அனுபவங்களைப் பெற்றுக் கொண்டே, பரீட்சார்த்த நடவடிக்கைகளை மேற்கொண்டபடியே அறிவை விருத்தி செய்து கொள்வதற்கான சுற்றாடலை வகுப்பறையில் அமைப்பதற்கான அடிப்படையை டியூவி அமைத்துக் கொடுத்தார்.

தனியாள் திறன்களை விருத்தி செய்து அவற்றிற்கேற்பச் சூழலைப் பயன்படுத்தி இயலுமானவற்றைப் பூரணப்படுத்திக் கொள்ள உதவுவதே கல்வி. எனவே, மனிதன் தனது தேவைக்கும், திருப்திக்குமேற்ப இயற்கையைப் பயன்படுத்தத் தெரிந்து கொள்ள வேண்டும். கல்வி என்பது, சமுதாயம் அழியாமல் பாதுகாப்பதற்கான கருவியாகும். சமுதாய அனுபவங்கள் கல்வியினால், கல்வி மூலம் பரிமாற்றம் செய்யப்பட்டு, எல்லோரும் பங்குபெறும் அனுபவங்களாக அமைய வேண்டும். தனியாள் ஆளுமையை வளர்ப்பதோடு, சமூக வாழ்வையும் தொடர்புபடுத்த வேண்டும். அதனால் தனியாள் சிறப்புற, சமூகமும் சிறப்புறும். எனவே, கல்வி வாழ்க்கையையும், சமூக முன்னேற்றத்தையும் நோக்கமாகக் கொள்ள வேண்டும்.

பாடசாலைகள் சமுதாயப் பிரதிபலிப்புகளாகும். குழந்தைகள் இயற்கையாகச் செயற்பட்டு வளர்ச்சியடையும் இடங்களாகும். இயற்கைச் செயற்பாடுகள் குழந்தைகளின் வாழ்வில் உண்மையான பங்குபெறுவனவாக அமைந்தாலே அவர்கள் சமூகப் பிரச்சினைகளை எதிர்நோக்கும் சக்தியைப் பெறுவர். எனவே, குழந்தைகள் உண்மையான சமூக நிலைகளில் வல்லமையுடையவர்கள் என்னும் நம்பிக்கையை வளர்க்கும் இடமாகவும் பாடசாலைகளுக்கு உண்மையான பயன்தரக்கூடிய செயற்பாடுகளை வழங்க வேண்டும். குழந்தைகள் உடற்பணிகளில் மாத்திரமன்றி, உளப்பணிகளிலும் ஈடுபட்டு சுயாதீனமாக, சுயசிந்தனையை வளர்க்க வேண்டும். குழந்தைகள் பாடசாலையில் சுதந்திரமான சூழலில் வளர வேண்டும். அவர்கள் சிந்தனையாற்றல் உள்ளவர்கள். அவர்களின் சிந்தனையாற்றலைத் தூண்டி, விஞ்ஞான நோக்கை விருத்தியாக்க வேண்டும். நுண்ணறிவு ஆக்கப் பணிகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுத்தப்படுவதோடு, சமூகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் உபயோகிக்கப்படல் வேண்டும். கல்வியைப் பெறுகின்ற வழிவகைகளிலும் அதன் சிறப்புத் தங்கியுள்ளது. குழந்தைகள் பெறும் அறிவு அனுபவ மதிப்புடையதாகவிருக்க வேண்டும். கல்வி அனுபவம், சமூக அனுபவம் இரண்டும் இணைந்த சமூக அறிவைப் பெறுவதே உண்மை அறிவாகும். குழந்தைகள் 'நாம் கற்கிறோம்' என்று கூறுவதை விட, 'நாம் அனுபவம் பெறுகிறோம்' என்று கூறுவதுதான் சிறந்த கல்வியாகும். எனவே, கல்வியென்பது அனுபவங்களை, அனுபவங்களால், அனுபவங்களூடாக வழங்குதலாக அமைய வேண்டும்.

கலைத்திட்டமானது குழந்தைகளின் இயற்கையியல்பு, வாழ்க்கை ஆகியவற்றுடன் பொருந்துவதாக அமைய வேண்டும். கலைத்திட்டத்தின் உள்ளடக்கம், சமுதாய உறுதி, ஒருமைப்பாடு என்பவற்றிற்கு ஏதுவான பாடங்களைக் கொண்டிருக்க வேண்டும். ஒருமைப்பாடு என்பது குழந்தைகளின் சுயமான சமூகச் செயற்பாடுகளினூடாக ஏற்பட வேண்டும். பாடங்கள் குழந்தைகளின் சமுதாய வாழ்க்கைக்கு உதவ வேண்டும். ஆகவே, கலைத்திட்டம், பிள்ளை மையம், வாழ்க்கை மையம், சமூக மையம் என்பவற்றை ஒருங்கே கொண்டதாக அமைய வேண்டும். எனவே கல்வியென்பது, காலத்திற்கேற்ற சமூகப் புனரமைப்புக் கருவியாக இருக்க வேண்டும். சமூகத்தின் குறைபாடுகளைக் கல்வி மூலமே நிறைவு செய்ய முடியும்.

அறிவியல் துறையையும், முறையையும் மென்மேலும் பயன்படுத்துவதாகவும், முன்னேற்றத்தை நோக்கி வளர்ச்சி பெறுவதாகவும் கல்வி அமைய வேண்டும். கல்வி பெறும் அடிப்படையில் தர்க்க ஆற்றல் வாய்ந்தவர் என்றோ, கைத்தொழில் ஆற்றல் வாய்ந்தவர் என்றோ வேறுபாடு இருத்தலாகாது. கலையும், விஞ்ஞானமும், தொழில்நுட்பமும் ஒன்றிணைந்த அறிவு சமூக வாழ்வில் இயற்கையைப் பயன்படுத்தக்கூடிய திறனைக் குழந்தையிடம் வளர்க்க வேண்டும். குழந்தைகளின் கற்றலானது அனுபவத் தொடர்ச்சியைக் கொண்டதாக, படிப்படியாக, ஆழத்திலும் அகலத்திலும் அதிகரித்துச் செல்வதாக குழந்தையின் விருத்தியோடு தொடர்பு கொண்டிருக்க வேண்டும். அத்தொடர்பு மனித சமூக, பண்பாட்டு விழுமியங்களைக் கொண்டதாக இருக்க வேண்டும்.

தனி மனித சுதந்திரத்திலும், மக்களாட்சியிலும் நம்பிக்கையுடையவர் டியூவி. குழந்தையின் சுதந்திரம், கல்வியின் சுதந்திரம் என்பவற்றின் மூலமே அரசியல், பொருளாதார விருத்தியை ஏற்படுத்த முடியும். தனியுரிமை ஒழிக்கப்பட்டு சமத்துவமும் சமதர்மமும் தழைக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என்பது டியூவியின் கருத்தாகும். எல்லோரும் கல்வியறிவு பெற வேண்டும்; கல்வி மூலம் சமூக அறிவு பெற வேண்டும்; பொருளாதார சுபீட்சம் பெறவேண்டும். தனிமனித வளர்ச்சியே சமூகத்தின் வளர்ச்சியாகும்; மனித குலத்தின் வளர்ச்சியாகும். மனிதகுல வளர்ச்சியே ஜனநாயகத் தத்துவமாகும். மனச்சாட்சியின் அடிப்படையில் அவர் வகுத்த கல்வி இயக்கம், சமத்துவ சமூக அரசியல் விடுதலை வேண்டி நிற்கும் இயக்கமாகவும் விளங்கியது.

எனவே, டியூவியின் கல்விச் சிந்தனைகள், பிள்ளைகளையும் சமுதாயத்தையும் மையமாகக் கொண்டு அறிவியல் அடிப்படையில் எழுந்தவை ஆகும். கல்வி என்பது மனித சக்திகளின் அமைப்பைப் பொறுத்தது. கல்வி மனித சக்திகளின் அமைப்பைச் சமூக சேவைக்குப் பயன்படுத்தும் ஒரு கலையாகும். கல்வி என்பது ஒரு சமூக முறையாகும். இதன் மூலம் சமூகமும் பாடசாலையும் ஒன்றுடன் ஒன்று இணைகின்றது. பிள்ளைகள் நம்பிக்கையும் உறுதியும் ஆற்றலும் உள்ளவர்களாகத் தமக்கும், சமூகத்திற்கும், நாட்டிற்கும் நற்பயன் தரும் குடிமக்களாக உருவாவதற்குரிய கல்வித் திட்டத்தை வகுத்தவர் டியூவியாவார். கல்விச் சீர்திருத்தவாதியான டியூவி, கல்வி மூலம் சமூக சீர்திருத்தத்திற்கும் வழிகாட்டியாக விளங்கினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9

## கல்வியில் உளவியல் அடிப்படை

### கல்வியில் உளவியல் - அக்காலம்

அக்காலத்துக் கல்வியில் உளவியலுக்கு இடமேயில்லை என்று நாம் எடுத்த எடுப்பிலே சொல்லி விடுவது வழக்கமாகி விட்டது. மேனாட்டுக் கல்வியியலாளரும் பொதுவாக இக்கருத்தை ஏற்றுக் கொள்கின்றனர். இது முற்றிலும் சரிதானா என்பதைத் தெளிய, நாம் நமது பாரம்பரிய மரபு வழிக் கல்வி பற்றிச் சற்றுச் சிந்தித்தல் நல்லது.

"ஈதல் இயல்பே இயம்பும் காலை
காலமும் இடனும் வாலிதின் நோக்கி
சிறந்துழி இருந்துதன் தெய்வம் வாழ்த்தி
உரைக்கப் படுபொருள் உள்ளத் தமைத்து
விரையான் வெகுளான் விரும்பி முகமலர்ந்து
கொள்வோன் கொள்வகை அறிந்தவன் உளங்கொள
கோட்டமில் மனத்தில் நூல் கொடுதல் என்ப"

என்கிறார் பவணந்தியார்.

பவணந்தியாரின் கற்பித்தலைத் தெளிந்து கொள்வோமானால், அன்றைய கற்பித்தலில் உளவியலுக்கு இடமேயில்லை என்று எடுத்த எடுப்பிலே சொல்லத் தயங்குவோம். 'காலமும் இடனும் வாலிதின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கி' என்பது பொருத்தமான சூழ்நிலையைக் குறிக்கவில்லையா? 'உரைக்கப் படுபொருள் உள்ளத்தமைத்து' என்பது ஆசிரியரின் பாடத் திட்டமிடலையும் ஆயத்த நிலையையும் குறிக்கவில்லையா? 'விரையான் வெகுளான் விரும்பி முகமலர்ந்து' என்பது ஆசிரியரின் ஆளுமையைக் குறிக்கவில்லையா? 'கொள்வோன் கொள்வகை அறிந்து' என்பது பிள்ளையின் நாட்டம், விருப்பு வெறுப்பு, இயல்பூக்கம், கவர்ச்சி, முதிர்ச்சி முதலியவற்றைக் குறிக்கவில்லையா? இவை எல்லாம் உளவியலின் பாற்படாதா? எனவே நமது பண்டைய பாரம்பரியக் கல்வியில் உளவியலுக்கு இடமேயில்லை என்று எவ்வாறு சொல்ல முடியும்? அன்றைய கல்வியிலும் உளவியல் அம்சங்கள் இருந்தன. ஆனால், அவை உளவியல் என்ற பெயரால் குறிக்கப்படவில்லை. அத்தோடு அவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது குறைவு. அதன் காரணம் ஆசிரியருக்கும் பாடத்துக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டமையாகும். இவ்வாறு நமது பாரம்பரியக் கல்வியில் உளவியல் அம்சங்கள் நடைமுறையில் இடம்பெற்றாலும் அவை முழுமையாக முக்கியத்துவம் பெறவில்லை என்பதே உண்மை. அதாவது, உளவியல் அடிப்படையில் குழந்தைக்கு முக்கியத்துவமளிக்கும் குழந்தை மையக் கல்வி இருக்கவில்லை.

இந்த நிலையிலேதான் மேலை நாட்டார் வருகையும், அவர்களது நிருவாகத்துக்கான கல்வி முறைகளும் நம்மிடையே செல்வாக்குச் செலுத்த முற்பட்டன. அந்த நிலையிலும் சமீப காலம் வரை குழந்தை உளவியல் பாடசாலைகளில் ஆசிரியரைப் பொறுத்து சம்பந்தப்படாத ஒன்றாகவே இருந்து பாட ஆயத்தத்துக்கு வழிகாட்டும் அடிப்படைகளாகத் தெரிந்ததிலிருந்து தெரியாததுக்குப் போதல், தெளிவிலிருந்து சிக்கலுக்குப் போதல், காட்சி நிலையிலிருந்து கருத்து நிலைக்குப் போதல் முதலியவற்றை ஆசிரியர்கள் மேற்கொள்ள வேண்டியிருந்தது. ஏதோ ஒரு வகையில் புலனாதல், காட்சி பெறல், அவதானித்தல், ஞாபகத்தில் இருத்துதல், நம்பிக்கை கொள்ளல் என்பன மேற்கூறப்பட்ட அடிப்படைகளில் இணையுமானால், அதுவே வெற்றிகரமான, சிறந்த, உண்மையான கற்பித்தல் எனக் கருதப்பட்டது. தனியாள் வேறுபாட்டுக் கொள்கை முற்றாகவே கருத்திலெடுக்கப்படவில்லை. எல்லா மாணவர்களும் ஒரே மாதிரியானவர்கள் எனக் கருதப்பட்டனர். குழந்தைகளின் முக்கிய தேவைகளுக்கேற்ப அவர்களை இசைவுபடுத்த முயற்சியெடுக்கப்படவில்லை. இசைவின்மை பாடசாலைகளில் அரிதாகவே கவனிக்கப்பட்டது. ஒவ்வொருவருக்குமான அறிவுரை முயற்சிகளெல்லாம், மாணவரின் தேவைகளுக்கான திறமைகளின் பொருத்தப்பாடெல்லாம் ஆசிரியரின் குறைபாடாக, பலவீனமாகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதப்பட்டது. பரீட்சகரால் கணிக்கப்படும் தரத்துக்கு மாணவர்களைக் கொணர்தலுக்கு ஆசிரியர் மட்டுமே முழுப் பொறுப்பானார்.

கல்வி விடயங்கள், மாணவர், அவர்களின் சுற்றாடல் என்பன மாறாதன, ஒன்றிணைந்தன என ஆசிரியர் நினைத்தார். மாணவர் ஆளுமையின் சக்தி வாய்ந்த நிலை முற்றாகப் புறக்கணிக்கப்பட்டது. அத்தோடு, ஆசிரியரும் இந்த எண்ணக்கரு பற்றி அறவே உணராதவராய் இருந்தார். என்றுமே மாறாத உலகம் அவருக்கு நிலையாகக் காணப்பட்டது. அறிவூட்டலுக்கான சாதனங்கள் இன்றியமையாதன என்பதை அவர் அதுவரை சிந்திக்கவில்லை. கல்விச் சக்திகளின் பொதியாக மனம் மட்டுமே அவருக்குக் காணப்பட்டது. அத்தோடு அந்தத் தனித்தனியான சக்திகளை வழிநடத்துவதற்குப் போதனை மட்டுமே ஒரே வழியாகவும் இருந்தது. அவதானிப்புக்கு அங்கு இடமில்லை. போதனையே பயிற்சிக்கான சாதனமாயிருந்தது. ஞாபகம் பயிற்சியாலும், திரும்பத் திரும்பச் சொல்லுதலாலும் வலிமை பெறுமெனக் கருதினார். மாணவனின் அறிவைக் கூர்மையாக்குவதற்குக் கடுமையான பிரச்சினைகளை ஒழுங்கமைத்துக் கொடுத்தலே பொருத்தமானது எனக் கருதப்பட்டது. 'கொள்வோன் கொள்வகை அறிந்து' என்பதால் மாணவனின் மனத்தின் தயார்நிலை அன்று உணரப்பட்டாலும் கற்பித்தல் நடைமுறையில் அது கணிக்கப்படவில்லை. இவற்றால் அன்றைய கல்வியில் உளவியல் அம்சங்கள் உணரப்பட்டாலும் ஆசிரியரின் கற்பித்தல் செயற்பாட்டில் அவை புறக்கணிக்கப்பட்டன எனக் கூறுவதில் தவறில்லை.

## கல்வியில் உளவியல் - இக்காலம்

உளவியல் உலகைப் பொறுத்து, சமீபகால ஆய்வாளர்கள், நிலைமையைக் கணிப்புக்கிடமான ஒன்றாக மாற்றியமைத்துள்ளனர் எனலாம். பழைய இலட்சியவாதமும் பழைய கல்வித் தத்துவங்களும் கைவிடப் பட்டுள்ளன, அல்லது முழுமையாகவே திருத்தி மாற்றியமைக்கப்பட்டுள்ளன. புதிய எண்ணக்கருக்களும், முறைகளும் இதுவரையில் இருந்த ஊக்கமளிக்காத - உயிர்ப்பற்ற ஆசிரியரின் வேலையிலிருந்து மாறுபட்டனவாக, உற்சாகமூட்டுவனவாக அமைந்துள்ளன. மாணவர்களைச் சராசரி மாதிரிகளாக உருவாக்கும் நிலைமாறி, ஆசிரியர்கள் கற்பித்தற் கலையை அதிக விஞ்ஞான அடிப்படை கொண்டதாக மாற்றவல்லவர்களாகி உள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதனையாளராக மாத்திரமிருந்த ஆசிரியர், இப்பொழுது குழந்தைகளின் பௌதீக, சமூகப் பின்னணிகளை நன்றாக அறிந்தவராயுள்ளனர். ஆசிரியர் இப்பொழுது, குழந்தைகள் எங்கிருந்து வருகிறார்களோ அந்த வீடுகளை நன்கு அறிந்தவராக இருக்க வேண்டியவராகிறார். அவர்கள் வாழும் சுற்றாடலை அறிய வேண்டியவராகிறார். ஆசிரியர் குழந்தைகள் கற்கின்ற நாட்டையும் சமூகத்தையும் புறக்கணிக்க முடியாது. பாடசாலையின் எல்லாப் போதனையும் தனியாள் வேறுபாட்டைக் கருதுவனவாக இருத்தல் வேண்டும். குழந்தைகள் எல்லோரும் ஒரே மூலப்பொருளால் ஆக்கப்பட்டவரல்லர். சிலர் மெல்லச் செய்பவராக, சிலர் விரைவானவராக, சிலர் மந்தமானவராக, சிலர் மீத்திறனுடையவராக இருப்பர். மாணவர்களின் ஆற்றல், செய்திறன் சம்பந்தமான எல்லாத் தீர்மானங்களும் உளவியல் வடிகட்டலினதும் புள்ளிவிபரப் பகுப்பாய்வினதும் பின்பே எடுக்கப்படல் வேண்டும். மானுடவுயிரி முடிவில்லாத மாறுதல்களுக்கு உள்ளாகக் கூடியது. ஆகவே மானுட நடுநிலைமைக்கும் தேவைப்படுவது, குழந்தைகள் பற்றிய எல்லாத் தகவல்களின் அடிப்படையிலும் பெற்ற குறிப்புரைகளன்றி முடிவுகளல்ல.

ஆசிரியர், தவறான பொருத்தப்பாட்டுக்கான காரணங்களை விளங்கிக் கொள்ளக் கூடியதாக தயார்நிலையிலிருக்கக் கூடியவராகவும் அதனைத் தீர்க்கக் கூடிய ஆழ்ந்த அனுபவமுள்ளவராகவும் இருத்தல் வேண்டும். அதற்கான முறைகள் தெரிந்தவராகவும் இருத்தல் வேண்டும். கற்றற் செயன்முறையின் விதிகள் வகுப்பறையில் ஆசிரியருக்கு முக்கியமான வழிகாட்டியாகவிருத்தல் வேண்டும். அதாவது ஆசிரியர் பௌதீகவியலாளராக, சமூகவியலாளராக, அதற்கு மேலாக ஓர் உளவியலாளராக இருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறார். ஆகவே அவர் மாணவரின் மனத்தின் வழிநடத்து விசையை விளங்கிக் கொண்டவராக இருக்க வேண்டும். அத்தோடு ஆசிரியர் தனது கடமையைச் சரியாகச் செய்து முடிக்கும் வெற்றிகரமான கல்வியியலாளராகவும் இருக்க வேண்டும்.

### கல்வியில் உளவியல் - உயிர்ப்பூட்டும் கல்வியியலாளர்கள்

பண்டைய மேதைகள் கூட கல்வியில் உளவியல் பற்றிச் சரியான உணர்ச்சியுள்ளவர்களாக இருந்திருக்கிறார்கள். இதற்கு நல்ல உதாரணம் அறிஞர் பிளேட்டோ ஆவார். பிளேட்டோவின் கருத்துப்படி, கல்வியானது மிக விரும்பத்தக்க சால்பினை இளைஞர்களிடத்தும் யுவதிகளிடத்தும் அழுத்தமாகப் பதியச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தல் வேண்டும். ஆசிரியர்களின் இயற்கையை முழுமையாகவும் நன்றாகவும் அறியாவிட்டால் இதனைச் செய்ய முடியாதென அவர் நம்புகிறார். ஒரு நல்ல ஆசிரியருக்கு மனித இயற்கை பற்றிய அறிவு இன்றியமையாததாகும். பிளேட்டோ தமது 'குடியரசு' என்ற நூலில் கல்வி பற்றிக் குறிப்பிடுகையில், நாம் மனதில் பதிக்கக்கூடிய விபரங்களைத் தருகிறார். மனிதனுக்கு இயல்பான முக்கிய மூலவளம் கல்வியாகும். கல்வியின் தொழிற்பாடு இயற்கையை வழங்குவதாகும். ஓர் அரசோ ஒரு தனிப்பட்டவரோ கல்வியை ஒழுங்கான வழியில் வழங்கப் பொறுப்பேற்க முடியும். எதைக் கற்பிக்க விரும்புகிறார்களோ அது பற்றிய அடிப்படை அம்சங்களின்றிக் கற்பிக்க ஆரம்பிக்க முடியாது. அத்தோடு வாழும் மனித குலத்துக்குப் பொருந்துமாறு அந்த அம்சம் கற்பிக்கப்பட வேண்டும் எனப் பிளேட்டோ நம்பினார்.

ரூசோ தனது காலத்தில் கல்வியில் உளவியல் அடிப்படைகள் பிரயோகிக்கப்படாமை கருதி வருந்தினார். "பகுத்தறிவாளர்கள் யாராவது குழந்தைகளை அவதானிக்கும் கலை பற்றிய ஆய்வுநூல் தருவார்களானால் அதை நான் விரும்பி வரவேற்பேன். அக்கலை எமக்கு மிகப் பெரிய பெறுமதி வாய்ந்ததாயிருக்கும். ஆனால் அத்தகைய நூலைத் தந்தையர்களும் ஆசிரியர்களும் மிகவும் முதன்மையானதென இன்னும் கற்றறியவில்லை"

பெஸ்டலொசியின் கருத்துப்படி, கல்வியென்பது ஒத்திசைவான, இயற்கையான, முன்னேற்றகரமான மாணவரின் விருத்தியாகும். இந்த நோக்கத்தை அடைவதற்குக் குழந்தையின் மனத்துட் செயற்படுவதற்கான ஆழ்ந்த நுண்ணறிவு ஆசிரியருக்குத் தேவை. ஆசிரியருக்கு மாணவரின் தேவைகள், ஆசைகள், ஆற்றல்கள் என்பன தெரிந்திருக்க வேண்டும். சில குறித்த சந்தர்ப்ப சூழ்நிலைகளில் குழந்தைகள் எவ்வாறு நடந்து கொள்கிறார்கள்; அவர்களின் செயற்பாட்டு இயற்கை எத்தகையது என்பனவும் தெரிந்திருக்க வேண்டும்.

ஹேபர்ட்டின் காலத்தில் சாதாரணமாக எங்குமிருந்த போதனை முறையில் குறைபாடுகள் இருந்ததாக அவர் நம்பினார். ஏனெனில், அது ஆரோக்கியமான உளவியலை அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லை. கல்வியின் சரியான கோட்பாடு, சரியான உளவியலில் தங்கியிருக்க வேண்டுமென அவர் சரியாகவே சிந்தித்தார். ஆகவே நினைத்தது போல சரியான உளவியல் சார்ந்த கற்பித்தலை நோக்கி அவரின் பிரயத்தனத்தை வழிநடத்தினார். அதாவது மனித மனத்தின் செயற்பாட்டுக்கான சரியான அறிவை அவர் நாடினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரோபல், 'சுயேச்சையான உத்வேகங்களும், உகந்த மனநிலையும் கொண்ட பிள்ளைகளுக்கான, இயற்கையான, மனித மனோபாவமுள்ள அறிவை ஓர் ஆசிரியர் பெற்றிருக்க வேண்டும்' என உணர்கிறார். 'அவனுடைய இயற்கையான நினைப்பாற்றலைத் தூண்டுதல் மூலமாக மாணவனை இலகுவாகத் தன் பாடத்தில் அக்கறை கொள்ளச் செய்யலாம்' என அவர் கருதுகிறார். அத்தோடு, அவனது உள்ளார்ந்த சுபாவத்தையும் பிரயோகிக்கச் செய்யலாம் என்கிறார். 'வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டமும் மனிதனுக்குப் பின்னாலுள்ள ஏதோ ஒன்றைப் பொறுத்ததாக மாத்திரமில்லை. ஆனால், அதற்குள்ளே ஒரு முடிவும் கூட இருக்கிறது. ஒரு குறிப்பிட்ட வயதையடைந்ததனால், சிறுவன் சிறுவனாக ஆவதில்லை, இளைஞன் இளைஞனாக ஆவதில்லை. ஆனால், உண்மையான அவனது மனத்தின் தேவைகளோடு, அவனது உடலோடு, உணர்ச்சிகளோடு, குழந்தைப் பருவமூடாக வாழ்கிறான்; பிள்ளைப் பருவமூடாக வாழ்கிறான். அதேபோல, வயது வந்தவன், ஒரு குறிப்பிட்ட வயதையடைந்ததால் வயது வந்தவனாக ஆகவில்லை. ஆனால் உண்மையாக, அவனது குழந்தைப் பருவத்தில், பிள்ளைப் பருவத்தில், கட்டிளமைப் பருவத்தில் தேவைகளைத் திருப்தியாக்கியதால் மட்டுமே அதனையடைந்தான்' என புரோபல் வற்புறுத்திக் கூறுகிறார்.

மொன்ரிசோரியின் காலத்தில் உளவியல் ஒரு சுதந்திரமான பகுதியாக விஞ்ஞான ஆய்வுகூடங்களில் வளர்ந்தது. அவரது கருத்துப்படி, பரிசோதனை ரீதியிலான உளவியல், அவரின் கடமையை வெற்றிகரமாக ஆற்றுதலைப் பொறுத்து ஓர் ஆசிரியருக்கு இன்றியமையாதது. உளவியலூடான அறிவு இல்லாவிடில், மொன்ரிசோரி முறையிலான கற்பித்தலைச் செயற்படுத்த முடியாது. ஆசிரியர் ஆழமான உளவியல் உள்ளுணர்வோடேயே மாணவரின் நடத்தையில் எப்போதும் தலையிட்டு ஒழுங்கான துலங்கலைத் திருப்தியாகப் பெறலாம் என்பதை இலகுவாக விளங்கிக் கொள்ளலாம்.

## நவீன கல்வி எண்ணக்கரு

அக்காலத்தில் கல்வியென்பது, மனத்தைத் தகவல்களால் நிரப்பும் செயன்முறையெனும் கருத்துடையதாயிருந்தது. அதாவது பிள்ளையின் மனம் வெற்றுக்குடம் போன்றது. ஆசிரியர் அறிவைத் திரட்டி அதை நிரப்புபவர் என்ற கருத்து இருந்தது. இதை நன்னூல் 'பாடங் கேட்டலின் வரலாறு' என்ற தலைப்பில் பின்வருமாறு கூறுகிறது:


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோடல் மரபே கூறும் காலை
பொழுதொடு சென்று வழிபடல் முனியான்
குணத்தொடு பழகியவன் குறிப்பிற் சார்ந்து
இருவென இருந்து சொல்லெனச் சொல்லிப்
பருகுவன் அன்ன ஆர்வத்தனாகி
சித்திரப் பாவையின் அத்தக அடங்கி
செவிவாய் ஆக நெஞ்சுகளன் ஆகக்
கேட்டவை கேட்டவை விடாது உளத்தமைத்து
போவெனப் போதல் என்மனார் புலவர்

இதிலே, 'செவிவாய் ஆக நெஞ்சுகளன் ஆக' என்பது மனத்தைத் தகவல்களால் நிரப்பும் செயன்முறையைக் குறிக்கிறது.

இதற்கு எதிராகக் குழந்தைகளையிட்டு உன்னதமாகச் சிந்திக்கும் ஒரு வாதத்தை இப்போது கொண்டுள்ளோம். இன்று எமது கல்வி பற்றிய எண்ணக்கருவானது முழுமையாகவே நவீனமயமானதாகும். இந்தப் புதிய எண்ணக்கருவின்படி ஒவ்வொரு குழந்தையும் இயற்கையாக, தன்னிச்சையாக வளர்கிறது. இதன்படி, கல்வியானது ஒத்திசைவான, முன்னேற்றகரமான, இயற்கையான, சுயேச்சையான வளர்ச்சியை நோக்கமாகக் கொள்ள வேண்டும். மாணவர்கள் ஊக்கமுள்ளவர்களாகவும் உற்பத்தியாற்றல் உள்ளவர்களாகவும் ஆகவேண்டும். அவர்கள் மனச் சோம்பலான பழக்கத்தைக் கொண்டிருக்கலாகாது. அவர்களுக்குச் சிந்திப்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும். குறிப்பாக, உயரிய மானசீகமான வழியில் சிந்திக்க வேண்டும். அப்படியானால் அவர்களது ஆற்றல் சமூக நலத்தின் உயர்வுக்குப் பங்களிப்பதாக அமையும். படைப்பாற்றற் சிந்தனையும், மெய்மையான எண்ணங்களும், நடிப்பாற்றலும் உள்ளவர்களாக அவர்களை ஆக்குதலே கல்வியின் நோக்கமாக இருக்க வேண்டும். ஒழுங்காக நிறைவேற்றப்படும் இக்கல்வி நோக்கம் சுயேச்சையான குழந்தையின் வளர்ச்சியைக் கொண்டதாக இருக்க வேண்டுமேயன்றி தேவையற்ற தலையீடுகளைக் கொண்டிருக்கக் கூடாது. மாணவர்கள் தாமாகவே முழுமையாக ஈடுபட விடப்பட வேண்டும். ஆசிரியர் கண்டிப்பான ஒழுக்கக் கட்டுப்பாட்டாளரல்லர். அவர் தன்னோடுள்ள மாணவரின் நண்பராகவும் வழிகாட்டுபவராகவும் இருக்க வேண்டும். ஆசிரியர், மாணவர்கள் தமது வேலைகளை வெற்றிகரமாகச் செய்யக் கூடிய சக்தி வாய்ந்த உதவியாளராகவும், இலக்குகளையும் அதற்கான செயற்பாடுகளையும் ஒழுங்கமைக்கக் கூடிய ஆற்றலுள்ளவராகவும் இருக்க வேண்டும். ஆசிரியர்கள் தமது மாணவரை ஆய்வுகளில் தாமாக ஈடுபட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைப்பவராகவும், சமூக விசுவாசமுள்ளவராகவும் வழிநடத்த வேண்டும். அதாவது, கல்வியால் மாணவர் தமது பிரச்சினைகளுக்கு இறுதித் தீர்வு காண்பவராகவும் தமது கடமைகளைத் தாமே நிறைவேற்ற வல்லவராகவும், அவர்களது வாழ்க்கையை அவர்களே திட்டமிடக் கூடியவர்களாகவும் ஆற்றல் பெற வேண்டும்.

கல்வியானது குழந்தையின் எல்லா ஆளுமையையும் விருத்தியாக்கிக் கொடுத்தல் வேண்டும். இப்போது நாம் நமது பாடசாலையில் அல்லது கல்லூரியில், வியாபகமான வகையில் கல்வி வழங்க முயல வேண்டும். அதனால் மாணவர்கள் ஆளுமைகளைச் சக்தி வாய்ந்ததாகவும் இசைவுள்ளதாகவும் விருத்தியாக்க வேண்டும். நமது இலக்கு வெறுமனே வாசிக்கவும், எழுதவும், புவியியல், வரலாறு என்பவற்றை அறியக் கற்பிப்பதாகவும் மட்டும் இருக்கக் கூடாது. நமது பாடசாலைகள் பண்பட்ட வளர்ந்தவர்களை உருவாக்குவது மட்டுமன்றி, சக்தி வாய்ந்த, ஆனால் பௌதீக ரீதியாக, மனவெழுச்சி ரீதியாக, சமூக ரீதியாக, ஆன்மீக ரீதியாக வளர்வதற்கு உதவக்கூடிய சூழ்நிலையை அமைத்துக் கொடுத்தல் வேண்டும்.

மேற்கூறப்பட்ட கல்வி எண்ணக்கரு குழந்தைகளின் அக்கறைக்குரிய கற்றல் கற்பித்தலின் முழுப்போக்கையும் கொண்டு செயற்படுவதற்கான குறிப்பிட்ட அடிப்படை மாறுதலைக் கட்டாயப்படுத்தும்; அவசியமானதாக்கும். இந்த மாறுதல்கள் சிக்கலான பிரச்சினைகளை ஏற்படுத்தும். அவை உளவியலால் மாத்திரமே தீர்க்கக் கூடியனவாக இருக்கும். இவை கல்வியின் உளவியல் அடிப்படைக்கு வேண்டியனவாகும்.

## கல்வியும் குழந்தை விருத்திப் படிகளும்

குழந்தையின் பல்வேறு விருத்திப் படிகளை நோக்குவது மூலம் நாம் கல்வியின் உளவியல் அடிப்படையின் பெறுமதியை இலகுவில் விளங்கிக் கொள்ளலாம். குழந்தையின் செயற்பாடுகள் பிறப்பில் மட்டுப்படுத்தப்படுகின்றன. அவனது நடத்தை பெரும்பாலும் இயல்பூக்க மட்டத்திலேயே உள்ளது. முதலில் அவன் பசியூக்கத்தால் அல்லது உணவூக்கத்தால் தூண்டப்படுகிறான். அவனது நடத்தை அவன் பெரியவனாக வளரும் போது அதிக சிக்கலாகிறது. அவனது ஆற்றல்கள் அவையாகவே பல்வேறு வடிவங்களில் வெளிப்படையாகத் தெரிகின்றன. இங்கிருந்தே கல்வியாளர்களின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். 'முதல் இரண்டு அல்லது மூன்று வருடங்களில் அவன் கற்றுக் கொள்வது ஏனைய வாழ்க்கைக் காலம் முழுக்கக் கற்பதிலும் பார்க்க அதிகமானது' எனக் கூறப்படுகிறது. ஆசிரியர் இதை மிகச் சிறிய அளவிலாவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறியாதிருக்கலாம். ஆனால், விசேடமாக இளங்குழந்தைகளைப் பொறுத்து முழுமையாக அசட்டை செய்வது ஒரு கொலைக்குச் சமமான தவறாகும். குழந்தை ஏழாவது வருடத்தை எட்டும் போது, வேலைக்கும் விளையாட்டுக்கும் உள்ள வேறுபாட்டைப் பொதுவாக, தெளிவாக அறிந்து கொள்வான். இப்போது அவன் அடிவைக்கும் படிக்கல் போல, நாகரிக வாழ்வின் அக்கறையைப் பெற்றுக் கொள்கிறான். தயார் நிலையின் புராதன கால வடிவம் மானசீகக் காட்சி மட்டத்தில் உதயமாகி, ஒரு மானசீக அந்தத்தை அடைகிறது. தர்க்க ரீதியான நினைவாற்றல் இன்னும் விருத்தியடையவில்லை. கற்பனையின் சிறகடிப்பு இலேசாகக் கட்டறுத்து ஆரம்பிக்கிறது. அவனது பிரபஞ்ச முன் செல்கை புத்திசாதுரியமான வெற்றி காண்கிறது. சாதாரண நிபந்தனையின் கீழ் எட்டு அல்லது ஒன்பது வயதுப் பிள்ளை வழக்கத்துக்கு மாறாகச் சில தற்கட்டுப்பாட்டைப் பெறக்கூடியதாகிறது. அவன் தனக்கு மூத்தவர்களின் ஆணைகளை ஏற்றுக் கொள்ளவும் சிந்திக்கவும் ஒரு குறிப்பிட்ட அளவுவரை அவற்றின்படி நடக்கவும் கற்றுக் கொள்கிறான். அவன் பணிப்புகளுக்கு அல்லது நிபந்தனைகளுக்குக் கண்மூடித்தனமாக முன்னரைப் போல இப்போது அடங்கிப் போபவனல்லன். எப்படியாயினும் மூத்தவர்களின் நடத்தைகள் இன்னும் அவனுக்கு ஒழுக்கம் வாய்ந்தனவாயுள்ளன. அதன் காரணமாக அவனது ஒழுக்க விருத்தி, அவனது மூத்தோர்களைப் போல செய்வதால் வந்தடைகிறது. அவனது ஒழுக்க நடுநிலைமை, வேறெந்த நடுநிலைமையாலும் வழிகாட்டப்படுவதில்லை. ஆனால் சிலரிடமுள்ள உண்மைப் பற்றினால் வழிநடத்தப்படுகிறது. அவனைச் சுற்றியுள்ள மக்களும், கதைகளினதும் இலக்கியங்களினதும் கதாநாயகர்களும் அவனது வழிகாட்டிகளாவர். ஒரு கல்வியாளர், ஒழுங்காக - சரியாகக் கல்வி அளிப்பதானால், குழந்தைகளின் பல்வேறு விருத்திப் படிநிலைகளை விளங்கிக் கொள்ள வேண்டியவராவர். ஆனால் உளவியல் தத்துவங்களின் அடிப்படையிலுள்ள பல்வேறு வளர்ச்சிப் படிநிலைகளைப் பற்றிய அறிவு இல்லையானால் அது சாத்தியமாகாது.

மனத்தைப் பொறுத்து வடிவமும் மாதிரிகளும் பதினொரு வயதுக்கும் பதினான்கு வயதுக்குமிடைப்பட்ட சிறுவர்களின் அக்கறையின் நீடிப்பில் அதிகமாக விளையாடுகின்றன. கட்டிளமைப் பருவத்தில் இளைஞரும் யுவதியரும் நிகழ்காலத்தை விட எதிர்காலத்தில் அதிகளவு வாழ ஆரம்பிக்கின்றனர். நம்பிக்கைகள், கனவுகள், ஆசைகள், திட்டங்கள் கட்டிளமைப் பருவத்தினரின் மனத்தை ஆக்கிரமித்துக் கொள்கின்றன. சமூக உணர்வின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ச்சியோடு கட்டிளமைப் பருவத்தினர் ஒழுக்க விழுமியங்களை விளங்கிக் கொள்கின்றனர். உடல், உளச் சக்திகள் மனவெழுச்சி அலைகளின் உயிர்ப்போடு வெளிப்படுகின்றன. அது மீளமைப்புச் செயற்பாட்டோடு நிகழ்கின்றது. அங்கே உள்ளார்ந்த தேவைகளுக்கும் வெளியேயான உண்மைகளுக்குமிடையே ஒரு போராட்டம் நிகழ்கிறது. கட்டிளைஞன் சுதந்திரத்தைத் தேடுகிறான். அவன் உலகத்தில் தனக்கே உரிமையான ஓரிடத்தைக் கண்டுபிடிக்க முயற்சிக்கிறான். இசைவாக்கம் என்பது உள்ளார்ந்த முயற்சிக்கும் வெளியேயுள்ள உண்மைக்குமிடையில் முதிர்ச்சியடையும் ஆளின் அதி முக்கிய பிரயத்தனமாக இடம்பெறுகிறது. இந்தச் சிக்கலான பருவத்தில் வழிகாட்டற் பொறுப்பேற்கும் கல்வியாளர் இந்தக் கொந்தளிப்பான மனவெழுச்சிகளைச் சரியான பாதையில் திசை திருப்புமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். இந்தப் பருவக் கல்வியானது வெறுமனே தகவல்களைக் களஞ்சியப்படுத்துவதோடு மாத்திரம் நின்றுவிடக் கூடாது. அது பிள்ளையின் உள்ளார்ந்த உருவாக்கத்தோடு, அதனோடு கூடிய வெளிப்பாட்டையும் அளித்தேயாக வேண்டும். அதுதான் குழந்தை விருத்தியின் உளவியற் பயன்பாடாகும். மனோதிடம், ஆற்றல் தரும் உடற்பயிற்சி விளையாட்டுக்கள், பயிற்சிகள், படைப்பாற்றல், அழகியற் செயற்பாடுகள், ஆய்வுகூட வேலைகள் என்பவற்றுக்கெல்லாம் இப்பருவமே உகந்ததாகும். உளவியல் இங்கே நமக்கு என்ன சொல்கிறது? 'எந்த நுண்ணறிவையும் அழகியல் அக்கறையையும் சரியான வழிநடத்துகைக்கான நிரந்தரத் தூண்டு சக்தியாக்குதற்காகத் திறந்து வெளியிடுவதற்கு இதுவே நேரம், வேறு இல்லவேயில்லை'. இது தெளிவாக்குவது இதுதான். 'ஒரு தாழ்ச்சி மனப்பாங்கு, செயலுக்கான கவர்ச்சியால் சரிபார்க்கப்படுகிறது. மிகைப்படுத்தப்பட்ட ஆசையும் எதிரொலிக்காத செயற்பாடும் கடுமையான கற்றலுக்கான கவர்ச்சியால் சரிபார்க்கப்பட வேண்டும்'.

## ஆசிரியரும் உளவியலும்

சில ஆசிரியர் உளவியல் கற்பதற்கும் அதைக் கண்டு கொள்வதற்கும் எதிராகத் தப்பெண்ணம் கொள்கின்றனர். இதன் காரணம், அவர்கள் கல்வியில் உளவியலின் உண்மையான இயல்பையும் அது பெறும் இடத்தையும் விளங்கிக் கொள்ளாமையாகும். எவரும் கல்வியில் உளவியல் பெறும் இடத்தையும் உண்மையான இயல்பையும் சரியாக விபரிக்க முடியாது. எந்த வரையறையும் ஏதோ ஒரு வகையான மனம்போன போக்கில் அமைந்திருக்கும். உளவியல், அதைக் கற்பதற்குக் கொண்டிருக்கும் அதன் எல்லையைப் பற்றிச் சிந்திக்க நாம் முயல்வதே நல்லது. மாணவரின் கல்வியில் அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டியெழுப்பத் தேடுகின்ற அறிவு வகைகளையும் பயன்பாட்டையும் நாம் சிந்திக்கலாம். கல்வி உளவியல் உலகில் உள்ளடங்கியிருக்கும் அம்சங்களாக, வீடும் சமூகமும், மாணவரும் அவர்களது மன இயல்பும், இயற்கையும், ஆளுமை விருத்தியும், பல்வேறு வகையான கற்பித்தல் முறைகளும், பிரச்சினைகளும், கலைத்திட்ட அடிப்படைகளும், ஆசிரியர் மாணவர்கள் கொள்ளும் தொடர்புகளும், நல்ல-தீய நடத்தை இயல்புகளும், பாடசாலை மாணவர்களின் பல்வேறு எதிர்வினைகள் முதலானவைகளையும் குறிப்பிடலாம். எல்லா வகையான மாணவரதும் இயல்பான நிலை, இயல்புக்கு மாறுபட்ட நிலை, சிறப்பான இயல்பு, இசைவு, இசைவின்மை, பின்தங்கியமை என்பனவெல்லாம் கல்வி உளவியலின் பார்வை வரம்புக்குள்ளே வருகின்றன. அதனால் கல்வி உளவியல் ஆசிரியருக்கு அவரது மாணவர்கள் பற்றிய தகவல்களையெல்லாம் தருகிறது. இவற்றின் உதவியுடன் ஆசிரியர் பாடப்பொருளினதும், கற்பித்தல் முறைகளினதும் பொருத்தப்பாட்டினை விளங்கிக் கொண்டு, அவற்றைச் சரியான ஆளுமை விருத்திக்குப் பயன்படுத்தலாம். தயார்ப்படுத்தப்பட்ட உளவியல் உள்ளுணர்வோடு ஆசிரியர் மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டலாம். அக்கறை விருத்தி, பிள்ளைக்கு அத்தியாவசியமான பல்வகைத் திறன்கள் என்பவற்றை விருப்புக்கு இடமான, சுற்றாடலுக்கேற்ற இசைவாக்கம் என்பவற்றிற்கு உகந்ததாகத் தூண்டலாம்.

கல்வி உளவியலானது, தத்துவம் அல்லது தற்சோதனைத் தகவல் பற்றி அதிகம் வற்புறுத்தவில்லை. அது, குழந்தை தானாகவே கற்பதில்தான் கவனம் செலுத்துகிறது. அது ஆசிரியர், பெற்றோர், நிருவாகிகள் ஆகியோர் குழந்தையின் கல்வியில் முகம் கொடுக்க வேண்டிய நடைமுறைப் பிரச்சினைகளுக்கான விஞ்ஞான ரீதியிலான அறிவை உண்டாக்குகிறது. எனவே, குழந்தையின் கல்வியை உளவியலின் உதவியின்றி வெற்றிகரமானதாகக் கொண்டு நடத்த முடியாது.

## உளவியல் என்ன செய்கிறது?

உளவியலின் சில முக்கியமான பங்களிப்புக்களை நாம் பார்த்தோமானால், கல்வியில் உளவியல் அடிப்படைகளை மிகச் சுலபமாக விளங்கிக் கொள்ளலாம். உளவியலின் சில முக்கியமான பங்களிப்புக்களைப் பின்வருமாறு குறிப்பிடலாம்:

- குழந்தைகளின் தனியாள் வேறுபாட்டை எமக்கு அறிமுகமாக்குகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- குழந்தைகளின் மந்த புத்தியையும் பின்தங்கிய தன்மைகளையும் விளங்கிக் கொள்ள உதவுகிறது.
- குழந்தைகளின் பல்வேறு வயது நிலைகளின் அடிப்படைத் தேவைகள், அவர்களின் கல்வி ஈடுபாடுகள் என்பவற்றை உளவியலால் தெளிவாக அறிந்து கொள்ள முடிகிறது.
- பாடசாலை வாழ்க்கையின் எல்லா நிலைகளிலும் மனவெழுச்சிக் காரணிகளின் இடம் உளவியலால் நன்கு விளக்கப்படுகிறது.
- உளவியல் பொதுவான நுண்ணறிவின் இயல்பை விளக்குகிறது. பல்வேறு பாடசாலைப் பிரச்சினைகளில் நுண்ணறிவுப் பரீட்சையை எவ்வாறு பிரயோகிப்பது என்பதைக் காட்டுகிறது.
- அடைவுச் சோதனைகளை அமைத்தல், பயன்படுத்துதல், பிரயோகித்தல் என்பவற்றிற்கு உளவியல் உதவுகிறது.
- உளச்சார்பு, கண்டறி சோதனைகளை உருவாக்குதல், பிரயோகித்தல், அவை மூலம் குறிப்பான திறமைகளையும், திறமையீனங்களையும் குழந்தைகளிடம் இனங்காணல் என்பன சாத்தியமாக உளவியல் வழிசெய்கிறது.
- பாடசாலைப் பதிவுகளைக் குழந்தைகளின் சிறந்த வழிகாட்டலுக்கு எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதை உளவியல் காட்டுகிறது.
- விசேட முறைகளை மீத்திறன் பிள்ளையின் கல்விக்கான கருவியாகப் பயன்படுத்த உளவியற் கண்டுபிடிப்புக்கள் உதவுகின்றன.
- நரம்புக் கோளாற்றுப் பிள்ளைகளும் பிரச்சினைப் பிள்ளைகளும் உருவாகுவதற்குப் பொறுப்பான பல்வேறு காரணங்களை, மூளை நரம்புக் கோளாறுகளுக்கான பாடசாலைகள் கண்டுபிடிக்கப்பட்டமை எமக்கு அறிமுகப்படுத்துகிறது.
- இசைவாக்கம் பெறாத பிள்ளைகளின் நடத்தைக் கஷ்டங்கள், கடமை தவறுதல் என்பனவற்றோடு சம்பந்தமான மந்தமான அறிவு, பின்தங்கிய நிலைமைகள் முதலானவற்றை உளவியலின் உதவியோடு விளங்கிக் கொள்ள முடிகிறது.

மேற்கூறப்பட்டனவற்றால், ஆசிரியர், அவரது ஆர்வமிக்க வழிகாட்டல் கடமையைப் பொறுத்து உளவியலின் உதவியைப் புறக்கணிக்க முடியாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தனியாள் வேறுபாடு

குழந்தைக் கல்வியியலாளர்கள் ஒவ்வொரு குழந்தையும் வேறுபட்ட, முற்றிலும் தனியாள் வித்தியாசங்களுள்ள, வேறுவேறான உளச்சார்பு, விருப்பு வெறுப்பு, விசேட குணம், ஆளுமைக் கூறுகள் கொண்டவர்கள் எனச் சந்தேகத்துக்கிடமின்றி நிரூபித்துள்ளனர். குழந்தையின் ஆளுமை விருத்தி பிறப்புத் தொடக்கம் நான்கு முக்கிய விசைகளில் தங்கியுள்ளது. அவை:

1. பௌதீகச் சாதனங்களும் உடல் நிலையும்

2. அவனைச் சுற்றியுள்ள பல்வேறுபட்ட சுற்றாடல் தாக்கங்கள்

3. அவனது நுண்ணறிவுச் சாதனம்

4. விசேட குண அமைப்பு

என்பன. உளவியலின் உதவியுடன் ஆசிரியர், இந்த விசைகள் தன்னிச்சையாகச் செயற்பட முடியாது என்பதையும், ஆனால் நெருங்கிய பரஸ்பர உதவியோடேயே செயற்பட முடியும் என்பதையும் உணர வேண்டும்.

இந்த உணர்வானது, ஆசிரியரின் பால் நிச்சயமாக ஒரு வியாபகமான பிரயோகப் பயனை நிருவாக அளவிலும் கற்பித்தல் முறைகளிலும் உடையதாக்கும். தனியாள் வேறுபாட்டின் தகவல்கள், கல்வியாளரிடம் பாடசாலைக் கல்வியின் பல்வேறு வடிவிலும், வகுப்பறை அமைப்பிலும் தாக்கம் செலுத்துவதோடு நில்லாமல் அது மேலும் அவர்களை அதிக இரக்கமுடையவர்களாக ஆக்குவதோடு இளம் மாணவரை நடத்தும் முறையைப் பொறுத்தும் சிந்திக்க வைக்கும். அதன் காரணமாக இன்று பாடசாலைகளில் எல்லோரும் ஒரே மாதிரியாக ஆக்கப்பட்டவர்களில்லை என்ற நம்பிக்கை பரவலாக ஏற்பட்டுள்ளது. அங்கேயொரு புதுமையான, முன்னர் ஏற்படாத, சகிப்புத் தன்மையுடனான மனச்சார்பு, பிரகாசம், சராசரி நிலை, சாந்த நிலை என்பன மாணவரிடத்துக் காணப்படுகின்றன. எனவே, உளவியலைக் கண்டுணர்ந்தமை, நேராகவும், மறைமுகமாகவும், ஆசிரியர்களது உளச்சார்பிலும், அவர்கள் கற்பிக்கும் மாணவரைப் பொறுத்துச் செல்வாக்குச் செலுத்துகிறது. இவை கல்வியில் உளவியல் அடிப்படைக்கான தேவைகளாகும்.

## குழந்தையும் மனவெழுச்சி வாழ்க்கையும்

மாணவரின் மனவெழுச்சி, மனோபாவம் என்பன பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையில் உடன்பாடாகவோ எதிர்மறையாகவோ தாக்கம் புரிகின்றன என்பது நிச்சயமானது. இடைக்கிடை தனியாள் வேறுபாடுகள் பற்றிய ஞாபகத்தோடு குழந்தைகளின் வாழ்க்கையில் மனவெழுச்சி அம்சம் சார்பாக ஆசிரியர் கவனமாக இருத்தல் அவசியம். குழந்தையின் மனவெழுச்சி வசமான வாழ்க்கை, இப்பொழுது அவனது அறிவு சம்பந்தமான வாழ்க்கைக்கோ, பௌதீக வாழ்க்கைக்கோ மிக முக்கியமானது. துரதிஷ்டவசமாகப் பெற்றோரும் ஆசிரியர்களும் இதை அறிந்து கொள்வதில் தாமதமாகின்றனர். குழந்தையின் வளர்ச்சிக்குப் பொறுப்பான பலர் இன்னமும் இந்த உயிர்ப்பான உண்மை பற்றி அறியாமையோடு இருக்கின்றனர்.

குழந்தையின் மனவெழுச்சிபூர்வமான வாழ்க்கை, அவனது கல்வியில் குறிப்பான நவீன கல்வியாளர் குழுக்கள் சிலவற்றால் சரியாக உணரப்பட்டது. அது பற்றிய தகவல் நான்கு முக்கிய மூலங்களிலிருந்து வெளிவந்தது. முதலாவதாக அது முன்னேற்றப் பாடசாலைகளிலிருந்து கண்டறியப்பட்டது. அவர்கள் குழந்தைகளின் மனவெழுச்சிபூர்வ வாழ்க்கைக்குக் கொடுக்க வேண்டிய முக்கியத்துவம் கொடுக்கின்றனர். அத்தோடு எந்த வகையான பழைய பாடசாலை முறையிலான கொடிய தண்டனை கொடுப்பதற்கும் எதிராயிருந்தனர். இவ்வகைப் பாடசாலைத் தயாரிப்பான மாணவர் இசைவாக்கம் பெற்றவர்களாக, மகிழ்ச்சிகரமானவர்களாக, முற்றிலும் வேறாகக் கணிக்கப்படக் கூடியவர்களாக இருந்தனர். இரண்டாவதாக, சித்திரம், கைப்பணி, நாடகம், இசை முதலியன மூலம் கல்வி கற்பிக்கும் பாடசாலைகளில் இது கண்டறியப்பட்டது. இம்மாணவர்களுக்குச் சுதந்திரமாக மனவெழுச்சிகளை வெளிப்படுத்தும் குழு வாய்ப்பும் கொடுக்கப்பட்டது. இதன் காரணமாக, அந்த மாணவர்கள் மனவெழுச்சி, மன இயக்கக் கட்டுப்பாடுகளைச் சமூகச் சமநிலைத் தொடர்புகளோடு பெற்றவர்களாயிருந்தனர். மூன்றாவதாக, மாணவர்களின் தேவைகளுக்கு முதல் முக்கியத்துவம் அளித்தது. எப்பொழுதும் வழங்கும் பாடசாலைகளிலிருந்து இது கண்டறியப்பட்டது. இங்கு ஆசிரியர்-மாணவர் தொடர்பு, இந்தத் தேவைகளின் அடிப்படையில் விளங்கிக் கொள்ளப்பட்டதாக இருந்தது. பாடசாலையின் எல்லா இடங்களிலும் கஷ்டங்களுக்கும் செய்திறனுக்கும் நேராக அங்கேயொரு இரக்க சுபாவம் காணப்பட்டது. நான்காவதாக, பின்தங்கிய நிலை, இளைஞருக்குரிய கடமை தவறல், இசைவாக்கமின்மை என்பனவற்றின் களத்தில் பல்வகையான பெறுமதிமிக்க கண்டுபிடிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பதைக் காண முடிந்தது. இவ்வாறான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டுபிடிப்புக்கள் ஆழமாகவும், சக்தி வாய்ந்த செல்வாக்குடனும் பழக வைத்தது. எதிர்மறையான மனவெழுச்சி நிலைமை தீவிரமாக ஈடுபடவைத்தது. முன்னேற்றகரமான தகவல்கள், தீர்வுகள், மறு இசைவாக்கம் என்பனவற்றைக் காண முடிந்தது. குழந்தைகள், கட்டிளைஞர்கள் பற்றிய படிப்புக்கள் இது சம்பந்தமான பல்வேறு ஆய்வுகள் என்பன நுண்ணறிவுக்கும், பௌதீக, மனவெழுச்சி அம்சங்களுக்கும் வாழ்க்கைக்குமிடையிலான நெருக்கமான தொடர்புகளைக் காட்டிக் கொடுத்தன. இன்று நாம் மாணவர்களின் நோய்கள், கல்வி சம்பந்தமான தோல்வி, மகிழ்ச்சியின்மை, கஷ்டமான நடத்தை எல்லாம் மனவெழுச்சி ஏமாற்றத்தின் நேரடியான விளைவுகள் என்பதை அறிகிறோம். ஆழமான உளவியல் சார் விளக்கம் இல்லாமல் இவற்றை எல்லாம் ஆசிரியர் முன்கூட்டியே அறிய முடியாது என்பதை உணர்கிறோம்.

உளவியல் ரீதியிலான கண்டறிதலின்படி, மனவெழுச்சியின் தணிவானது நுண்ணறிவாற்றலின் முறையான செயற்பாட்டிற்கோ, குழந்தைகளுக்கோ அல்லது வளர்ந்தவர்களுக்கோ அத்தியாவசியமான ஒரு நிபந்தனையாகும். வெற்றியின் உணர்வும், பெறுபேறுகளும் நன்னிலையான ஆளுமையை உருவாக்கும். ஈடுபாடு, வெற்றி இவற்றின் அனுகூலமாக மனவெழுச்சியின் ஊக்குதலை நாம் கவனத்திற் கொண்டு நமது சக்தியைச் சிறந்த விருத்திக்குப் பயன்படுத்த வேண்டும். உற்சாகமூட்டல், புகழ்தல், தனியுதவி, கருணை, கஷ்டத்தின் போது இரக்கமான யோசனை கூறல் என்பவற்றால் மந்தபுத்தியான பிள்ளை கூட பெருமளவில் நன்மையடையலாம். தோல்வி, பயம், ஏமாற்றம், கடுமையான விமர்சனம், பழிச்சொல், தண்டனை, உடல் நலமின்மை, போட்டி என்பன சுதந்திர உணர்ச்சியையும், சுயகட்டுப்பாட்டையும் குழந்தைகளிடம் எப்போதுமே ஏற்படுத்த முடியாது. இவற்றில் மேலோங்கச் செய்யப் பிரயத்தனமெடுத்தல் வேண்டும். எனவே, எல்லா ஆசிரியரும் குழந்தைகள், வளர்ந்தவர்களுக்கான அடிப்படை மனவியல் சுகாதாரத்தில் கட்டாயமாகப் பயிற்சி பெற வேண்டும். இலவசமாக மனோவைத்திய ஆலோசனையும் பரிகாரமும், பயிற்சியோடு செய்முறை அனுபவமும் எல்லா ஆசிரியருக்கும் கிடைக்கச் செய்ய வேண்டும். இவற்றால் எல்லா ஆசிரியருக்கும் உளவியல் அறிவு மிக இன்றியமையாதது என்பதை நாம் உணர்கிறோம்.

## குழந்தைகளின் தேவைகள்

நவீன கல்வியியலாளர்கள், இளங்குழந்தைகளின் உளவியல் அறிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பந்தமாகப் பெறுமதி மிக்க பங்களிப்பினைச் செய்துள்ளனர். அவர்கள் கண்டறிந்த குழந்தைகளின் அடிப்படைத் தேவைகளிற் சில மிக முக்கியமானவை. அவை சுருக்கமாகக் கீழே தரப்படுகின்றன.

- எல்லாக் குழந்தைகளுக்கும் பாதுகாப்புத் தேவை

- அவர்கள் எல்லோருக்கும் பல்வேறு விளையாட்டுக்களிலும் சந்தர்ப்பங்கள் தேவை

- அவர்கள், அவர்களது சமூக மனவெழுச்சி, நுண்ணறிவு விருத்திக்காக மற்ற மாணவருடன் தொடர்பை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

- எல்லாக் குழந்தைகளும், அவர்களது வினாக்கள் செவிமடுக்கப்பட்டு, அவர்களது நுண்ணறிவு எல்லைக்கேற்ப விடையளிக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கிறார்கள்.

- அவர்கள், மற்றவர்கள் அவர்களது விளக்கும் ஆற்றலைப் பயன்படுத்தச் சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டுமெனக் கோருகிறார்கள்.

- அவர்கள், அவர்களது அச்சத்தை அனுதாபத்துடனும், வேண்டிய யோசனைகளுடனும் கையாள வேண்டுமென வேண்டுகின்றனர்.

- அவர்கள், அவர்களின் தன்னம்பிக்கைச் சக்தியை விருத்தியாக்க விரும்புகின்றனர். அவர்களாகவே ஆரம்பிக்கவும் சுதந்திரமாகச் செயற்படவும் அதற்காகப் பொருத்தமான சந்தர்ப்பங்களை வழங்குமாறும் கேட்கின்றனர்.

மேலே கூறப்பட்ட தேவைகளையடுத்து, அவர்களில் பலர் வேறு சில குணவியல்புகளையும் நன்றாக எடுத்துக் காட்டுகின்றனர். உதாரணமாக, எல்லாக் குழந்தைகளும் சுயகருத்து வெளிப்பாட்டுக்குச் சந்தர்ப்பங்களை வேண்டுகின்றனர். அவர்கள் உடல், உளச் செயற்பாடுகளுக்கான தேவையையும் உணர்கின்றனர். அதன் மூலம், சமூக உணர்வு, கற்பனை ஆற்றல், நுண்ணறிவு ஆர்வம் என்பனவற்றை விருத்தியாக்கிக் கொள்ளலாம். எல்லாச் சாதாரண குழந்தைகளும் கட்டியெழுப்பும் பெருவிருப்பும், பொருட்களைச் சேகரிக்கும் ஆர்வமும் உடையவர்கள். கட்டிளமைப் பருவத்தில் அதிகமானோர் துணிகரச் செயலுக்குத் தூண்டப்படுவதை உணர்கின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயல்பூக்க விருத்தி

உளவியல் பின்னணியில் ஓர் ஆசிரியர் பிள்ளைகள் சரியான தருணத்தில் தமது இயல்பூக்கத்தை விருத்தியாக்குவதற்கான சரியான ஊக்குவிப்பை வழங்கலாம். அவர்கள் நல்லவர்களாக வளர்வதற்கு எந்த வழியில் இயங்க வேண்டும் என்பதையும் காட்டி விடலாம். உதாரணமாக, பிள்ளைகள் தம்மைத் தாமே கவனிக்கும் மனோநிலையில் இல்லாத போது அவர்களது ஆர்வத்துக்கும் விருப்புக்குமேற்ப குறிப்பிட்ட இயல்பூக்கத்தை எழுப்பும் வகையில் முயற்சிக்கலாம். ஆர்வமூட்டுவதால் படைப்பூக்கத்தைத் தலையெடுக்கச் செய்யலாம். அதனால் குழந்தை செயல் மூலம் கற்கும் நிலைமைக்கு வரும். சுயசெயலுக்கான மனோபாவமும் உருவாகும். 'இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண உங்களால் முடியுமா? முடியும். எங்கே தீர்வு காணுங்கள், பார்க்கலாம். கண்டுபிடித்தீர்களானால் எனக்கும் சொல்லுங்கள்' என்பன போன்ற தூண்டுதல்களை அளிப்பதன் மூலம் குழந்தைகளின் சுயவிருத்தியை ஊக்குவிக்கலாம். தானாகச் செயற்படும் ஆர்வம் குழந்தைகளின் சுயவிருத்திக்கான மேலும் ஒரு தூண்டுதலாகும். கூட்டுறவு உணர்வும், சேர்ந்தியங்கும் ஆற்றலும் குழந்தைகளின் முன்னேற்றத்திற்கு மிகவும் பலம் வாய்ந்த விசைகளாகும். இவற்றை எல்லாம் ஓர் ஆசிரியர் உளவியல் உள்ளுணர்வுடன் இலகுவாகப் பயன்படுத்தலாம்.

குழந்தைப் பருவம் நன்றாக மனதில் பதியக்கூடிய காலமாகும். உளவியல் அடிப்படைகள் அனுசரிக்கப்படுமானால், பாலியலூக்கம், போரூக்கம், விளையாட்டூக்கம், போலச் செய்யும் ஆர்வம், இரக்க மனப்பான்மை, நுட்பமான மனவெழுச்சிகள் என்பவற்றைக் கல்விக் கருமங்களுக்கு நன்கு பயன்படுத்தலாம். குழந்தை குறிப்பிட்ட ஓர் அம்சத்தில் அக்கறை கொள்ளவில்லையானால், அதை அவர்களுடைய வளர்ப்புப் பிராணிகள், பொம்மைகள், சகோதர சகோதரிகள் என்பனவற்றோடு பொருத்துதல் மூலம் அதில் அக்கறையேற்படச் செய்யலாம். உதாரணமாக, ஒரு சிறுமி தையல் வேலையில் அக்கறை காட்டவில்லையானால், அச்சிறுமியின் பொம்மைக்குச் சட்டை தைக்க வேண்டும் என்ற தேவையை, தையல் வேலையோடு பொருத்துதல் மூலம் தையல் வேலையில் தானாக ஈடுபடச் செய்யலாம். சித்திரம், கவிதை, இசை, இலக்கியம் என்பனவற்றின் உதவியோடு பாலியலூக்கத்தைத் தூய்மையான, பயனுள்ள வகையில் விருத்தி செய்யலாம். அத்தோடு, ஒழுங்கற்ற உணர்ச்சி வேகத்தை விரட்டி, சுய ஒழுக்கமுள்ள, சிறந்த குணநலமுள்ள தனியாள் ஆளுமையை வெளிப்படுத்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவரின் போரூக்கத்தை, புத்திக்கூர்மையோடு, விளையாட்டுப் போட்டிகளை ஒழுங்கமைப்பது மூலம் இலாபகரமானதாகவும் பிரசித்தி வாய்ந்ததாகவும் விருத்தியாக்கலாம். ஆனால் இவையெல்லாம் எப்போது சாத்தியமாகும்? எப்போது ஆசிரியர் குழந்தைகளின் வளர்ச்சியில், உளவியல் அடிப்படையில் முழுமையான கவனமெடுக்கிறாரோ, அப்பொழுதே சாத்தியமாகும்.

பேராசிரியர் தொம்சன், 'நன்றாக ஒருங்கிணைந்த இயல்பூக்கத்துடன் குழந்தைப் பருவத்தில் விளையாடியதாலேயே, மனிதன், மிருகத்தை எதிர்த்துப் போராடியதில் வெற்றியீட்டினான்' எனக் கூறுகிறார். விளையாட்டுக்கம், சுய ஆற்றலோடு பயிற்சி பெறச் சந்தர்ப்பங்களை வழங்குகிறது. எப்போது மற்ற ஊக்க விசைகளெல்லாம் முழுதும் இல்லாமலாகி விட்டனவோ, அப்போது விளையாட்டுக்கம் பயன்பாடுடையதாக எழுந்து நிற்கும். நவீன கல்வியாளர்கள் இந்த உண்மையை மீண்டும் நினைவுபடுத்துகிறார்கள். இதன் காரணமாக இன்று பல கல்வி அமைப்புக்கள் விளையாட்டு முறையின் அடிப்படையில் அமைந்திருப்பதைக் காண்கிறோம்.

குழந்தைகளைப் பொறுத்து, 'போலச் செய்தல்' ஆனது மிகவும் ஆற்றலுள்ள ஒரு சுபாவமாகும். மாணவரைப் பொறுத்து, ஆசிரியர் அடிக்கடி முன்மாதிரியாக நடந்து கொள்ள வேண்டும். ஆகவே, ஆசிரியர் மாணவரோடு தொடர்பாடலில், செயற்பாடுகளில், சொற்களைப் பயன்படுத்துகையில், பேசுதலில், ஆளுமையில் மிகக் கவனமாக நடந்து கொள்ளல் வேண்டும். விசேடமாக அவர் சிறு குழந்தைகளின் கூட்டத்தில் இருக்கும் போது மிகக் கவனமாக இருத்தல் வேண்டும்.

சில உளவியலாளர்கள் பல்வேறு சக்திகளின் மூலங்களிலிருந்து அவனால் பெறப்பட்ட மனிதனின் நான்கு ஆற்றல்கள் பற்றிக் கூறுகிறார்கள்.

- பொறியியல் ஆற்றல்
- கற்பனை ஆற்றல்
- கணிக்கும் ஆற்றல்
- பேசும் ஆற்றல்

என்பன அவை.

ஆசிரியர் தமது மாணவர்களை அவர்களது வேறுபட்ட திறமைகளின்படி, பிரித்தறியக்கூடிய ஆற்றலுள்ளவராக இருத்தல் வேண்டும். மாணவர்களின் ஆற்றல்களை விளங்கிக் கொள்வதைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுத்து, சந்தேகத்திற்கிடமின்றி, ஆசிரியர்களுக்கு உளவியல் உதவ முடியும்.

ஒருவர், வெற்றிகரமான ஆசிரியராக விளங்க வேண்டுமானால், ஓர் உயிர்ப்புள்ள உளவியற் பின்னணி கொண்டவராக இருக்க வேண்டும் என்பதை மேலேயுள்ளவை தெளிவாகக் காட்டுகின்றன.

## கோட்பாடு, செயல்முறைக்கு அப்பால்

ஆசிரியருடைய நிலை ஒரு தோட்டக்காரனை ஒத்தது. தோட்டக்காரனுக்குச் செடிகளைப் பற்றிய அறிவு தேவை. தோட்டக்காரனுடைய கடமை செடிகளை மரங்களாக வளரச்செய்து மலர்களையும், பழங்களையும் விளையச் செய்தலாகும். அதுபோல ஆசிரியனுடைய நோக்கம் குழந்தைகளை ஆரோக்கியமான ஆளுமையுள்ளவர்களாக வளரச் செய்தலாகும். ஆனால் குழந்தைகள் பொதுவாக எவ்வாறான வழியில் நடந்து கொள்கிறார்கள் என்பதை அறியாமல் இதைச் செய்ய முடியாது. ஆகவே, ஆசிரியர் உளவியலறிவு இல்லாமல் இவற்றைச் செய்ய முடியாது என்பதை உணர்கிறோம்.

இப்பொழுது ஆசிரியர் ஓர் அதிகாரியாக மதிக்கப்படுவதில்லை. அவருடைய நிலை ஓர் இரக்கமுள்ள வழிகாட்டி அல்லது இயக்குநர் என்பதே. குழந்தையின் நல்ல ஆற்றலுள்ள விருத்திக்காக அனுகூலமான சூழ்நிலையை அமைத்துக் கொடுப்பது மட்டுமே ஆசிரியரின் வேலை. ஆகவே, குழந்தையின் மனம் பல்வேறு சூழ்நிலைகளில் எவ்வாறு தொழிற்படுகிறதென்பதை அவர் அறிதல் வேண்டும். அவர், குழந்தை எவ்வாறு தனது நடத்தையமைப்பைத் தனது சொந்தப் பிரதிச் செயல், அனுபவம் என்பவற்றின் ஒளியில் மேலோங்கச் செய்ய முடியும் என்பதை அறிந்திருக்க வேண்டும். இவையெல்லாவற்றிற்கும் உளவியல் அறிவு ஆசிரியருக்கு அவசியமாகும்.

உளவியலின் உதவியோடு ஒரு குறிப்பிட்ட கற்பித்தல் முறையின் திறமையையும் பொருத்தப்பாட்டையும் விளங்கிக் கொள்ளலாம். இதற்கான காரணம், உளவியல், குழந்தையின் மனத்தின் செயற்பாட்டோடு தொடர்புடையதாயிருப்பதேயாகும். ஒரு குறிப்பிட்ட கற்பித்தல் முறை சில குறிப்பிட்ட நிபந்தனையின்படி செயற்பட வலியுறுத்துவதோடு, விரும்பாத விளைவுகளையும் உண்டு பண்ணலாம். ஓர் ஆசிரியர், உளவியல் அறிவோடு ஆயத்தமாயிருப்பாரானால், தீய விளைவுகளைத் தவிர்த்துக் கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைத்திட்ட அமைப்பு மனித மனத்தின் செயற்பாட்டோடு ஒத்துப்போக வேண்டும். பல்வேறு வயதுகளுக்கேற்ற தேவைகளையும் திறமைகளையும் தெரிந்து கொள்ளாவிட்டால், வெவ்வேறு வயதுகளுக்குரிய பாடங்களைத் தீர்மானிக்க முடியாது. ஒவ்வொரு வளர்ச்சிப் படியும் அவற்றிற்கேயுரிய பிரச்சினைகளையும் குணவியல்புகளையும் கொண்டுள்ளதோடு, விசேட கவனத்தையும் வேண்டி நிற்கின்றன. கலைத்திட்ட உருவாக்கத்திற்குப் பொறுப்பேற்பவர்கள், தெரிந்திருக்க வேண்டிய பிரச்சினைகள், குணவியல்புகள், அவை பற்றிய அறிவு என்பன உளவியல் கற்பதால் மட்டுமே பெறக் கூடியனவாகும்.

எனவே, கல்வியில் உளவியல் அடிப்படையின் தேவை கோட்பாடுகளுக்கும் செயல்முறைக்கும் அப்பாற்பட்டது என்பதை இவற்றாற் காண்கிறோம்.

### தீமையா, நன்மையா?

அக்காலத்தில் அதிக ஆசிரியர்கள் தமது தொழிலின் திறமையைப் பொறுத்து, உளவியலறிவு அவசியமில்லையென்ற அபிப்பிராயம் கொண்டிருந்தனர். இன்றும் கூடச் சில தத்துவவியலாளர் கல்விக்கு உளவியல் தீமையானது என நினைக்கின்றனர். அனேகமாக, இந்தத் தவறான எண்ணம் ஒருவரின் உளச்சார்பின்படி ஏற்பட்ட ஒரு செயற்கையான எண்ணமாகும். 'உளவியலாளர் உளவியலாளராகவே நடத்தை பற்றிக் கற்கிறாரன்றி, செல்வாக்கைப் பெறுவதற்காகவோ, தன்னை உயர்த்திக் கொள்வதற்காகவோ அல்ல. அவருடைய வேலை, நடத்தையின் ஒழுக்கப் பெறுமதியை மதிப்பிடுவதல்ல. அத்தோடு அது அவருக்கு மிகவும் கண்டனத்துடனானதாயிருந்தாலும், அது அதி சிரத்தையானதும் முக்கியமானதும், உன்னதமானதுமான அம்சமாகும்'. அடுத்த அம்சம், ஆசிரியர் ஓர் இலட்சியவாதியும் படைப்பாற்றற் கலைஞருமாவார் என்பதுமாகும். அவர் பிள்ளையைப் பிள்ளையாக மட்டும் நோக்கவில்லை. அவனது செயலாற்றல், இயல்பான ஆர்வம், நிலையான சக்தி என்பவற்றோடு நோக்குகிறார். ஆகவே அவருடைய வேலையானது, பிள்ளையை முழு மனிதனாக்குவதற்குரிய, வெளிக்காணப்படாத, நிலையான உண்மைகளால் வழிநடத்தப்படுவதாகும். ஆயினும், 'ஆசிரியர் பிள்ளைகளுக்கு உள்ளுணர்வின் மூலவளத்தைக் கொடுப்பதோடு மட்டுமே நின்றுவிடும் உளவியல் அடிப்படை அறிவு கொண்டவர்' எனச் சிலர் கண்டனமும் செய்கின்றனர்.

உண்மையாக தத்துவமானது, ஆசிரியர் என்ன செய்ய வேண்டும் எனக் கூறுகிறது. கல்வியை ஒரு பிரயோக உளவியலாக எடுத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ள முடியும். பாடசாலையை உளவியல் ஆய்வு கூடமாகவும் கொள்ள முடியாது. ஆனால் இவையனைத்தாலும் உளவியலறிவு ஆசிரியருக்கு இடைஞ்சலாக அமையும் என்று பொருள்படாது. உண்மையாக, அது உதவியே செய்யும். ஆசிரியர் மிகக் கூடிய வகையில் மனித விருத்தியைக் குழந்தையிடம் உருவாக்க முயற்சியெடுக்க முடியும். அவர் இலட்சியவாதத்தில் ஊறியிருக்க வேண்டும். அவர் குழந்தையுள் கவரப்பட்டு, திரவியத்தைத் தானாகவே கண்டறியும்படி உதவ வேண்டும். ஆனால் எல்லாக் கடமைகளையும் ஆற்றும் போது ஆசிரியர் அடக்கியாள முற்பட்டாரானால், அதன் விளைவு மிகக் குறைந்த பெறுபேற்றையே தரும். மனித மனத்துட் செயற்படும் போது, ஆழ்ந்த உள்ளுணர்வு பெற்றிருந்தால் மட்டுமே விரும்பிய திசைநோக்கிக் குழந்தையை இட்டுச் செல்ல முடியும். கற்பித்தலின் வெற்றி, ஒருவரின் வள நிறைவிலும் கூடத் தங்கியுள்ளது. உளவியல் அறிவு மாத்திரம் தனியாக எதுவும் செய்யாது. ஆனால் அதன் அறிவு பாமரமக்களின் திசையிலுள்ள அசட்டுத்தனமான தவறுகளில் சிக்கிக் கொள்ளாமல் காப்பாற்றும்.

ஒரு பகுப்பாய்வு சம்பந்தமான உளச்சார்பு ஆசிரியரின் செயற்கையான மனப்பாங்கை முக்கியமாக அழித்து விடாது. விஞ்ஞானம் கலைக்கு எப்பொழுதுமே தீமையானதெனச் சிந்திக்கப்படக் கூடாது. ஒரு கலைஞனுக்கு விஞ்ஞான உணர்வு இருக்குமானால், அவன் தனது வேலையை நிரந்தரமான பெறுமதி வாய்ந்ததாகச் செய்து முடிக்கலாம். ஆசிரியன் ஒரு கலைஞன், மனிதமனம் பல்வேறு சூழ்நிலைகளில் எவ்வாறு செயற்படுகிறதென அறிந்து கொள்வானானால், அவனால் குழந்தையை மனித விருத்தியின் உச்ச நிலைக்கு இட்டுச் செல்ல முடியும். இது சம்பந்தமாக உன்னத இலட்சியவாதிகளான பெஸ்டலோசி, ஹேபர்ட் ஆகியோரை நாம் கருத்திலெடுக்கலாம். அவர்கள் உளவியற் கல்விக்கு மேலான பங்களிப்புச் செய்தவர்களாவர். உன்னதமான இலட்சியவாதிகள் என்ற ரீதியில் உளவியல் அடிப்படையிலான கல்வி குழந்தைகளின் விருத்தியை எப்பொழுதாவது நாசமாக்குமென அவர்கள் எண்ணிப் பார்த்ததேயில்லை.

ஓர் ஓவியன் அழகான ஓவியமொன்றை உருவாக்க வேண்டுமானால், அவன் அதற்கான தனது சாதனங்களை அறிந்திருக்க வேண்டும். ஒரு தச்சனும் அப்படியானவனே. அதுபோல ஆசிரியனும் ஒரு கலைஞனே. அவன் பாடத்தை மாத்திரம் அறிந்திருந்தாற் போதாது. அவன் குழந்தைகளின் இயல்புகளையும் அறிந்திருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைகளுக்கு அறிவை வழங்குவதற்குத் தேவையான நுட்பங்களையும் அறிய வேண்டும். ஜோன் அடம்ஸ் என்பவர் மிகப் பொருத்தமாக இதைக் குறிப்பிடுகிறார். கற்பித்தல் என்ற பதம் இரண்டு செயற்படுபொருளைக் கொண்டது. ஒன்று ஆள். மற்றது பொருள். ஆசிரியர் யோகனுக்கு மொழி கற்பிக்க வேண்டுமானால், அவர் மொழியை விட யோகனை நன்றாக அறிந்திருக்க வேண்டும்.

இது உண்மை. கல்வியின் நோக்கத்தைத் தீர்மானிப்பதற்கு, தருமத்தையும் தத்துவத்தையும் வழிகாட்டுவதற்கு நாம் நம்ப வேண்டும். ஆனால், குறிப்பிட்ட நோக்கம் எப்பொழுதுமே நடைமுறைச் சாத்தியமாக இருக்க வேண்டும் என உளவியலால் நமக்குச் சொல்ல முடியும். உளவியலின் உதவியுடன் ஒரு குறிப்பிட்ட நோக்கத்தின் வெற்றியின் அளவை நம்மாலும் சொல்ல முடியும். குழந்தைகளின் வளர்ச்சியை அளப்பதற்கு பல்வேறு உளவியல் முறைகளிலிருந்து பெறப்பட்ட திட்டமிடப்பட்ட தகவலாக அது இருக்கும்.

அநேகமான பரிசோதனைகளினூடாக உளவியல் பல கற்பித்தல் நுட்பங்களையும் முறைகளையும் திட்டமிட்டுள்ளது. அக்கறையை ஏற்படுத்தல், தயார் நிலையை ஊக்குவித்தல் என்பனவற்றில் ஆசிரியருக்கு எப்போதுமே பிரச்சினைதான். இந்தப் பிரச்சினை தீர்ப்புக்கான தகவல்களின் படி, ஆசிரியருக்கு உளவியல் மிகப் பெரிய பெறுமதி வாய்ந்ததாக இருக்கிறது.

கல்வியென்பது போதனை மட்டுமல்ல; உண்மையில் போதனையென்பது கல்வியின் இறுதிவரை முன்னேறச் செய்கின்ற ஓர் உபாயம் அல்லது கருவியாகும். கல்வியென்பது, எல்லா உடல், உள, ஒழுக்க, ஆன்மீகச் சக்திகளையும் விருத்தியாக்குவதற்கே இருக்கிறது. கல்வி என்பது, மனிதனின் பிறப்பு முதல், இறப்பு வரை செல்வாக்குச் செலுத்தும் எல்லா அம்சங்களையும் சிந்தனைக்கு எடுக்கிறது. அவ்வாறான கல்வியின் விசாலித்த பார்வையை நாம் எடுத்துக் கொள்வோமானால், மனித ஆளுமையின் வளர்ச்சியை ஆட்சி செய்யும் விதிகளை ஆசிரியர் அறிந்திருக்க வேண்டும் என்பதை உணர்வோம்.

இந்த நாட்களில் குழந்தைகளின் பிரச்சினைகள் பற்றிக் கற்பதற்காக எல்லா விருத்தியடைந்த நாடுகளிலும், மருத்துவ ஆலோசனை வகுப்புக்கள் ஏற்படுத்தப்படுகின்றன. மனநோய் நிபுணர்கள், உளவியலாளர்கள், மருத்துவர்கள், சமூகப் பணியாளர்கள், இந்த வகுப்புக்களில் பணிபுரிந்து, எல்லாப் பாரம்பரிய சூழ்நிலைக் காரணிகளையும், பௌதீக, நடைமுறை, மனவெழுச்சி,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசைவாக்கமின்மை ஆகியனவற்றின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்கின்றனர். உளவியலின் உதவியோடு கூடிய ஏனைய விஞ்ஞானங்களின் அளவற்ற கல்வி, இந்தப் பகுப்பாய்வுகளுக்கெல்லாம் கிடைக்கிறது. ஆகவே உளவியலின் உதவியை குழந்தைகளின் கல்வியில் புறக்கணிக்க முடியாது.

உளவியலானது கல்விச் செயற்பாட்டில் ஒரு புரட்சியைக் கொணர்ந்துள்ளது. அது எண், எழுத்து, வாசிப்பு (Three Rs), கற்பித்தல் நுட்பத்தில் முன்னேற்றத்தைக் கொடுத்திருக்கிறது. உளவியல் எல்லாக் கற்பித்தல் முறைகளிலும் புரட்சிகர மாற்றத்தைச் செய்துள்ளது. அத்தோடு, புதிய ஆலோசனைகளையும், பிரேரணைகளையும் தந்துள்ளது. ஆகவே ஆசிரியரைப் பொறுத்து பிரயத்தனமும், நேரமும், பேச்சும் குறைந்துள்ளன. இந்த முன்னேற்றம் எல்லோராலும் உணரப்படுகிறது. ஆசிரியர் உளவியலறிவில்லாமல் தமது வேலையைச் சரிவரச் செய்ய முடியாது என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

இதுவரை நோக்கியவை யாவற்றிலுமிருந்து நாம் ஒரு முடிவுக்கு வரலாம். உளவியல், கல்வித் தத்துவவியலாளரால் பயன்படுத்தப்படுகிறது. ஏனெனில், அது அவர்களை யதார்த்த உலகுக்கு அறிமுகப்படுத்துகிறது. ஆனால், அவர்கள் தமது கோட்பாட்டு மனோநிலையில் மனித வரையறையை மறந்து விட முடியாது. கலைத்திட்டம் வரைபவர்கள் உளவியல் அறிந்திருக்க வேண்டும். ஏனென்றால், மனித மனம் எவ்வாறு செயற்படுகின்றதென அவர்கள் அறிந்திருக்க வேண்டும். வகுப்பறையில் உளவியல் இல்லாமல் ஆசிரியர் செயற்பட முடியாது. ஏனென்றால், அவர் குழந்தைகளின் செயற்பாடுகளை ஒழுங்கமைத்து வழிநடத்த வேண்டியிருக்கிறது. விதிகளையும், கற்பித்தல் முறைகளையும் முறைப்படுத்தும் போது அவற்றால் குழந்தையின் மனத்தில் ஏற்படும் விளைவையும் நாம் அறிதல் வேண்டும். இது உளவியலால் மாத்திரமே சாத்தியமாகும். ஆகவே, கல்வித் தத்துவவியலாளர், கல்வியியலாளர், ஆசிரியர்கள் ஆகியோர் குழந்தைகளின் வழிகளையும், செயற்பாடுகளையும் தெரிந்திருக்க வேண்டும். பல்வேறு செயற்பாடுகளை, அவர்களைத் தூண்டக்கூடிய உந்துசக்திகளை அவர்கள் அறிந்திருக்க வேண்டும். இவை எல்லாவற்றிற்கும் வழிகாட்டுவதற்காக அவர்கள் உளவியலை நம்பகமாக நோக்க வேண்டும்.

இதுவரை கல்வியில் உளவியல் பற்றிச் சிந்தித்தவற்றைச் சுருக்கமாக நோக்குவோம். முற்காலத்தில் கல்வியில் உளவியல் புறக்கணிக்கப்பட்டிருந்தது. ஆசிரியர்கள் தனியாள் வேறுபாட்டுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்பாட்டை அங்கீகரிக்கவில்லை. இசைவாக்கமின்மை அபூர்வமாகக் கணிப்புக்கு எடுக்கப்பட்டது. ஆனால் சமீபகால ஆய்வாளர் தீவிரமாக பழைய இலட்சியத்தைப் புதுமைப்படுத்தி, தத்துவ அடிப்படைகளையும் புதுமையாக இயங்க வைத்தனர். ஒவ்வொரு குழந்தையும் முற்றிலும் வேறுபட்டவர்கள். ஆசிரியரால் சகிப்புத் தன்மை காட்டப்பட வேண்டியவர்கள். ஆசிரியரால் அடிப்படை ஆற்றலுக்கும் அவர்களின் இயல்புகளுக்குமேற்ப வகுக்கப்பட வேண்டியவர்கள். ஆசிரியர்கள் இலட்சியவாதிகளாயிருத்தல் வேண்டும். ஆனால் மனித வரையறைகளை அவமதிக்கக் கூடாது. குழந்தைகள் சிந்தனையில் படைப்பாற்றல் உள்ளவர்களாக்கப்படல் வேண்டும். ஆசிரியர் ஒரு வழிகாட்டியன்றி இறுக்கமான ஒழுக்கக் கட்டுப்பாட்டாளரல்லர். ஆரோக்கியமான மனவெழுச்சி வாழ்க்கை உயிர்ப்புள்ள உள ஆரோக்கியத்துக்கு வழிகாட்டியாகும்.

தத்துவம் கல்வி நோக்கத்தைத் தீர்மானிக்கிறது. ஆனால் உளவியல் குறிப்பிட்ட நோக்கத்தின் நடைமுறைச் சாத்தியத்தைத் தீர்மானிக்கிறது. உளவியல் நமது கல்விச் செயற்பாட்டைப் புரட்சிகரமாக்கியிருக்கிறது. எனவே உளவியலடிப்படை தேவையானதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10

## கல்வியில் முன்பிள்ளைப் பருவம்

'கல்விக்காகக் குழந்தையா? குழந்தைக்காகக் கல்வியா?' இந்த வினாவுக்கு இன்று நீங்கள் என்ன விடை பகர்வீர்கள்? 'குழந்தைக்காகத்தான் கல்வி' என்பதே உங்கள் விடையாக இருக்கும். இந்த விடைக்கான காரணம் கல்வி எண்ணக்கருவில் இன்று ஏற்பட்டிருக்கும் மாற்றமே ஆகும். பண்டைக்காலத்தில் இந்த நிலை இல்லை. குழைந்தையின் மனம் வெற்றுக் கொள்கலனாகவும், அறிவால் அதை நிரப்புபவர் ஆசிரியராகவும் கருதப்பட்டார். ஆகவே கல்வியில் முக்கியத்துவம் பாடப் பொருளுக்கும் போதனையாளர்க்கும் கொடுக்கப்பட்டது. இந்த நிலை மாறி இன்று கல்வியில் குழந்தைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த மாற்றத்துக்கான காரணம் கல்வியியலாளர்களதும் உளவியலாளரதும் ஆய்வுகளேயாகும்.

முன்பிள்ளைப் பருவம் என்பது பிள்ளைப் பருவத்துக்கு முன்புள்ள பருவமாகும். அதனைக் குழந்தைப் பருவம் என்பர். பிறப்பு முதல் பிள்ளை பாடசாலைக்குச் செல்லும் வரையுள்ள பருவம் இதுவாகும். இதனை,

1. மூன்று வரையுள்ள முற்பகுதி

2. மூன்று வயது தொடக்கம் ஐந்து வயது வரையுள்ள பின்பகுதி

என இரண்டாக வகுக்கலாம்.

இங்கு நாம் முன்பிள்ளைப் பருவம் எனக் கருதுவது குழந்தைப் பருவத்தின் பிற்பகுதியாகும். இப்பருவத்துக் கல்வி பற்றி யாரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்தில் கொள்ளாத நிலை சமீபகாலம் வரை இருந்தது. இந்த நிலை இன்று மாறிவிட்டது. அதனாலேயே முன்பிள்ளைப் பருவம் பற்றிச் சிந்திக்கத் தலைப்பட்டுள்ளோம்.

குழந்தையின் கல்வியெனும் போது, பாடசாலை சென்று கற்கும் கல்வியை மாத்திரம் அது குறிக்காது. குழந்தை தாயின் கருவில் இருக்கும் காலம் தொடக்கம் வாழ்க்கை முழுக்க நீடித்த கல்வியையே அது குறிக்கிறது. பிரகலாதன் தாயின் வயிற்றில் இருக்கும் போதே அறக் கருத்துக்களைக் கற்றான் என்ற புராணக் கருத்து இன்றைய கல்வியாளர்களின் ஆய்வின் பயனாக மெய்ப்பிக்கப்பட்டுள்ளது. முதல் இரண்டு அல்லது மூன்று வருடங்களில் கற்றுக் கொள்வது, அடுத்து வரும் வாழ்க்கைக் காலம் முழுக்கக் கற்பதிலும் பார்க்க அதிகமானது எனக் கல்வி ஆய்வாளர்களால் கூறப்படுகிறது. எனவே, கல்வியில் முன்பிள்ளைப் பருவம் பற்றி நாம் இன்னும் சிந்திக்காமல் இருக்க முடியாது; அது பற்றிச் சிந்தித்தே ஆக வேண்டிய அவசியத்தை இன்று உணர்கிறோம்.

## பின்னணி

ஒவ்வொரு நாடும் அதன் சூழல், காலகட்டம், தேவை என்பவற்றைப் பொறுத்து தனது முன்னுரிமைகளைத் தீர்மானிக்கிறது. ஒரு காலகட்டத்தில் தொழிற்கல்வி முன்னுரிமை பெறலாம். மற்றொரு காலகட்டத்தில் விழுமியக் கல்விக்கு முன்னுரிமை தேவைப்படலாம். இன்று கல்வியின் முழு அம்சமுமே மறுசீரமைக்கப்பட்ட நிலையில், இத்தகைய மறுசீரமைப்பு குழந்தைகளை அடிப்படையாக வைத்தே மேற்கொள்ளப்பட வேண்டியதாகவுள்ளது. எனவே, எமது இன்றைய முன்னுரிமை முன்பிள்ளைப் பருவக் கல்விக்கே சென்றடைய வேண்டியுள்ளது. எதிர்கால நன்மைக்காகச் செய்யப்பட வேண்டிய முதலீடு அவர்களைப் பொறுத்தே செய்யப்பட வேண்டிய தேவையை உணர்த்துகிறது. ஒரு நாட்டின் அபிவிருத்தியானது அதன் மனிதவள விருத்தியுடன் நெருங்கிய தொடர்புடையது. இதனை உலக நாடுகள் யாவும் உணர்கின்றன. இரண்டாம் உலக யுத்தத்தின் போது வெகுவாகப் பாதிக்கப்பட்ட ஐரோப்பிய நாடுகள் சிலவும், ஜப்பானும் குறுகிய காலத்தில், உலகின் ஆதிக்கமுள்ள, ஆற்றல் மிக்க பொருளாதார சக்திகளாக உருவாக முடிந்தமை எவ்வாறு சாத்தியமாயிற்று? இந்நாடுகளால் அடையப்பட வேண்டிய முன்னேற்றத்திற்குப் பங்களிப்புச் செய்தது அந்நாடுகளின் மனித வளத்தின் பலம், தரம் என்பவற்றுடன் மனித மூலதனத்தில் செய்யப்பட்ட முதலீடுமாகும். ஐக்கிய அமெரிக்க நாடுகள் போன்ற நாடொன்றில் பெரும்பாலான கைத்தொழில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னேற்றங்கள் மூலதன முதலீட்டின்றி மனிதவலு மேம்பாட்டினால் ஏற்பட்டது என்பதை நாம் கவனித்தல் வேண்டும். எனவே, ஒரு நாடு மனித மூலதனத்தில் முதலீடு செய்யாமல் முன்னேற்றமடைய முடியாதென்பது அடிக்கடி பிரஸ்தாபிக்கப்படும் விடயமாகவுள்ளது.

ஒரு நாட்டின் எதிர்காலச் சிறப்பு, அந்த நாட்டின் குழந்தைகளினது விருத்திக்காகச் செய்யப்படும் முதலீட்டில் தங்கியுள்ளது. குழந்தைகளே நாட்டின் எதிர்கால உயர்வை நிர்ணயிப்பவர்கள். மனிதவள விருத்தியின் மிக முக்கியமான கட்டம் குழந்தைப் பருவத்திலேயே ஆரம்பிக்கிறது. குழந்தைப் பருவத்திற் செய்ய வேண்டிய முதலீடும் முயற்சிகளும் மிகமிக முக்கியமானவை. இதை நம் முன்னோரும் நன்றாக அறிந்திருந்தனரென்பதை நம்மிடையே நிலவும் பழமொழிகள் சிலவற்றால் அறிகிறோம். 'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?', 'பருவத்தில் பயிர் செய்' என்பன அவற்றுட் சிலவாகும். இவற்றில் குழந்தைக் கல்வி பற்றிய உளவியற் கருத்துக்கள் இல்லாமலில்லை. இவற்றால் குழந்தைப் பருவத்துள் எடுக்கப்பட வேண்டிய கல்விக்கான நடவடிக்கைகளை நம் முன்னோரும் அறிந்திருந்தனர் என்பதை உணரலாம். எனவேதான் ஐந்து வயதிற்குள் குழந்தையிடம் ஏற்படுத்த வேண்டிய பழக்கங்களும் நடத்தைகளும் முக்கியமானவையாகக் கருதப்பட்டன. இளம் வயதில் உருவாக்கப்படாத நடத்தைகளைப் பின்னர் உருவாக்குவது சிரமமானதாகும். இதனால் இன்றைய நவீன கல்விச் சிந்தனையில் முன்பிள்ளைப் பருவக் கல்வி முன்பென்றும் பெறாத முக்கியத்துவத்தைப் பெற்றுள்ளது.

## முன்பிள்ளைப் பருவமும் விருத்தியும்

குழந்தை கருவிலிருக்கும் போதே கற்கத் தொடங்கி விடுகிறது. ஆயினும் குழந்தை பிறந்த பின்பே அதனைத் தெளிவாக உணர முடிகிறது. இதனை மேலும் விளங்கிக் கொள்ள முன்பிள்ளைப் பருவத்தினரின் உடலியக்க வளர்ச்சி, சமூக - மனவெழுச்சி வளர்ச்சி, உளவளர்ச்சி, மொழிவளர்ச்சி என்பன பற்றிச் சுருக்கமாகவாவது அறிதல் வேண்டும்.

பிறக்கும் போதே குழந்தைகளிடம் உடல் வளர்ச்சி, உள வளர்ச்சி ஆகியனவற்றில் தனியாள் வேறுபாடுகள் காணப்படுகின்றன. இவை அனேகமாகப் பாரம்பரியக் காரணிகளால் கட்டுப்படுத்தப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடலியக்கம்

குழந்தை பிறந்த ஒரு மாதம் வரையான காலத்தில் குறித்த சில தூண்டல்களினால் உடல் முழுவதையும் அசைக்கின்றது. பின்னர், குறித்த செயலுக்குரிய உறுப்பை மாத்திரம் அசைத்து உபயோகிக்கின்றது. ஒரு பொருளைப் பிடிக்க முயலும் போது முதலில் தன் உடல் முழுவதையுமே அசைத்த குழந்தை, பின்னர் சிறிது சிறிதாகத் தேவையற்ற அசைவுகளைக் குறைத்துக் கொண்டு, கைகளை மாத்திரம் உபயோகிக்கப் பழகிக் கொள்கிறது. ஒரு வருடத்துக்குள் குழந்தையின் உடல் அசைவுகளில் அதிக வளர்ச்சி ஏற்படுகின்றது. மூன்றாம் நான்காம் மாதத்தில் தலையை நிமிர்த்துகின்றது. ஆறாம், ஏழாம் மாதத்தில் நிமிர்ந்து அமர்கிறது. பத்தாவது மாதமளவில் எதனையும் பிடித்து எழுந்து நிற்கப் பழகுகிறது. பன்னிரண்டாம் மாதமளவில் பிறர் உதவியுடன் அடியெடுத்து வைத்து நடக்க ஆரம்பிக்கிறது. இவ்வாறு முன்னேறி மூன்று வயதளவில் ஓரளவுக்குத் துள்ளிப் பாயவும், நான்கு வயதளவில் பந்தை எறிந்து விளையாடவும் பழகிவிடுகின்றது.

## சமூக மனவெழுச்சி

ஆரம்பத்தில் தனது பசி, தாகம், கழிவகற்றல் போன்ற உடலியக்கத் தேவைகளையே முக்கியமாகக் குழந்தை கருதுகிறது. இத்தேவைகள் சரியாகப் பூர்த்தியாகா விட்டால் குழந்தை மனவெழுச்சிப் பிறழ்வுகளையும், பிற்காலத்தில் நெறிப்பிறழ்வுகளையும் பெற்று விடுமென்று உளப்பகுப்பாய்வாளர் கருதுகின்றனர். முதலில் பொதுவானதாகவிருக்கும் குழந்தையின் மனவெழுச்சி பின்னர் பயம், கோபம், அன்பு ஆகிய மூலாதார மனவெழுச்சிகளாகப் பிரிகின்றது. சுமார் ஒன்றரை வயது தொடக்கம் இரண்டரை வயது வரை குழந்தை பிடிவாத குணம் காட்டுகிறது. மேலும் இப்பருவத்தில் குடும்பத்தில் இளைய குழந்தை பிறந்து, பெற்றோர் அதனிடம் கூடிய அன்பு காட்டும் போது மூத்த குழந்தை மனமுறிவு பெற்றுப் பிறழ்வான நடத்தைகளில் ஈடுபட வாய்ப்பிருக்கிறது.

இப்பருவத்தில் குழந்தையிடம் படைப்பூக்கம், ஆராய்வூக்கம் ஆகியன அதிகம் காணப்படும். இக்காரணத்தால் குழந்தை பலவகையான வினாக்களையும் கேட்கும்; குழந்தை தனது மொழி வளர்ச்சியாலும், புலன்களின் வளர்ச்சியாலும் தன்னைப் பற்றிய அறிவை வளர்த்துக் கொள்கிறது. குழந்தையின் ஆளுமை வளர்ச்சிக்கு அதன் சமூகத் தொடர்புகளும் நல்ல முறையில் வளர்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உளம்

குழந்தை, வளர்ச்சியின் ஆரம்பத்தில், சூழலைப் புலன்களால் அறிகின்றது. சூழலில் பல பொருட்களின் தொடர்புகளையும் அறிகிறது. இதனால் சூழல் பற்றிய புலன்காட்சி அமைகிறது. இக்காலத்தில் குழந்தை முயன்று தவறுதல் மூலம் பலவற்றையும் கற்கப் பழகிக் கொள்கிறது. ஒரு வயது தொடக்கம் நுண்மதியின் வளர்ச்சி மொழியின் வளர்ச்சித் துணையுடன் மேலோங்குகிறது. வயது வளரும் நிலையில், கட்டைகளைக் கொண்டு சிக்கலான அமைப்புக்களையும் கட்டியெழுப்பும் ஆற்றல் பெறுகிறது. மேலும் காலம் பற்றிய அறிவையும் பெறுகின்றது. நேற்று, இன்று, நாளை, பின்னர், முன்னர் என்ற எண்ணக்கருக்களையும் பெறுகின்றது.

## மொழி

குழந்தையின் மொழிவளர்ச்சி அதன் முதிர்ச்சியிலும் கற்றலிலும் தங்கியுள்ளது. முதலிரண்டு மாதங்களிலும் குழந்தை பல்வேறு ஒலிகளையும் எழுப்புகின்றது. நான்கு மாதமளவில் பெரியோரின் பேச்சைச் செவிமடுத்துக் கேட்கிறது. மகிழ்ச்சியைக் குரலால் தெரிவிக்கிறது. பின்னர் தனக்குப் பழக்கமான சொற்களைக் கேட்க கவனத்தைத் திருப்புகிறது. இதன் பின்னர் மழலைச் சொற்களைப் பேசத் தொடங்குகிறது. ஒன்றரை வயதின் பின்னர் மொழிவளர்ச்சி மிக விரைவாக நிகழ்கிறது. ஏறக்குறைய இரண்டு வயதுக்கும் நான்கு வயதுக்கும் இடையில் மொழி வளர்ச்சியின் வேகம் அதிகரிப்பதன் காரணமாகக் குழந்தையின் சொற்களஞ்சியம் அதிகரிக்கின்றது.

குழந்தைகளிடத்தில் மொழியும் சிந்தனையும் எவ்வாறு வளர்ச்சி அடைகின்றன என்பது பற்றிய பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பேராசிரியர் 'ஒஸ்ரூட்' என்பவர் பிள்ளைகள் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் எழுப்பும் ஒலிகள் பற்றி ஆய்வுகள் செய்துள்ளார். அதன் மூலம் அவ்வொலிகளுக்கும் மொழி வளர்ச்சிக்குமிடையே நெருங்கிய தொடர்பிருப்பதை எடுத்துக் காட்டியுள்ளார்.

குழந்தையின் மொழிவிருத்தியில் வீட்டுச் சூழல் பெரும்பங்கு வகிக்கிறது. வீட்டு அங்கத்தவரோடு ஏற்படும் நெருக்கமான தொடர்பு காரணமாகப் பெரும் சொற்களஞ்சியத்தைக் குழந்தை பெற்றுக் கொள்கிறது. குழந்தைகளின் மொழிவளர்ச்சி பற்றிப் பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 'மெடோனா', 'ஸ்மித்' என்போர் முதல் ஐந்து வருடங்களில் ஏற்படும் சொற்களஞ்சிய விருத்தி பற்றிச் செய்த ஆய்வுகளின் பயனாகப் பின்வரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விபரங்களைத் தந்துள்ளனர்.

| வயது | தெரிந்திருக்கும் சொற்கள் |
|---|---|
| 1 வருடம் | 03 |
| 1 1/2 வருடம் | 22 |
| 2 வருடம் | 272 |
| 2 1/2 வருடம் | 446 |
| 3 வருடம் | 896 |
| 3 1/2 வருடம் | 1222 |
| 4 வருடம் | 1540 |
| 4 1/2 வருடம் | 1870 |
| 5 வருடம் | 2072 |

குழந்தையின் மொழி வளர்ச்சியைப் பல காரணிகள் பாதிக்கின்றன. இதில் நுண்மதியே கூடிய பங்கு கொள்கிறது. நுண்மதி குறைந்த குழந்தைகள் மந்தமாகவே மொழியைக் கற்கின்றனர். மேலும் மொழி வளர்ச்சி சமூகத் தொடர்புகளிலும் தங்கியுள்ளது. குடும்பத்தில் அதிக அங்கத்தவர் இருப்பார்களானால் குழந்தையின் மொழி வளர்ச்சி விரைவில் ஏற்படும். குடும்பச் சூழல், பண்பாடு என்பனவும் குழந்தையின் மொழி வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்துகின்றன. எனவே, முன்மாதிரிகளும் பல்வேறு புலன்களுக்கான சாதனங்களும் முன்பள்ளிக் குழந்தைகளுக்கான மொழி வளர்ச்சிக்குப் பயன்படுத்தப்படல் வேண்டும்.

## முன்பிள்ளைப் பருவமும் கல்வியும்

தாயின் வயிற்றில் இருக்கும் போதே குழந்தைகள் கற்க ஆரம்பித்து விடுகின்றனர் என்ற கருத்தை அறிவோம். குழந்தை பிறந்ததிலிருந்தே அதனை நாம் வெளிப்படையாகக் காண முடிகிறது. குழந்தையின் மூளை பிறப்புக்கு முன்னரே விருத்தியடையத் தொடங்கி விடுகிறது. தாயின் உடல் நலம், சூழல் என்பனவும் இந்த வளர்ச்சியில் தாக்கம் புரிகின்றன. எனவேதான் குழந்தை கருவிலிருக்கும் போதே அதன் வளர்ச்சியில் கவனம் செலுத்தப்பட வேண்டுமெனக் கூறப்படுகிறது. நமது நாட்டைப் பொறுத்து முறைசார் கல்வி ஆரம்பிக்கப்படும் வயது ஐந்து வயது பூர்த்தியாகி ஆறாம் வயது ஆரம்பிக்கும் காலமாகும். எனவே, இக்காலத்திற்கு முந்திய பருவத்துக் கல்வியையே இங்கு நாம் முன்பிள்ளைப் பருவக் கல்வியெனக் கருதுகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறு வயதிற்கு முந்திய கற்றல் அனுபவக்காலம் குழந்தை விருத்தியின் உருவாக்கற் காலம் (Fomative Years) எனப்படும். இப்பருவத்தில் இடம்பெறும் கற்றல் வெற்றிகரமாக அமையும் போது, பாடசாலையின் உயர்மட்ட அடைவுக்கு அது ஒரு முன் அறிகுறியாகக் காணப்படும். 'முதல் ஐந்து வருட காலத்தில் மூளையில் ஏற்படும் வளர்ச்சியானது ஏனைய வாழ்க்கைக் காலத்தில் ஏற்படும் முழுவளர்ச்சிக்கும் சமமானதல்ல. அது அதைவிடக் கூடுதலானது. முதல் மூன்று வருடத்தில் குழந்தை அடிப்படையான மனித நடத்தைகளைக் கற்றுக் கொள்கிறது' என குழந்தைக் கல்வியியலாளர் 'மாரியா மொன்ரிசோரி' குறிப்பிடுகிறார்.

ஆளுமைகள், பண்புகள், நன்னடத்தைகள் என்பன இப்பருவத்திலிருந்தே உருவாக்கம் பெறுகின்றன என குழந்தை ஆய்வாளர்கள் கூறுகின்றனர். குழந்தைகளுக்குக் கடத்தப்படும் சமூக விழுமியங்கள் அவர்களிடம் நீண்டகாலம் நிலை பெறுகின்றன என்பது அவர்களது ஆய்வுகள் மூலம் வெளிக்கொணரப்பட்டுள்ளன. முன் குழந்தைப் பருவத்தில் முதல் மூன்று வயதில் ஏற்படுகின்ற நல்ல மாற்றம் எதுவாயினும், அது நீண்டகாலப் பயனை ஏற்படுத்தவல்லது. இவ்விளம் வயதில் நல்ல அனுபவத்தை அளிக்கும் நிகழ்வுகள் அவர்களிடம் வாழ்நாள் நீடித்த விளைவை ஏற்படுத்தவல்லன. இவ்வயதில் குழந்தைகளுக்காகச் செலவிடும் வளங்கள் அனைத்தும் நீண்டகாலப் பயனை அளிப்பதாகவும், அவை தவிர்க்கப்படும் போது பிரச்சினை ஏற்படுவதாகவும் ஆய்வுகளும் அனுபவங்களும் தெரிவிக்கின்றன.

குழந்தைகளிடம் அவர்களின் தனியான ஆற்றல்கள் மலர்வதற்குச் சந்தர்ப்பங்கள் வழங்கப்பட வேண்டும். அவர்களுக்கு வழிகாட்டுவது ஆசிரியர்களின் கடமையாகும். இது மிகக் கவனமாகத் திட்டமிடப்பட்ட செயற்பாடுகள், விளையாட்டுக்கள், அனுபவங்கள் என்பன மூலம் ஏற்படுத்தப்படல் வேண்டும். எதுவும் குழந்தைகளிடம் திணிக்கப்படக் கூடாது. திணிக்கப்படுபவை சீரணமாகாததுடன் எதிர்பார்த்த நல்ல விளைவையும் கொணரமாட்டா.

கல்வியென்பது குழந்தைகளின் விருப்பங்கள், நாட்டங்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டதாக அமைய வேண்டும். திணிக்கப்படுமானால் அவர்களின் தனியாற்றல்கள் அழிக்கப்பட்டு விடும். அத்துடன் கல்வியும் கவர்ச்சியற்றதாகிவிடும். குழந்தைகளுடன் கலந்து பழகக் கிடைக்கும் சந்தர்ப்பம் பிள்ளையின் ஆளுமையை வளர்க்கும். அவர்களது சமூகத்திறனை வளர்க்கவும் உதவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைகளின் முதலிரு ஆண்டுகளை ஆய்வு செய்தவர்கள் பல உண்மைகளை வெளிக்கொணர்ந்தார்கள். குழந்தையின் வாழ்க்கைக் காலத்தில் இக்காலப்பகுதியிலேதான் ஒரு புதிய பாதை ஆரம்பிக்கிறது என அவர்கள் கருதுகின்றனர். குழந்தைகளிடம் நாம் கற்பதற்குப் பல உள்ளன. இதனைப் பலர் கருத்திலெடுப்பதில்லை. பேராசிரியர் ஒரு குழந்தைக்குக் கற்பிக்கிறார் என்பதற்கு மாறாக, குழந்தையே பேராசிரியர் ஒருவருக்குக் கல்வியூட்டுகின்றதென்பது முற்றிலும் உண்மை. இது ஏற்றுக் கொள்வதற்குச் சற்றுக் கடினமாகவிருப்பினும், குழந்தை உள்வாங்கும் சக்தியுள்ளது என்பதும், அது தனக்குத்தானே கற்பித்துக் கொள்கிறது என்பதும் உண்மை. குழந்தை பற்றிய இவ்வுண்மைகள் வெளிவந்தபோது, வாசிப்பும் எழுத்தும் ஆரம்பப் படிகள் என்ற கருத்தும், ஆறு வயதிலேதான் குழந்தையின் கல்வி ஆராம்பமாகிறது என்பதும் மறையத் தொடங்கின. நவீன கல்வி எண்ணக்கருவோ, கருவிலேயே கல்வி தொடங்குகிறது என்பதற்குச் சார்பாயுள்ளது.

பெஸ்டலொசி குழந்தையை ஒரு விதையாகக் கருதினார். விதைக்குள் எதிர்காலத்தில் பெருமரமாகும் ஆற்றல் சிறுவடிவில் உள்ளது போல, பிற்காலத்தில் வெளிவர வேண்டிய பேராற்றல்கள் குழந்தையிடம் உள்ளுறைந்து கிடக்கின்றன என அவர் கருதினார். இக்கருத்துக்குச் சார்பானதாக புரோபலின் 'குழந்தைப் பூங்கா' அமைந்தது. இதை வலியுறுத்துவதாக மொன்ரிசோரியின் கருத்தும் அமையக் காண்கிறோம். 'குழந்தை தொடர்பாக நான் வலியுறுத்திக் காட்டுவது யாதெனில், அதனிடம் பாரிய திறமை உள்ளது என்பதும், அது முன்னெப்போதும் கண்டறியப்படாதது என்பதுமாகும்' என்பது அவரின் கருத்தாகும். குழந்தை அறியப்படாத மனிதனாக விளங்குகிறது. மனிதனானவன் குழந்தை வடிவத்தில் உலகில் தோன்றுகிறான். குழந்தையானது, ஒளி பொருந்திய எதிர்காலத்தினை நோக்கி எமக்கு வழிகாட்டக் கூடிய ஆற்றலைத் தன்னுள் அடக்கியதாக விளங்குகிறது. மாரியோ மொன்ரிசோரியின் கருத்துப்படி குழந்தையின் முதலிரு ஆண்டுகளும் அதிமுக்கியமானவை. சிறிய குழந்தைகள் இயற்கையான உள ஆற்றல்கள் பொதிந்தவை என்பதை அண்மைக்கால ஆய்வுகள் பலவும் காட்டுகின்றன. பூமியில் மனித வாழ்வு ஏற்பட்ட காலத்திலிருந்தே இவ்வாற்றல்கள் அமுக்கி வைக்கப்பட்டனவாக இருந்து வந்துள்ளன. குழந்தைப் பருவம் செழுமைமிக்கது. கல்வியின் ஒவ்வோர் அம்சத்திலும் இவ்வாற்றல் பயன்படுத்தப்படல் வேண்டும். கல்வியின் மையமாக விளங்கும் மனிதன் பல்கலைக்கழகத்திலும், கல்லூரியிலும் மட்டும் அபிவிருத்தியடையவில்லை. அவனது மன வளர்ச்சி பிறப்பில் தொடங்கி முதல் மூன்றாண்டுகளில் பாரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவில் வளர்ச்சி அடைகின்றது. ஓர் ஆத்மா உலகிற்கு வருவதற்காகத் தன்னைத் தசையுடன் இணைத்துக் கொள்கிறதெனப் புதிதாகப் பிறந்த குழந்தை கருதப்படல் வேண்டும். குழந்தையானது விளங்கப்படாத ஒன்றாக - கண்டறியப்படாத ஒன்றாக இன்று பல்வேறு இடங்களிலும் காணப்படுகிறது. இவ்விடத்தில் முன்பள்ளி ஆசிரியர்களின் பங்கு மிகவும் பிரதான இடத்தைப் பெறுகிறது.

## முன்பள்ளி ஆசிரியர்கள்

பொதுவாக நல்லாசிரியரின் இலக்கணத்தை நன்னூல் கூறுகிறது,

"குலன் அருள் தெய்வம் கொள்கை மேன்மை
கலைபயில் தெளிவு கட்டுரை வன்மை
நிலம், மலை, நிறைகோல் மலர் நிகர் மாட்சியும்
உலகியல் அறிவோடு உயர்குணம் இணையவும்
அமைபவன் நூலுரை ஆசிரியனே"

இதிலே முன்பள்ளி ஆசிரியனுக்குரிய இயல்பாக, 'நிலம், மலை, நிறைகோல், மலர்' என்ற நான்கையும் எடுத்துக் கொள்ளலாம். அகழ்வாரைத் தாங்கும் நிலம் ஆசிரியரின் பொறுமைக்கு நிகரானது; மலைபோல அசையாத மனவலிமை, எதையும் தாங்கும் இதயம் ஆசிரியனுக்கு வேண்டும்; துலாக்கோல் போல எப்பக்கமும் சாயாத நடுநிலைமை ஆசிரியனுக்கு வேண்டும். இறுதியாக, ஆசிரியன் மலர் போன்று குழந்தைகளால் மட்டுமல்ல சமூகத்தாலும் விரும்பப்பட வேண்டும். மலர் ஒரே நாள் வாழ்ந்தாலும் தன்னைப் பிறரின் இன்பத்துக்காக அர்ப்பணித்து விட்டு அழிகிறது. அந்தக் கடமையுணர்வும் பிறர் நலன் பேணலும், ஆர்ப்பணிப்பும் ஆசிரியனுக்கு அவசியம். இவை பொதுவான மற்றைய ஆசிரியர்களை விட முன் பள்ளியாசிரியனுக்கு இன்றியமையாதவை என்பதை எமது பாரம்பரியச் சான்றோரின் காற்சுவட்டின் வழியில் நாம் உணர்தல் வேண்டும்.

சாதாரண ஆசிரியர் ஒருவரை முன்பள்ளி ஆசிரியராக மாற்றியமைப்பது பகீரதப் பிரயத்தனமாகும். அது சாத்தியமற்றது. அதை விட முன்பள்ளி ஆசிரியர்களைப் புதிதாக உருவாக்குவது இலகுவானது; பயன்மிக்கது. முன்பள்ளி ஆசிரியர் குழந்தையை நன்கு ஏங்கிக் கொள்பவராக இருத்தல் வேண்டும். தனது செயற்பாடுகளின் மூலம், தன்னை வெளிக்காட்டிக் கொள்ளும் குழந்தையை நன்கு தெளிவாக விளங்கும் ஆற்றல் அவருக்கு இருத்தல் வேண்டும். முன்பள்ளி ஆசிரியரது இப்பணியில் மூன்று விருத்திக் கட்டங்கள் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. முன்பள்ளி ஆசிரியர் சூழலின் பாதுகாப்பாளர் என்ற வகையில், சூழலிலிருந்தே தீர்வும் கிடைக்கும் என்ற எண்ணத்துடன் பிரச்சினைக் குழந்தையால் ஏற்படும் கஷ்டங்களுக்குத் தனது உள்ளத்தில் முதலிடம் கொடுக்காமல் மனதை ஒருமுகப்படுத்திக் கொள்ள வேண்டும். குழந்தையின் சிந்தனையைத் திசைதிருப்பும் கவர்ச்சி இங்குதான் உள்ளது. கற்பிக்கும் உபகரணங்கள் அழகாகவும், கவர்ச்சியானதாகவும், திருத்தமானதாகவும், குறைபாடுகளற்றதாகவும் இருக்குமானால், அது பிள்ளைக்குப் புதியதாகவும், முழுமை பொருந்தியதாகவும், கையாள்வதற்கு ஆயத்தமானதாகவும் இருக்கும். சூழலின் ஓர் அங்கமான முன்பள்ளி ஆசிரியர் தன்னைக் கவர்ச்சியுள்ளவராக, அழகானவராக, இளமைத் தோற்றமுடையவராக, பெருந்தன்மை மாண்புமுள்ளவராகக் கொள்ளல் அவசியம். இது ஓர் இலட்சிய நிலையாகவும், எப்பொழுதும் பூரணமாக அடைய முடியாததாகவும் இருக்கலாம். ஆயினும் ஆசிரியர் தன்னை உயர்ந்த ஒருவராகக் கருதிக் கொள்ள வேண்டும். குழந்தைகளை விளங்கிக் கொள்ளும் பொறுப்பும், அதற்கு மதிப்பும், கணிப்பும் கொடுக்கும் பொறுப்பும் தனக்கு உள்ளது என்பதை ஆசிரியர் விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். ஆசிரியர் தனது தொழிற்பாட்டை விங்கிக் கொண்டு குழந்தைகளை மகிழ்ச்சியான சூழலில் வைத்துக் கொள்ளக் கூடியதாகச் செயற்பட வேண்டும். தனது தாய் குழந்தைக்கு எவ்வாறு அழகானவராக, அன்பானவராகக் காணப்படுகிறாரோ, அதேபோன்றுதான் முன்பள்ளி ஆசிரியரைக் குழந்தை காணுதல் வேண்டும்.

2. ஆசிரியர் குழந்தையை வசீகரிப்பவராயிருத்தல் வேண்டும். ஏனெனில், முன்பள்ளிக் குழந்தைகள், இன்னும் ஒழுங்குபடுத்தப்படாதவராகவும், நோக்கமின்றித் திரியும் பாங்கினராகவுமே இருப்பர். இதனால் ஆசிரியர்கள் அவர்களைத் தம்பால் கவரக்கூடியவர்களாக, வசீகரிக்கும் தன்மையுள்ளவர்களாக விளங்குதல் அவசியம். குழந்தைகளின் கவனத்தை ஈர்ப்பதற்குத் தண்டனை தவிர்ந்த வேறெந்த முறையையும் கையாளக்கூடியவராக இருத்தல் வேண்டும். குழந்தைகள் பிற குழந்தைகளுக்குத் தொந்தரவு கொடாமலிருக்கப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

3. ஆசிரியர் குழந்தைகளது ஆர்வத்தையும் நாட்டத்தையும் தட்டியெழுப்பிய பின்னர் அவர் தன்னைப் பின்னணியில் நிலை நிறுத்திக் கொள்ள வேண்டும். வேறெவரும் அனாவசியமாகத் தலையிடாமலும் தன்னைப் பார்த்துக் கொள்ள வேண்டும். அவர்களை அளவுமீறிப் பாராட்டுதலும் தீங்காக அமையலாம். குழந்தை தான் கையாளும் சாதனமொன்றை விடுத்து வேறொன்றைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிதாகத் தெரிந்தெடுக்கும் நிலையில், அதனைப் பாராட்டி உற்சாகப்படுத்தலாம். குழந்தையோடு தனது மகிழ்ச்சியையும் பகிர்ந்து கொள்ளலாம்.

முன்பள்ளி ஆசிரியர் குழந்தைகளின் வேலைக்காரரல்லர். குழந்தைகள் தமது பணிகளைச் சுயேச்சையாகத் தாமே செய்து கொள்ள வேண்டும். இதில் ஆசிரியர் கவனமாயிருத்தல் வேண்டும். குழந்தைகள் தாமாகவே செயற்பட உதவியளித்தல் வேண்டும். குழந்தை தானாகச் சிந்தித்துச் செயற்படச் சந்தர்ப்பமும் ஊக்குமுமளித்தல் வேண்டும். ஆன்மீகச் சேவை புரிய விரும்பும் ஆசிரியர்களுக்கு இது ஒரு கலையாக அமையுமென மொன்ரிசோரி குறிப்பிடுகிறார். ஆன்மாவின் வெளிப்பாடுகளை வரவேற்பது முன்பள்ளியாசிரியர்களின் கடமையாகும். குழந்தைகளிடமிருந்து பெறக்கூடிய ஆன்மார்த்தப் பெருமகிழ்வே உண்மையான பேரின்பவீடாகும்.

பல முன்பள்ளிக் குழந்தைகள் தங்கள் ஆசிரியர்களிடம் கூடிய அன்பு காட்டுகின்றனர். குழந்தை தனது குடும்பத்திற்கு வெளியே முதலில் பற்றுக் கொள்ளும் ஆளாக முன்பள்ளி ஆசிரியர் விளங்குகின்றார். ஆசிரியருடனான இத்தொடர்பு பாடசாலை தொடர்பாகக் குழந்தையின் மனப்பாங்கு விருத்திக்கு முக்கிய அடிப்படையாக அமைகின்றது. அன்பு, உதவி, ஏற்றுக் கொள்ளல், மன்னித்தல் என்பன ஆசிரியரைப் பொறுத்து முக்கியமானவை. இப்பண்புகள் இனிய மெல்லிய குரல், கண்தொடர்பு, பிள்ளையைப் பெயர் சொல்லி அழைத்தல், அரவணைப்பு, புதிய செயல்களில் ஊக்குவித்தல், கவனமாகச் செவிமடுத்தல், குழந்தையின் பெற்றாருடன் உடன்பாடாகத் தொடர்பாடல் என்பவற்றால் வெளிப்படுத்தப்படல் வேண்டும்.

குழந்தையின் கற்றல், அதன் விளையாட்டு என்பவற்றிற்கு ஆசிரியர் உதவியாளராக விளங்க வேண்டும். ஆசிரியரின் கட்டாயப்படுத்தலின்றி அவர்களின் செயற்பாடுகளையும் விளையாட்டுக்களையும் இயல்பாக மாற்றிக் கொள்ள உதவி செய்ய வேண்டும். பிள்ளைகள் கண்டறிவதற்காக உடன்பாடான வழிகாட்டல்களையும் திறந்த வினாக்களையும் கொடுத்தல் வேண்டும். போட்டிச் செயற்பாடுகளைத் தவிர்த்துக் கூட்டுச் சேர்ந்து செயற்படல் போன்றவற்றை ஊக்குவிப்பவராக ஆசிரியர் இருக்க வேண்டும். முன்பள்ளி ஆசிரியர் எப்பொழுதும் நெகிழ்வான நடத்தையைப் பின்பற்றல் வேண்டும். அறிவுறுத்தல், அவதானித்தல் என்பவற்றை வசதிக்காக மேற்கொள்ளும் பொழுதும் கற்றல் செயல்முறைகளுக்கு ஆசிரியர்கள் உதவி புரிதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொமெனியஸ், ரூசோ, பெஸ்டலொசி, புரோபல், ஜோன் டியூவி, மொன்ரிசோரி, ஜீன் பியாஜே போன்ற கல்வியியலாளர்கள் பலர் குழந்தைப் பருவத்தினரின் கல்விக்குப் பெறுமதிமிக்க பங்களிப்புச் செய்துள்ளனர். அவை பற்றி முன்பள்ளி ஆசிரியர்கள் அறிந்திருத்தல் வேண்டும். அந்தக் கருத்துக்களின்படி ஒழுகுதலும் வேண்டும். அப்போதுதான் குழந்தைகளின் இயல்புகளை அறிந்து, அவர்களின் தனியாள் வேறுபாட்டைக் கருத்திற் கொண்டு குழந்தைகளுக்கு உதவ முடியும்.

நாட்டிற்கான நற்பிரசைகளை உருவாக்கும் ஆசிரியரின் மகத்தான பங்களிப்பு முன்பள்ளிகளிலேயே தொடங்குகிறது. இங்கு பணியாற்றும் ஆசிரியரது செயற்திறனிலேயே குழந்தைகளின் உயர்வு தங்கியுள்ளது. முன்பள்ளியாசிரியர்களது பயிற்சியும் இன்று ஒரு விசேட நிபுணத்துவம் வாய்ந்த துறையாக வளர்ந்து வருகிறது. இவர்களுக்கான பயிற்சிகள் சிறப்புத் தேர்ச்சி பெற்ற கல்வி வல்லவர்களால் நடத்தப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வாறு முன்பள்ளி ஆசிரியர்களாகப் பயிற்சி பெறும் ஆசிரியர்களும் எல்லாவற்றிற்கும் மேலாக முன்பள்ளிக் குழந்தைகளைப் பொறுத்து ஒன்றை நினைவில் வைத்திருத்தல் வேண்டும். அது எதுவெனில், தாம் குழந்தைகளுக்கு வலிந்து கற்பிக்கும் கடமைக்குரியவர் அல்லர் என்பதாகும். இதைச் சரியாகப் புரிந்து கொள்ளாமையாலேயே பாலர் பாடசாலைகளில் 'குருவியின் தலையில் பனங்காயைச் சுமத்தும்' வேலை இன்னும் நடந்து கொண்டிருக்கிறது. முன்பள்ளி ஆசிரியர் எழுத்தையோ, எண்ணையோ, வாசிப்பையோ, வேறெந்தப் பாடத்தையோ கற்பிக்கும் ஆசிரியரல்லர். அவர் சிறு பூஞ்செடிகள் வளரும் தோட்டத்தைக் காத்துவரும் கருணை மிக்க தோட்டக்காரர். செடிகளின் செழிப்பான வளர்ச்சிக்காகத் தேவையான தருணம் தோறும் அளவான பசளையிட்டு நீர் பாய்ச்சி, அவற்றின் வளர்ச்சி கண்டு பூரித்து எந்தத் தீங்கும் வெளியிலிருந்தோ உள்ளிருந்தோ நேராமல் பாதுகாக்கும் பொறுப்புடையவர். செடிகள் தாமாகவே வளரக்கூடியவை. அவற்றை வளர வைக்கும் வேலை தோட்டக்காரருடையதல்ல. அவை தாமாகவே இயற்கையாக வளரக்கூடியவை. இதை உணராமலேதான் இன்று 'குருவி தலையில் பனங்காய் சுமத்தப்படுகிறது'. இதற்கு உதாரணம் இன்று நகர்ப்புறத்துப் பாலர் பாடசாலைகளில் இடம்பெறும் ஆங்கில மோக மனனப்போட்டி. குழந்தை சிறுவயதில் கற்கக் கூடிய அபரிமிதமான ஆற்றல் உள்ளதுதான். தாய்மொழி தவிர, வேறு சில மொழிகளையும் குழந்தை கற்க முடியும்தான். அதற்காக அளவு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த பாரத்தை, அதன் தனியாள் வேறுபாட்டைச் சற்றேனும் கருதாமல் சுமத்த முடியுமா? ஐந்தாம் வகுப்புக்குரிய கணக்கை குழந்தைக்குக் கற்பிக்க முடியுமா? குழந்தையின் முதிர்ச்சி பற்றிச் சிந்திக்க வேண்டாமா? இதைப் பெற்றோர்கள் உணராதது விந்தையில்லை. ஆனால் முன்பள்ளி ஆசிரியர்கள் உணராதிருக்க முடியாது. எந்தக் காரியமும் அளவிறந்த துரித கதியில் ஆரம்பிக்கப்பட்டால் இறுதியில் அது இலக்கை அடைவதில் பின்நிற்கிறது. துரிதகதி எந்த உயிரியைப் பொறுத்தும் தோல்வியையே சந்திக்க வைக்கிறது. 'மெல்லெனப் பாயும் தண்ணீர் கல்லையும் உருட்டிப் பாயும்' என்ற பழமொழியும் இதற்குப் பொருந்துகிறது.

ஆகவே, குழந்தைகள் ஆற்றல் மிகுந்தவர்கள் என்பதற்காக அளவற்ற பாரத்தைச் சுமத்துவது குழந்தையின் எதிர்காலத்தையே பொய்ப்பித்து விடும் என்பதை ஆசிரியர்கள் உணர்தல் வேண்டும். ஆகவே, முன்பள்ளி ஆசிரியரின் பணி குழந்தைகளுக்குக் கற்பிப்பதல்ல; அவர்கள் தாமாகவே, தமது விருப்பப்படி, சுதந்திரமாக, விருப்பமானதைக் கற்றுக் கொள்ளக்கூடிய சூழ்நிலையை அமைத்துக் கொடுத்தலாகும்; அதற்கு அவர்களுக்கு உதவுவதாகும். அவர்களுக்கு எந்த ஊறும் ஏற்படாமல் பாதுகாப்பதாகும். முன்பள்ளிக் குழந்தைகள் வகுப்பறையில் கற்கிறார்கள் என்பதை விட அவர்கள் பொருத்தமான சூழ்நிலைகளில் எதிர்காலக் கல்விக்கு ஆயத்தமாகிறார்கள் என்பதே முற்றிலும் சரியானதும் உண்மையானதுமாகும். இதை முன்பள்ளி ஆசிரியர்கள் தெளிந்து கொள்வார்களானால், குழந்தைகள் தாமாக, தமக்கு விருப்பமான செயற்பாடுகள் மூலம் கற்பதற்கான சாதனங்களை ஒழுங்கமைத்து, பொருத்தமான சூழ்நிலைகளையும் அமைத்துக் கொடுப்பார்கள். முன்பள்ளிக் குழந்தைகளுக்கு வேண்டியது மகிழ்ச்சி, மகிழ்ச்சிக்கேதுவான விளையாட்டு, மகிழ்ச்சி தரும் ஆடல், பாடல், நடித்தல், கதை சொல்லல் முதலியன. இவற்றின் மூலம் பல்வேறு அனுபவங்களைப் பெறுகிறார்கள். அனுபவம் மூலம் கல்வி பெறுகிறார்கள். புலன்கள் மூலம் கல்வி பெறுகிறார்கள். செயல்கள் மூலம் கற்கிறார்கள். இயல்பூக்கங்களுக்கேற்பக் கற்கிறார்கள். முதிர்ச்சிக்கேற்பக் கற்கிறார்கள். இவ்வகையான இயற்கையான கற்றல் அனுபவங்கள் குழந்தைக்கு முதலாம் வகுப்பில் நுழைந்து முறைசார் கல்வியில் கால் வைப்பதற்கான ஆயத்தத்தை - தயார் நிலையை அவர்களிடம் ஏற்படுத்த வேண்டும். இதை மனத்திலிருத்தி - மறக்காமல் செயற்படும் பொறுப்பு முன்பள்ளி ஆசிரியரைச் சார்ந்ததாகும். மீண்டும் வலியுறுத்துவோம். முன்பள்ளி ஆசிரியர்களே! நீங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தியமாகக் கற்பிக்க வேண்டாம்; குழந்தைகளை எதிர்காலக் கல்விக்காக ஆயத்தப்படுத்துங்கள். அது போதும்.

முன்பிள்ளைப் பருவக் கல்வி பற்றி இதுவரை நாம் சிந்தித்தவை எவை? - கல்விக்காகக் குழந்தையல்ல, குழந்தைக்காகவே கல்வி. முன்பிள்ளைப் பருவம் என்பது பிறப்பு தொடக்கம் ஐந்து வயது பூர்த்தியாகும் வரையான குழந்தைப் பருவமே. இன்றைய காலகட்டத் தேவையைப் பொறுத்து முன்னுரிமை பெறுவது முன்பிள்ளைப் பருவக் கல்வியாகும். முன்பிள்ளைக் கல்விக்குப் பல கல்வியியலாளர்கள் தமது பங்களிப்பைச் செய்திருக்கிறார்கள். குழந்தையின் விருப்பம், உடல், உளநிலைகள், நாட்டம், தனியாள் வேறுபாடுகள், முதிர்ச்சி என்பவற்றிற்குப் பொருந்துமாறு குழந்தை தாமாகக் கற்கக் கூடியதான சூழ்நிலையை அமைத்துக் கொடுப்பதே முன்பள்ளிக் கல்வியின் அடிப்படையாகும். முன்பள்ளி ஆசிரியரின் கடமை கற்பித்தலல்ல; தோட்டக்காரனாகச் செயற்படுதலே. முன்பள்ளிக் குழந்தைகளுக்கு ஆசிரியர் கற்பிக்க வேண்டியதில்லை. அவர்கள் தாமாகக் கற்கக் கூடிய சாதனங்களையும் சந்தர்ப்ப சூழ்நிலைகளையும் அமைத்துக் கொடுத்தாலே போதும். குருவியின் தலையில் பனங்காயைச் சுமத்த வேண்டாம். எதிர்காலக் கல்விக்கான ஆயத்தமே முன்பிள்ளைக் கல்வி. இவற்றை முன்பள்ளி ஆசிரியர்கள் மனத்திலிருத்திச் செயற்படுவதே எதிர்பார்க்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11

# ஜோன் டியூவியும் சுவாமி விபுலாநந்தரும்

## அறிமுகம்:

ஒப்பிட்டு ஆயும் பண்பு இன்று கல்விப் புலத்தில் மட்டுமல்ல, சகல கற்கைப் புலங்களிலும் முக்கிய பண்பாக வளர்ச்சியடைந்துள்ளது. இரண்டு கல்வி முறைமைகளை ஒப்பிட்டு நோக்கி அதனை ஆராயும் பண்பை ஒப்பீட்டுக் கல்வியியல் என்கின்றோம். அது ஒரு பெரிய துறையாக வளர்ச்சி கண்டுள்ளது. கீழைத்தேய, மேலைத்தேய தத்துவ சாஸ்திரங்களை ஒப்பிடும் பண்பும் வளர்ச்சி கண்டுள்ளது. சமயங்களை ஒப்பிட்டு ஆராய்தல், விளக்குதல் போன்ற அம்சங்கள் ஒப்பீட்டுச் சமயக் கற்கையாக வளர்ச்சி கண்டுள்ளது. அந்த வகையில், இரு தத்துவஞானிகளது சிந்தனைகளை ஒப்பிடுவது ஒப்பீட்டுக் கல்வியைச் சாரும். இதனால், ஒப்பிட்டு நோக்கி வரும் மாணவர்களது சிந்தனைத் தெளிவை அளவிட முடியும். இந்த வகையில், அமெரிக்காவைப் பிறப்பிடமாகக் கொண்டு அமெரிக்கக் கல்வி வளர்ச்சிக்கும், உலகின் ஏனைய பல நாடுகளின் கல்வி வளர்ச்சிக்கும் பங்காற்றிய பயன்பாட்டுவாதக் கல்வித் தத்துவஞானி ஜோன் டியூவியின் சிந்தனைகளையும், கீழைத்தேயப் பாரம்பரியங்களில் வளர்ந்து, மேல்நாட்டுக் கல்வியையும் கீழைத்தேயக் கல்வியையும் பெற்று கல்வி, சமூகம், மொழி, கலாசாரம் என்பனவற்றின் வளர்ச்சிக்குத் தொண்டாற்றிய விபுலானந்த அடிகளது சிந்தனைகளையும் ஒப்பிட்டுப் பார்க்க முயல்வது இருவரது ஆளுமையிலும் காணப்படும் விசேட அம்சங்களை அறிய உதவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாழ்க்கைச் சுருக்கம்:**

அமெரிக்க தத்துவஞானியும், உளவியலாளரும், செயல்சார்ந்த ஆசிரியரும், 20ம் நூற்றாண்டின் பிரபல சிந்தனையாளருமான ஜோன் டியூவி (1859-1952) அமெரிக்காவில் உள்ள வேமென்ரில் உள்ள பேளிங்கரன் எனும் இடத்தில் பிறந்தார். அவரது குழந்தைப் பருவமும் இளமைப் பருவமும் 19ம் நூற்றாண்டு நியூ இங்கிலாந்துப் பட்டினத்தில் கழிந்தது. இவரது தந்தை ஆக்கிபால்ட் டியூவி, ஒரு களஞ்சியப் பொறுப்பாளராகப் பணியாற்றினர். குடும்பத்தில் உள்ள பிள்ளைகளும் குடும்பப் பொறுப்புக்களைப் பகிர்ந்து கொண்டனர். இவரது தாய் லுசினா, விழுமிய மற்றும் ஒழுக்கக் கல்வியை சமயக் கல்வியிலும் பார்க்க அழுத்திக் கூறினார். நன்கு கற்ற இவர், ஆராய்ச்சி மனப்பாங்கு கொண்டவர். பேளிங்கரனில் சமூக அறிவியல் வாழ்வில் பங்கு கொண்டவர். பொதுவாக டியூவி கிராமியச் சூழலில் வளர்க்கப்பட்டவர்.

சுவாமி விபுலானந்தர் (1892-1947) கிழக்கு மாகாணத்தின் காரைதீவில் 'மயில்வாகனம்' எனும் பெயரில் சாமித்தம்பி-கண்ணம்மை தம்பதியினருக்கு மகனாக, 1892ல் பிறந்தார். இவர் பிறந்த கிராமம் இயற்கை வனப்புக் கொண்டது. ஆரம்பக் கல்வியைத் தமது கிராமத்தில் பெற்றுக் கொண்டார். மயில்வாகனம் ஆரம்பக் கல்வியை கல்முனை மெதடிஸ்த மிஷனின் வெஸ்லி ஆங்கிலப் பாடசாலையிலும், மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியிலும், உயர் கல்வியை மட்/புனித மிக்கேல் கல்லூரியிலும் கற்றார். 1911ல் ஆசிரியர் பயிற்சி பெற்று ஆசிரியப் பணியை 1913ல் ஏற்றார்.

இருவரது வாழ்விலும் தாயின் செல்வாக்கு ஏற்பட்டது. கண்ணம்மை இந்துப் பாரம்பரியமும் கண்ணகித் தெய்வத்தின் பால் பக்தியும் கொண்டவர். இதனால் மயில்வாகனனார் கண்ணகி அம்மனிடம் ஈடுபாடு கொண்டவராக வளர்ந்தார். கிராமியச் சூழல் அவரிடம் செல்வாக்குச் செலுத்தியது. மயில்வாகனம் லண்டன் பல்கலைக்கழகத்தில் B.Sc பட்டம் பெற்றார். மதுரை தமிழ்ச்சங்கப் பண்டிதர் பட்டமும் பெற்றார். டியூவி '8ஆவது வயதில் பல்கலைக்கழகம் சென்றார்.

**வாழ்க்கைத் தத்துவம்:**

டியூவியின் வாழ்க்கைத் தத்துவம் பல பெயர்களால் அழைக்கப்படுகின்றது; பரீட்சார்த்தவாதம், தொழிற்பாட்டு வாதம், முன்னேற்றவாதம், இவையெல்லாவற்றுக்கும் மேலாக பயன்பாட்டுவாதம். இயக்கப்பாடானதும் எப்பொழுதும் மாறிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருப்பதுமான வாழ்க்கையின் தன்மையை அவர் வலியுறுத்தினார். முடிவானது ஒன்றுமில்லை, எல்லாமே நிரந்தரமற்றது என்ற கருத்தை டியூவி கொண்டிருந்தார்.

அறிவு, வழியன்றி முடிவல்ல; நிரந்தரமான விழுமியங்கள் இல்லையென்றார் டியூவி. எல்லா விழுமியங்களும் காலம், இடம் என்பவற்றைப் பொறுத்து மாறும்.

வாழ்க்கை தொடர்பான விபுலானந்தரின் தொலைநோக்கு கீழைத்தேய, மேலைத்தேய கலாசாரங்கள், ஆன்மீகம், உலோகாயுத விழுமியங்கள், விஞ்ஞானம், வேதாந்தம் என்பவற்றின் பாற்பட்டதாக இருந்தது. மாறாக, டியூவியின் பயன்பாட்டு வாதத் தத்துவம் பரீட்சார்த்தவாதம், விஞ்ஞானம், ஜனநாயகம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டிருந்தது.

விஞ்ஞானப் பட்டதாரியான விபுலானந்தர் வேதாந்தம், சித்தாந்தம், சமணம், பௌத்தம், சாருவாகம், மீமாம்சை முதலிய தரிசனங்களைக் கற்றுத் தெளிந்தார். மேலைநாட்டுத் தத்துவங்களையும் கீழைநாட்டுத் தத்துவங்களையும் கற்றுத் தெளிந்து ஒப்புநோக்கினார். கிறிஸ்தவம், இஸ்லாம், சீக்கியம், யூதம் முதலிய சமயங்களையும் கற்றுத் தெளிந்து, வேதாந்தத்தைத் தனது தத்துவ தரிசனமாக ஏற்றுக் கொண்டார். விபுலானந்தரது கருத்துப்படி சமயத்தின் இரகசியம் கோட்பாட்டிலில்லை. செயற்பாட்டிலேயே உள்ளது என்பதாகும். கடவுளை மனிதன் ஒவ்வொருவரிடமும் காணலாம் என்றார் விபுலானந்தர். மறுபுறம் டியூவி கல்விக்கும் அனுபவத்திற்கும் எவ்வித வித்தியாசத்தையும் கண்டிலர். அவரது கருத்துப்படி, அறிவு என்பது பல்வேறு வகையான அனுபவங்களின் விளைவாகும். இயற்கை விஞ்ஞான முறைகளால் பெறப்பட்ட அறிவைத் தவிர வேறு அறிவு இல்லை என்பது டியூவியின் வாதம். முன்னமே தீர்மானிக்கப்பட்ட எந்த உண்மையையும் அவர் நம்பவில்லை. நிரந்தரமான உண்மை என்று எதையும் அவர் ஏற்றுக் கொள்ளவில்லை.

விபுலானந்தர் தெய்வீக ஆற்றலை நம்பிய போது, டியூவி அதனை நம்பாதவராகக் காணப்படுவதை அவதானிக்கலாம். மனித சக்தியில் அவர் அதிக நம்பிக்கை கொண்டிருந்தார். மனிதன் தனது சொந்த அபிவிருத்திக்கும் முன்னேற்றத்திற்கும் வழியை அமைத்துக் கொள்ள வேண்டுமென அவர் கூறினார்.

விபுலானந்தரும் டியூவியும் நாட்டினதும் சமூகத்தினதும் முன்னேற்றத்திற்காகப் பணியாற்றினர். டியூவியின் பணியும் சிந்தனைகளும் அமெரிக்க எல்லையைக் கடந்து சீனா, ரஷ்யா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலிய நாடுகளின் கல்விப் புனரமைப்புக்கும் வழிகோலியது. அவரது ஆலோசனைகளைப் பல நாட்டு அரசாங்கங்கள் நாடின.

டியூவி ஏறக்குறைய நூறாண்டுகள் (92) வாழ்ந்து தனது செயல்கள், சிந்தனைகள் மூலம் உலகக் கல்வியில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தினார். விபுலானந்தர் டியூவியைப் போன்று உலகக் கல்விச் சிந்தனையில் தாக்கம் செலுத்தாவிடினும், அவரது தத்துவநோக்கு உலகம் தழுவியதாகவே இருந்தது. விபுலானந்தரின் கருத்துப்படி மனித இனத்திற்குச் சேவை செய்தல்தான் உயரிய இலக்கு.

**கல்வி எண்ணக்கரு:**

விபுலானந்தரைப் பொறுத்தமட்டில், கல்வியென்பது அறிவைப் பெறல், ஒழுக்கத்தை வளர்த்தல், சமூகப் பண்புகளை விருத்தியாக்கல்; கல்வி என்பது, வாழ்வைக் கட்டியெழுப்புதல் என விபுலானந்தர் கண்டார். மனிதனைக் கல்வி மூலம் உருவாக்க வேண்டும் என அவர் கூறினார். தேசிய உணர்வைக் கல்வி தர வேண்டும் என விரும்பினார். தேசப்பற்று, சமயப்பற்று, மொழிப்பற்று என்பனவற்றை வளர்ப்பது அவரது கல்விச் சிந்தனையாக விளங்கியது. விஞ்ஞானக் கல்வி, மெய்ஞ்ஞானக் கல்வியின் சங்கமத்தைத் தனது பாடசாலைகளில் காண விழைந்தார் விபுலானந்தர்.

சமூகம் ஒன்று நிலைத்திருப்பதற்கு ஒரு கருவியாக உள்ளது கல்வி. சமூகம் கடந்த காலத்தில் சேமித்துக் கொண்ட ஆற்றலையும், அதன் நோக்கங்களையும் அடுத்த தலைமுறைக்குக் கடத்துவதற்குக் கல்வி கருவியாக இருக்க வேண்டும் என்ற டியூவி, தனியாளில் எல்லா ஆற்றலையும் விருத்தியாக்கும் கருவியாகவும் அது விளங்க வேண்டும் என்றார். அல்லது தனது ஆற்றலை வளர்த்துக் கொண்ட தனியாள் தனது சூழலைக் கட்டுப்படுத்தும் திறனைப் பெற வேண்டும் என்பது அவர் கருத்து. வாழ்க்கை என்பது தன்னைத் தொடர்ந்து புதுப்பித்துக் கொண்டிருக்கும் செயற்பாடாகும். டியூவியைப் பொறுத்தமட்டில், கல்வி என்பது சமூக முன்னேற்றத்திற்கும் மறுசீரமைப்பிற்குமான ஒரு கருவி. விபுலானந்தரைப் பொறுத்தமட்டில், ஆன்மீக வளர்ச்சிக்குமான கருவியாகக் கல்வி இருக்க வேண்டும். கல்வியானது கலாசாரத்தைப் பேணிப் பாதுகாப்பதாக இருக்க வேண்டும் என்பது விபுலானந்தரின் கருத்து.

இருவரும் தாம் ஸ்தாபித்த பாடசாலைகளில் தமது கல்விக் கருத்துக்களைப் பரீட்சார்த்தம் செய்தனர். மட்டக்களப்பு சிவானந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்தியாலயத்தில் விபுலானந்தர் பரீட்சார்த்தங்களை மேற்கொண்டது போல், டியூவியும் தனது ஆய்வுகூடப் பாடசாலையில் தனது கருத்துக்களைப் பரீட்சார்த்தம் செய்து, கருத்துக்களை வெளியிட்டார்.

**கல்வியின் நோக்கம்:**

பயன்பாட்டுவாதக் கல்வியியலாளன் என்ற வகையில், டியூவியின் கல்வி நோக்கங்கள் தொடர்பான பிரதான அம்சம், கல்வி நோக்கங்கள் நிரந்தரமானவையல்ல; இறுதியான கல்வி நோக்கங்கள் எதுவும் இல்லை. அவை அண்மித்த தன்மை (Proximate) கல்வி வழியாகவும் (Means) முடிவாகவும் அமைகின்றதென்பது டியூவியின் கருத்து.

விபுலானந்தரைப் பொறுத்தமட்டில், கல்வி என்பது மனிதனை உருவாக்குவது (Man making). "விழுப்பத்தைத் தருகின்ற ஒழுக்கத்தை விருத்தி செய்யுங் கல்வியே கல்வி, ஏனைய கல்வி கல்வியெனப்படமாட்டாது" (விபுலானந்தர் உள்ளம், பக்:11)

டியூவியும், விபுலானந்தரும் கல்வி தனியாளது தேவைகள், நாட்டங்கள், பிள்ளைகளின் தூண்டுதல் என்பனவற்றுக்கு ஏற்ப அளிக்கப்பட வேண்டும் என்பதில் ஒத்த கருத்தைக் கொண்டுள்ளனர். இருவரது கல்விச் சிந்தனைகளிலும் கல்வியின் செயல் சார்ந்த அம்சம் பிரதான இடம்பெறுகின்றது. கல்வி செயற்பாடுகளின் விளைவு எனக்கூறும் டியூவி, கல்வி செயற்பாடுகளினின்றும் தோன்றுகின்றது எனவும் கூறுகின்றார்.

விபுலானந்தர் தொழிற்கூடங்கள் அமைத்தல், தொழில்நுட்பக் கல்வி, வேலையின்மையைப் போக்கக்கூடிய கல்வியளித்தல் என்பனவற்றுக்கு அழுத்தம் கொடுத்தமையை, அவர் அதிபராகவும், முகாமையாளராகவும் பணியாற்றிய பாடசாலைகளில் இருந்த கல்வி முறை மூலம் அறியலாம்.

டியூவி, சமூக வினைத்திறனை அழுத்தியுரைத்தார். (Social Efficiency) இது பொருளாதார, கலாசார வினைத்திறனையும் உள்ளடக்கும். இயற்கையிலிருந்து கல்வியைக் கற்க வேண்டும். நூற்கல்வியைக் குறிப்பிட்ட காலத்திற்கு வழங்கக் கூடாது என்ற கருத்தைக் கொண்டிருந்தவர் ரூசோ. அதாவது இயற்கையிலிருந்து அனுபவம் மூலம் கற்றலே அது. டியூவியும் அனுபவக் கல்வியை மிக வலியுறுத்தினார். விபுலானந்தரும் "நம்மைச் சூழவிருக்கும் பிரபஞ்சம் எனும் தட்டினைப் படித்து நாம் அறிவினைப் பெறுதல் கூடும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனப் பயனுள்ள கல்வி எனும் கட்டுரையில் கூறுவதைப் பார்க்கின்றோம்.

இரு கல்வித் தத்துவஞானிகளும் செயல், கோட்பாட்டு மனப்பாங்கு இரண்டிற்குமிடையில் சமநிலை இருக்க வேண்டும் என்பதை ஏற்கின்றனர். செயலும் சிந்தனையும் இணைந்து செல்ல வேண்டும் என்பது இருவரதும் கருத்தாகும்.

**கற்றல், கற்பித்தல் முறைகள்:**

இரு தத்துவஞானிகளும் கற்றல் கற்பித்தல் என்பனவற்றில் உளவியல் முறைகளின் முக்கியத்துவத்தில் நம்பிக்கை கொண்டிருந்தனர். கற்றல், கற்பித்தல் முறைகளுக்கு டியூவியின் பங்களிப்பு அவருக்கு உலகப் புகழைத் தேடிக் கொடுத்தது.

விபுலானந்தர் நவீன குருகுல முறையில் நம்பிக்கை கொண்டிருந்தார். (New Curukula system) இவரது முறையில் மேலைத்தேய, கீழைத்தேய பாரம்பரியங்கள் இணைந்திருந்தன. ஆசிரியர் மாணவனைக் கல்விக்கு ஊக்குவிப்பவராயும் தன்னம்பிக்கை ஏற்படுத்துபவராயும் தன்னில் தங்கியுள்ளவராக ஆக்குவதில் கவனம் செலுத்துபவராயும் இருக்க வேண்டும். பிள்ளைகளை ஆசிரியர் வழிப்படுத்துபவராக இருக்க வேண்டும் என்பதில் விபுலானந்தர், டியூவி இருவரும் ஒத்த கருத்துடையவராகின்றனர். பாரம்பரிய முறைகளைக் கற்பித்தலில் பின்பற்றுவதை டியூவி வெறுத்தார். அனுபவம் மூலம் கற்றலையும், செயல் மூலம் கற்றலையும் இருவரும் வலியுறுத்தினர்.

**ஆசிரியரின் வகிபாகம் (Role of teacher)**

டியூவி, விபுலானந்தர் இருவருமே ஆசிரியரது வகிபாகம் பற்றி ஒத்த கருத்துக்களை உடையவராகக் காணப்படுகின்றனர். ஆசிரியர் அறிவைத் தெரிந்திருந்து அதனை மாணவர்க்குக் கொடுப்பது மட்டுமல்ல, மாணவர்களுக்கு உதவி வழிகாட்டி வளப்படுத்துபவருமாவார் என்பதில், இருவரது கருத்தும் ஒற்றுமையுடையன. ஆசிரியர் சிறந்த உளவியலாளராக இருப்பவர்; பிள்ளையின் தனியாள் வேறுபாட்டை நன்கறிந்து அதன்படி பிள்ளைக்குக் கற்பிப்பவர்; அவரது பொறுப்பிலுள்ள மாணவர் குழுவுக்கு ஏற்றபடி பலவித நுட்பங்களையும் முறைகளையும் தெரிவு செய்து பிள்ளையின் தனியாள் தேவையை மனதிற் கொண்டு கற்பிப்பவர். பிள்ளையை விளங்காதவர் ஆசிரியராக இருக்க முடியாது என்பதில் இருவரும் கருத்துடன்பாடு உடையவராகின்றனர். பிள்ளைகளுக்கு என்ன தேவை என்பதை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணரவைப்பவர்தான் சிறந்த ஆசிரியர். கல்விச் செயல்முறையில் ஆசிரியர் ஒரு சிரேஷ்ட பங்காளி (Senior partner) என்பது இருவரதும் கருத்து. டியூவி, கற்பித்தலை பொருள் விற்பனைக்கு ஒப்பிட்டு, வாங்குபவர் இல்லையாயின் ஒருவரும் பொருளை விற்க முடியாது என்று கூறி, மாணவர்களிடம் உள்ள முக்கிய பங்கை வெளிப்படுத்துகின்றார். ஆசிரியர் வழிகாட்டியும் நெறிப்படுத்துபவருமாவார் என்பதையும் சுட்டிக்காட்டுகின்றார்.

ஆசிரியர், தான் அறிந்திருப்பதையிட்டு ஒரு போதும் திருப்தியடையக் கூடாது. புதிய விடயங்களுக்காக எப்பொழுதும் தேடிய வண்ணமுள்ளவராக ஆசிரியர் இருக்க வேண்டும். தனது மாணவர்களை இலட்சியமுடையவராக ஆக்க வேண்டும். ஓர் இலட்சிய மாணவன் சமூகக் கடமையுடையவன். அவன் சமூகத்தின் சேவகன் என்பது டியூவியின் கருத்து. இதே கருத்தை விபுலானந்தரும் கொண்டிருப்பதை அவதானிக்கலாம். தான் பெற்ற கல்வி சமூகத்திற்குப் பயன்பட வேண்டும். இதற்காக அவன் தனது தாய்மொழியில் கல்வி பெற வேண்டும் என்ற கருத்தை அவர் பல இடங்களிலும் வலியுறுத்துவதைக் காணலாம்.

**கலைத்திட்ட எண்ணக்கரு:**

ஒரு தனியாளின் கல்வி பிறப்பில் ஆரம்பித்து அவரது வாழ்க்கை பூராவும் தொடர்கின்றது என்ற கருத்தில் இருவரும் கருத்தொருமித்தவர்களாக உள்ளனர். பிள்ளையின் ஒவ்வொரு வளர்ச்சிக் கட்டமும் வித்தியாசமான தேவைகள் கொண்டவை. ஆகையால் அதற்கான கலைத்திட்டம் முன்னமே தீர்மானிக்கப்பட்டதாக அன்றி, நெகிழ்ச்சியுள்ளதாக அமைய வேண்டும் என்பது இருவரதும் கருத்தாகும். இரு தத்துவஞானிகளுமே கல்வித்திட்டம் ஒருங்கிணைந்ததாக இருக்க வேண்டும் என்று கொண்டனர். பாடசாலை எல்லா அம்சங்களிலும் வெளியுலகைப் பிரதிபலிக்க வேண்டும் என்பது இதன் பொருளாகும். கலைத்திட்டம் பிள்ளையை மையமாகக் கொண்டதாக, அதன் செயற்பாடுகளை மையமாகக் கொண்டதாக இருக்க வேண்டும் என இருவருமே ஏற்றுக் கொண்டனர். இருவரும் சித்திரம், அழகியல், ஒழுக்கக் கல்வி, சமயக் கல்வி என்பன கலைத்திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியதுடன், தொழிற்பாடங்களையும் கலைத்திட்டத்தில் உள்ளடக்குவதை உறுதிப்படுத்தினர்.

விஞ்ஞானம், பொறியியல் போன்ற பாடங்களை விபுலானந்தர் பெருமளவு விரும்பினார். மேலும், உடற்கல்வி, உடல்நலக் கல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பன விபுலானந்தர் பெரிதும் விரும்பிய கலைத்திட்டப் பாடங்களாகும். இதற்கான பரீட்சார்த்தங்களையும் விபுலானந்தர் சிவானந்த வித்தியாலயத்தில் மேற்கொண்டிருந்தார். வாழ்க்கை மைய, அனுபவ மையக் கலைத்திட்டங்களை இருவரும் ஏற்றுக் கொண்டனர். கலை, கலாசாரப் பின்னணி, மக்கள் சேவை, தேசிய பாரம்பரியம், தேவைகள் என்பன இருவரதும் கலைத்திட்டச் சிந்தனையில் இடம்பெறுகின்றன. சமயக் கலைத்திட்டத்தைப் பொறுத்த மட்டில், எல்லாச் சமயங்களையும் உள்ளடக்குவதாக விபுலானந்தரின் கல்விக் கோட்பாடு காணப்பட்டது.

## ஒழுக்கக் கல்வி எண்ணக்கரு (The concept of Discipline)

இருவரும் பிள்ளைகளின் சுதந்திரம் மதிப்பளிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றனர். சுய ஒழுக்கத்தை இரு தத்துவஞானிகளுமே வலியுறுத்தினர். டியூவி தனியாள் சுதந்திரத்தையும், சமூகக் கட்டுப்பாட்டையும் அழுத்திக் கூறினார்.

ஒழுக்கம், உள்ளத்தைச் சார்ந்ததாக, சுயமானதாக இருக்க வேண்டும் என்பதை இருவரும் ஏற்றுக் கொள்கின்றனர். டியூவி ஜனநாயக இலட்சியங்களைப் பிள்ளைகளிடம் வளர்க்க வேண்டும் என்பதற்குப் போதிய அழுத்தம் கொடுக்கிறார். சகிப்புத்தன்மை, கூட்டுறவு, பிறரைக் கனம் பண்ணுதல் என்பன பிள்ளைகளிடம் பொருள் பொதிந்த முறையில் விளக்கப்பட வேண்டும். இக்கருத்துக்கள் விபுலானந்தரைப் பொறுத்தளவில், பொருந்துவதாகக் காணப்படுகிறது. இருவருமே ஒழுக்க வலிமையாகத் திணிக்கப்படலாகாது என்பதை ஏற்றுக் கொள்கின்றனர். சுயமான ஒழுக்கம் கலைத்திட்டம் மூலமாக வளர்க்கப்பட வேண்டும்.

## விழுமிய எண்ணக்கரு;

இருவரும் விழுமியங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றனர். விபுலானந்தரைப் பொறுத்தளவில், பாரம்பரியங்களும் அதனோடு தொடர்பான உயரிய பண்புகளும் எப்போதாவது புறக்கணிக்கப்படக் கூடாது; கைவிடப்படவும் கூடாது. டியூவியைப் பொறுத்தமட்டில் இறுதி விழுமியங்களெதுவும் கிடையாது. அவரைப் பொறுத்தளவில் விழுமியங்கள் காலத்திற்கேற்ப மாறுபடும். நிரந்தரமான விழுமியங்களெதுவும் இல்லை. ஆனால், அவற்றை மனிதனே உருவாக்குகின்றான். விபுலானந்தரைப் பொறுத்தமட்டில், சமயக் கல்வி விழுமியங்களின் தொகுப்பாகவும், அனுபவங்களின் ஒருங்கிணைப்பாகவும் காணப்படுகின்றது. ஆனால்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டியூவி சமயத்துக்கு முக்கியத்துவமளிக்கவில்லை. டியூவியைப் பொறுத்தளவில், அவர் குறிப்பிடுவது, மனித விழுமியங்களாகும். எனவே, அவருடைய தத்துவமான பயன்பாட்டு வாதமும் மானிடவாதமென அழைக்கப்படுகின்றது.

## முடிவுரை

ஜோன் டியூவியும், விபுலானந்தரும் சில விடயங்களில் கருத்து வேறுபாடுகள் உள்ளவர்களாகக் காணப்பட்ட போதிலும், கல்விச் சிந்தனை தொடர்பான பல விடயங்களில் ஒற்றுமைப்பாடு உள்ளவர்களாகக் காணப்படுகின்றனர். இருவரது தத்துவங்களுமே உலகம் தழுவியதாகக் காணப்படுகின்றன. டியூவி உலகக் கல்வி வளர்ச்சிக்குப் பெரும் பணியாற்றியவர். பல நாட்டு அரசாங்கங்கள் அவரை அழைத்து தங்களது கல்வியைப் புனரமைத்துக் கொண்டன. ரஷ்யா, சீனா போன்றவை உதாரணங்களாகும். அவரது சிந்தனை இன்றும் கூட கல்விச் சீரமைப்பிலும் கலைத்திட்டப் புனரமைப்பிலும் தொடர்ந்து செல்வாக்குச் செலுத்தி வருகின்றது. இதேபோல், விபுலானந்த அடிகளது கல்விச் சிந்தனைகள் அவர் வாழ்ந்த இலங்கை, இந்திய நாடுகளின் கல்விச் செயற்பாட்டிற்கும் சமூக மாற்றத்திற்கும் பங்களித்துள்ளன. சிறு பிள்ளையினது கல்வி தொட்டு, பல்கலைக்கழகம் வரையிலான அவரது கல்விச் சிந்தனைகள், இலங்கை-இந்திய சூழலுக்கு மிகவும் பொருந்தியனவாகவும் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தியனவாகவும் காணப்படுகின்றன. விபுலானந்தரது கல்விச் சிந்தனைகளை ஆராயும் போது, டியூவியினது சிந்தனைகளைக் கற்றிருந்தாரா என்பது தெரியவில்லை. இருவரும் இரு வேறு சிந்தனைப் பாரம்பரியங்களைச் சேர்ந்தவர்களாயினும் பல்வேறு ஒற்றுமைகளை அவர்களது கல்விச் சிந்தனைகளிலே அவதானிக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொல்லடைவு


அ

அடிப்படை உரிமை 43
அடைவுச் சோதனை 89
அவதானித்தல் 80,112
அறிவு நோக்கம் 26,27
அறிவின் ஒருமைப்பாடு 57
அனைத்துலகக் கல்வி 63

ஆ

ஆசிரியர் ஞானவிளக்குகள் 42
ஆடல் 114
ஆய்வுப் பாடசாலை 70
ஆராய்வூக்கம் 105
ஆளுமை 12,17,21,27,33,54,55,62, 63,65,66,67,69,72,79, 81,85,86,88,89,90,92,95, 96,99,705,708
ஆன்மார்த்தப் பெருமகிழ்வே 112

இ

இசைவாக்கம் 12,15,36,41,73, 87,89,90,92
இயல்பான ஆர்வம் 97
இயல்பூக்க மட்டம் 86
இயல்பூக்கம் 23,114
இயற்கைவழிக் கல்வி 39
இயற்கைவாதம் 38,44,45,46, 47,48,49,60
இயற்கைவிதி 45,49
இயற்கையான கல்வி 46
இரக்க மனப்பான்மை 94
இலட்சியவாதம் 61,62,63,64,65,68,69
இலட்சியம் 61

ஈ

ஈடுபாடு 24,89,92

உ

உடலியக்க வளர்ச்சி 104
உண்மை விழுமியம் 41
உணவூக்கம் 86
உயர்மட்ட அடைவு 108
உயிரியல் இயல்பு 60
உருவாக்கற் காலம் 108
உளச்சார்பு 64,90,98
உள வளர்ச்சி 41,104
உளவியல் 35,43,45,70,73,79,80, 81,82,83,84,86,87,88,89, 90,91,92,93,94,95,96,97,98, 99,100,101
உளவியல் அம்சங்கள் 57,80,81
உள்ளாற்றல் 14,15,23
உற்சாகமூட்டல் 92

எ

எதிர்மறைக்கல்வி 38,39
எல்லோருக்கும் கல்வி 20

ஒ

ஒத்திசை 83,85
ஒருங்கிணைப்புத் தத்துவம் 57
ஒருமைப்பாடு 76,77
ஒழுக்க நோக்கம் 27

க

கட்டிளைஞன் 87,92
கட்டிளமைப்பருவம் 40,41,48,84, 87,94
கண்தொடர்பு 112
கணிக்கும் ஆற்றல் 95
கல்வி உளவியல் 70,88,89
கல்வி எண்ணக்கரு 84,86,102
கல்விக் கருத்து 15,16,26,37, 41,49,72,74
கல்விக் கோட்பாடு 13
கல்விச் சிந்தனை 5,6,11,12,35,36, 45,70,77,104
கல்வித் தத்துவம் 37,70
கல்வி நிறுவனம் 5,19,73,74
கல்வி முறை 55,70
கலாசாரம் 12,15,30,35,62,63
கலைத்திட்டம் 31,39,4047,48,56,57, 64,65,69,76,77,88,97,100
கற்பனை ஆற்றல் 95
கற்றல் கற்பித்தல் 19




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கா
காட்சி பெறல் 80

கு
குடிமக்கள் 24,78
குடும்பச் சூழல் 107
குழந்தை மையக் கல்வி 56,80
குழந்தைப் பருவம் 40,43,48,94,95,
102,104,108,109,112,114
குழந்தைப் பூங்கா 67,109
குழந்தையின் தனித்தன்மை 49
குறுகிய நோக்கு 23

கூ
கூட்டு முயற்சி 54,75
கூட்டுத்தொடர்பாடல் 75

ச
சகோதரத்துவம் 43
சமகாலக் கல்வி முறை 72
சமத்துவம் 43,46
சமய நோக்கம் 28
சமுதாய உறுதி 76
சமூக அனுபவம் 72,74,76
சமூக நிறுவனம் 19
சமூக நோக்கு 24,41
சமூகப் பிரச்சினை 34,76
சமூக-மனவெழுச்சி வளர்ச்சி 104
சமூக மனவெழுச்சி 93,105
சமூக வாழ்க்கை 19,73
சர்வாதிகார நோக்கம் 30

சி
சிறப்புக் கல்வி 46
சிறார் பருவம் 48

சு
சுதந்திரம் 21,23,39,43,46,77
சுய உணர்வு 67
சுய சிந்தனை 76
சுய வளர்ச்சி 64

சூ
சூழல் 12,15,36,38,46,52,103,106,107

செ
செயற்றிட்ட முறை 59,60
செயற்படுதன்மை 54
செயலாற்றல் 25

சொ
சொற்களஞ்சியம் 106

ஞா
ஞாபகம் 39,80,81,91

த
தத்துவம் 11,13,14,15,16,18,32,33,34,
35,36,37,38,43,44,45,51,
61,63,68,70,71,77,81,87,
89,97,98,99,100,101
தற்போதைய பிரச்சினை 52
தன்னம்பிக்கைச் சக்தி 93
தன்னை உணர்தல் 14,63,64
தனியாள் வேறுபாடு 14,20,21,22,80,
82,89,90,91,100,104,113
தனியாள் வாதம் 45
தனியுதவி 92

தூ
தூண்டல் 104

தெ
தெய்வீகப் பூரணத்துவம் 14

தே
தேசிய எதிர்பார்ப்பு 25

தொ
தொகுப்பாய்வு 66
தொழில் நோக்கம் 29,30
தொழிற்கல்வி 103

ந
நடைமுறை அனுபவம் 54
நடைமுறைச் சூழல் 51
நம்பிக்கை 24,29,33,34,38,44,46,
48,52,58,66,69,77,78,80,87,91
நவீன உள்ளடக்கம் 57
நவீன கல்விப் பாதை 50
நவீன கல்விச் சிந்தனை 6,11,104
நன்னடத்தை 108

நா
நாட்டங்கள் 108

நி
நிலையான சக்தி 97

நு
நுட்பமான மனவெழுச்சி 94
நுண்ணறிவு விருத்தி 93



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுண்ணறிவு ஆர்வம் 94

நெ
நெறிப்பிறழ்வு 105

நோ
நோக்கம் 12,14,15,17,18,19,20,21, 23,24,26,27,28,29,30, 31,34,38,39,53,55,56,59,63,64, 69,72,85,96

ப
பகுப்பாய்வு 66,98,99
படைப்பூக்கம் 105
பண்பாடு 32,107
பண்புகள் 42,108,112
பயன்பாட்டு வாதம் 51,52,53,54,55, 56,57,58,59,60,67,70
பயன்பாட்டு வாதி 52,55,56,57,58,59,67,70
பரந்த நோக்கு 23
பரஸ்பர நல்லெண்ணம் 75
பரிசோதனை இயல்பு 52,60

பா
பாடல் 114
பாலியலூக்கம் 94

பி
பிள்ளை மையம் 57,77
பிள்ளைப் பருவம் 40,48,84,102,103, 104,107,114
பிள்ளையின் ஆளுமை 108

பு
புலன்வழி இயக்கம் 47
புலன்களின் வளர்ச்சி 40,105
புலனாதல் 80

பூ
பூகோளமயமாக்கம் 20

பெ
பெண்கல்வி 41
பெண்விடுதலை விரும்பி 42

பே
பேசும் ஆற்றல் 95

பொ
பொருத்தப்பாடு 35,36,55,59
பொருளாதார சுபீட்சம் 77
பொறியியல் ஆற்றல் 95

போ
போரூக்கம் 94,95
போலச் செய்யும் ஆர்வம் 94
போலச் செய்தல் 95

ம
மந்த புத்தி 89,93
மழலைச் சொற்கள் 106
மறு இசைவாக்கம் 92
மனம் 13,23,26,33,67,62,69,81, 84,88,96,98,100,102
மனவெழுச்சி 17,86,88,89,91,92, 93,94,99,101,104,105
மனித ஆளுமை 12,62,99
மனித ஆற்றல் 52
மனிதவள விருத்தி 103,104
மனிதனின் சுதந்திரம் 43
மனோபாவம் 83,91,94

மா
மானுட இயல்பு 52

மு
முடியாட்சி 21,24
முதன்மை ஆசிரிய 47,115
முழு மனித 43
முழு ஆற்ற 15
முன்பிள்ளைப் பருவம் 102,103,114

மூ
மூலவளம் 82

மொ
மொழி வளர்ச்சி 104,105,106,107

வ
வரைவிலக்கணம் 11,12,13,14,15,17

வா
வாழ்நாள் முழுக்கக் கல்வி 20

வி
விஞ்ஞான நோக்கு 76
விருப்பங்கள் 108
விளையாட்டூக்கம் 94,95
விழுமியக் கல்வி 103
வினைத்திறன் 24,25,26,30



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துணை நூல்கள்


01. Jon Wiles and Joseph Bondi (1986)
Making the Middle School Work
Ased, Aleyandriya

02. Janetw Wohlberg & Thomas C Head (1989)
Organizational Behaviour
Houghton Mifflin Company, Boston

03. Rensis Likert (1967)
The Buman Organization,
Mcgrow-Hill Book Company, New York

04. Rodtert Mecaig (1985)
The Common Wealth Case Book for Administration in Post - Secondary Schools,
Malborou House, London

05. மா.செல்வராஜா
B.Ed (Hons), M.Ed, M.Phil, PGDEM (Sri Lanka), M.Ed (Mgt & Admin) Leeds, SLEAS
கல்வி அபிவிருத்தி முகாமைத்துவம்

06. மா.செல்வராஜா
B.Ed (Hons), M.Ed, M.Phil, PGDEM (Sri Lanka), M.Ed (Mgt & Admin) Leeds, SLEAS
கல்விக் கொள்கையும் முகாமைத்துவமும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நூலாசிரியர் பற்றி...

கிழக்குப் பல்கலைக்கழகக் கல்வித் துறைத் தலைவராகப் பணியாற்றும் பேராசிரியர் மா.செல்வராஜா, பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கல்விமாணிப் பட்டத்தையும் B.Ed (Hons), கொழும்புப் பல்கலைக்கழகத்தில் கல்வி முதுமாணி (M.Ed), கல்வித் தத்துவமாணி (M.Phil) பட்டங்களையும், இங்கிலாந்து லீட்ஸ் பல்கலைக்கழகத்தில் கல்வி முகாமைத்துவம், கல்வி நிருவாகம் என்பனவற்றிலான கல்விமுதுமாணிப் பட்டத்தையும் பெற்றார். இலங்கை தேசிய கல்வி நிறுவனத்தில் பட்டப்பின் கல்வி முகாமைத்துவ டிப்ளோமாப் பட்டத்தைச் சிறப்புத் தேர்ச்சியுடன் பெற்றார். லண்டன் பல்கலைக்கழகத்தில் கல்விமுதுமாணிக் கற்கைநெறிகளுக்கான பாடவரைபு, அவற்றின் அமுலாக்கம் என்பன தொடர்பான குறுங்காலப் பயிற்சி நெறிகளையும் மேற்கொண்டார். பிலிப்பீன்ஸ், இஸ்ரேல், ஐக்கிய அமெரிக்கா, தாய்லாந்து முதலிய நாடுகளில் கருத்தரங்குகளிலும் செயலமர்வுகளிலும் பங்குகொண்டார்.

கொழும்பு டி.எஸ்.சேனநாயக்க கல்லூரி உட்பட பல பாடசாலைகளின் ஆசிரியராகக் கடமையாற்றிய இவர் கொழும்பு இந்துக் கல்லூரி, மட்டக்களப்புச் சிவானந்தா வித்தியாலயம் போன்றவற்றின் முன்னாள் அதிபருமாவார். தேசிய கல்வி நிறுவனத்தின் கல்வி முகாமைத்துவத் துறையைத் தமிழ் மொழியில் விருத்தியாக்கி அதில் முன்னோடியாக விளங்கினார்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் ஆரம்பப் பள்ளி அபிவிருத்தி, துவக்கப்பள்ளி (முன்பள்ளி) என்பவற்றிலான ஒரு நிலையத்தை கலை கலாசார பீடத்தின் கீழ் ஏற்படுத்துவதற்குப் பெரும் பங்காற்றி அதன் முதற் பணிப்பாளராகவும் விளங்கினார். இந்நிறுவனம் துவக்கப்பள்ளி (முன்பள்ளி) ஆசிரியர்களுக்கு ஓராண்டிலான டிப்ளோமா மற்றும் சான்றிதழ் பயிற்சிகளைத் தமிழ்மொழியில் நடத்தி வரும் ஒரு நிறுவனமாக விளங்குகின்றது. கல்வித்துறையில் சிறப்புக்கற்கை நெறியையும், கல்விமுதுமாணி கற்கை நெறியையும் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் ஏற்படுத்தி, கல்வித்துறையின் வளர்ச்சிக்காகப் பெரும் பங்காற்றி வருகின்றார்.

**திரு. பால சுகுமார்**
பீடாதிபதி, கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம்

ISBN 955-98684-0-3
9 789559 868408

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org